கல்கி



ALKI

10-5-1959



30
நயா
பைசா

இதோ நம் நாட்டிலேயே கிடைக்கிறது

ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் வென்றுவிட்ட சலவைப் பவுடர்!



விலை:
ரூ. 1/12 நயா பைசா
(பிரதேச வரிகள் தனி)

நீலநிற ஸர்ப் உங்கள் துணிகளின் வெள்ளைவெளேரென்ற சலவைக்கு

★ கற்பனை செய்திருக்கவே மாட்டீர்கள் அற்புத சலவைப் பவுடரான ஸர்ப் போன்று மகத்தான வெண்மை அளிக்கும் பவுடர் ஒன்றை!

★ பார்த்திருக்கமாட்டீர்கள் இதுபோன்று அற்புத நுரை கொழிக்கும் சாதனம் ஒன்றை! எத்தகைய நீரிலும் வெள்ளமெனக் கொழித்தெழும் நுரைவளம்!

★ உணர்ந்திருக்க மாட்டீர்கள் சலவை இவ்வளவு எளிதென்று! சிரமமே கிடையாது; ஊறவிட்டுக் கசக்கி அலசினாலே காரியம் ஆயிற்று!

★ அடைந்திருக்கவே மாட்டீர்கள் உங்கள் பணத்திற்கு இதுபோன்ற அற்புதமான ஈடு! உங்கள் குடும்பத்தின் சகல துணிகளின் சலவைக்கும் சாலச் சிறந்தது ஸர்ப்.

சலவை செய்து பாருங்கள்...


வெள்ளைவெளேரென்ற சலவைக்கு—ஸர்ப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

SU. 24-X29 TM

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



வாழையடி வாழை

24 காளைகள் சேர்ந்து இழுக்கக் கூடிய கனமான கலப்பைகளைப் பற்றி கடக சங்கிதை கூறுகிறது. குத்தப்மினார் அருகிலுள்ள மேரோலியில் நிற்கும் பெரிய இரும்புத் தூண் துருப் பிடிப்பதே இல்லை. ஒரே கல்லில் அமைந்த பெரும் பெருந் தூண்கள் நீண்ட தொலைவில் உள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சிறப்பையும், அற்புதமான கற்சிற்பம், கலமெருகூட்டல் முதலிய கலைத் தேர்ச்சிகளையும் அசோகர் நினைவுச் சின்னங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. இவைகளும் இவைகளைப் போன்ற கலைகளும் கலைத் தொழில்களும் மறைந்து விட்டன. ஆனால் நமது கைத்தறிக்கலை பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் மங்காத புகழுடன் நம்மிடம் நிலைத்திருக்கிறது.

- வனப்பு
- உழைப்பு
- வகைச்சிறப்பு

கைத்தறி துணிகள்

இந்தியாவின் பெருமை

DA 59/32

இன்னும் சிறிது காலத்தில் கைத்தறித் துணிகள் தாம் குறிப்பிடப்பட்டு ஏற்றுமதிக்கான முத்திரையும் இடப்படும்.

அகில இந்தியக் கைத்தறி போர்டு

ஷாகிபாக் அவுஸ், விட்டட்ரோடு, பம்பாய்-1



மலர் 18
இதழ் 41

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விகாரி ௵
சித்திரை மீ 27

"விவாதிக்க வேண்டாம்!"

நிலச் சீர்திருத்தங்கள் சரியா தப்பா என்பதைப் பற்றி யோசிக்காமலும், எதிர்க் கேள்வி கேட்காமலும், அவற்றில் பூரண நம்பிக்கை வைத்து எவ்வளவு வேகமாக முடியுமோ, அவ்வளவு வேகமாக நிறைவேற்றும்படி பாரதப் பிரதமர் நேருஜி பொது மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நேருஜியின் இந்தப் பேச்சைக் கேட்டு யாரும் வருத்தப்படாமலிருக்க முடியாது. ஜனநாயகத்தின் அடிப்படையான தத்துவமே, எவ்விஷயத்தையும் தீர ஆலோசித்து, பலா பலன்களைச் சீர்தூக்கிப் பார்த்து விட்டுப் பின் முடிவு செய்வதல்லவா ?

அதிலும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, பலப்பல எதிர்ப்புக்களை எதிர்த்து நின்று சமாளித்து வந்துள்ள ஒரு சமுதாய முறையை அடியோடு மாற்றியமைக்கும் திட்டம் வகுக்கும்போது, அதன் | பலா பலன்களை ஒரு தடவைக்கு நூறு தடவை சிந்தித்துச் செய்யவேண்டியதிருக்க "சிந்திக்கவே வேண்டாம்! நான் சொல்வதைக் கேளுங்கள் !" என்று சொல்வது நன்றாயில்லை. அதிலும் நேருஜி சொல்வது சற்றும் பொருத்தமாக இல்லை !!

ஆசிய நாடுகளில் ஜனநாயகம் தழைக்கும் என்ற நம்பிக்கையளிப்பது இந்தியாவும், அதற்குத் தலைமை வகிக்கும் நேருஜியுந்தான். உலகில், பிரதமர் நேருஜி உண்மையான ஜனநாயகவாதி என்று பெயர் எடுத்திருக்கிறார். கம்யூனிஸக் கொள்கையையும் முதலாளித்துவக் கொள்கையையும் சமதிருஷ்டியில் பார்த்து மதிக்கும் பஞ்சசீலக் கொள்கையின் ரிஷி என்று போற்றப்படும் நேருஜி உள்நாட்டில் மக்களுக்குச் "சிந்திக்காதே! எதிராகப் பேசாதே !" என்று சொல்வது, அவருடைய தகுதிக்கு ஏற்றதல்ல ! உலகம் அவரைப் பற்றி என்ன நினைக்கும் !

நிலச் ' சீர்திருத்தத்தைப் பற்றி அவர் பேசுவதெல்லாம் அனுபவத்தின்பேரில் அறிந்த விஷயங்கள் அல்ல. நடைமுறையில் கொண்டுவர முடியாது ; கொண்டு வந்தால் அவர் எதிர்பார்க்கும் பலனுக்குப் பதிலாக நேர் விபரீதமான விளைவு ஏற்படுமென்று பலரும் சொல்லும்போது அதைப் பற்றிக் கூர்ந்து யோசித்துக் காரியம் செய்ய வேண்டியது அவருடைய கடமை. உண்மை ஜனநாயகவாதி கடைப்பிடிக்க வேண்டிய முறை.

அதற்குப் பதில் "நான் பிறர் சொல்வதில் உண்மையிருக்கிறதா இல்லையா என்று யோசிக்கப் போவதில்லை. இப்போது அவகாசமில்லை. நீங்களும் யோசியாதீர்கள் ! ஏற்கனவே தீர்மானம் செய்து விட்டோம். நான் சொல்வதைக் கண் மூடிக்கொண்டு செய்யுங்கள்!" என்று பொருள்பட நேருஜி சொல்ல ஆரம்பித்துவிட்டார். இது ஏதேச்சாதிகாரப் போக்குத்தான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையைத் தொடும் விஷயத்தில் இவ்வாறு செய்யலாகாது.

'நிலச் சீர்திருத்தம்' என்ற பெயரில் செய்யப்படும் செயல்கள் எந்த விபரீதத்தில் கொண்டுவிடும் என்று அஞ்சினோமோ, அது இப்பொழுது வெறும் பேச்சளவிலே தலை தூக்க ஆரம்பித்து விட்டது. நேருஜியைப் போன்ற ஜனநாயகத் தலைவர்களையே மாற்றி ஏதேச்சாதிகார முறையில் பேசச் செய்கிறது என்றால், நாளை உண்மையிலேயே நிலங்களைச் சின்னாபின்னப் படுத்தும் பணியை மேற்கொள்ள வேண்டிய அதிகாரிகள் நாட்டை எப்படி நடத்துவார்கள் என்பதை நினைக்கவே நெஞ்சம் கூசுகிறது ! பொறுப்பாளிகளிடமிருந்து நிலங்களைப் பறித்துப் பொறுப்பற்ற மக்களின் கையில் கூட்டுறவுச் சங்கங்களையும் நாட்டின் விவசாயத்தையும் ஒப்படைத்து விட்டால் உணவுப் பொருள்களின் நிலைமை நாட்டில் எவ்வாறு இருக்கும் என்பதை நினைத்து அச்சம் கொள்கிறோம் !!

என்ன சேதி?

சென்னை மேயர்

நகர சபைகள், பஞ்சாயத்துக்கள் — இவற்றில் கட்சி மனப்பான்மைக்கே இடம் கிடையாது. அந்த அந்த ஊரின் நலனில் அக்கறை கொண்டவர்களே அங்கத்தினர்களாக வர வேண்டும் என்ற கொள்கை யுடையவர்களாகிய நாம் சென்னை நகர சபைக்குத் திரு அரசு அவர்கள் மேயராகவும் திரு சிவசங்கரன் அவர்கள் உதவி மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை வரவேற்பதில் நமக்கு எவ்வித மனச் சங்கடமுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்தப் புதிய மேயர்களின் சொற்ப கால ஆட்சியில் சென்னை நகரம் இன்னும் பல வசதிகளைப் பெற்று முன்னேறலாம் என்றே எண்ணுகிறோம்.

தி.மு.க.காரர்கள் வெறும் வாய்ப் பந்தல் போடும் வீரர்கள் என்று காங்கிரஸ்காரர்களிடையில் பெயர் எடுத்திருக்கிறார்கள். இந்த அபவாதத்தைப் பொய்யாக்கி நகரத்தின் எல்லா வகுப்பு மக்களின் நலனையும் மனத்தில் கொண்டு செயலாற்றி நற்பெயரையும் சம்பாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தி.மு.க. கட்சியின் பலம் குறைந்து போவதற்காக நகரத்துக்குத் தீமையோ நஷ்டமோ ஏற்பட வேண்டும் என்று யாரே கோருவார்கள்? அப்படிக் கோருவது மிகப் பெரிய பாதகமாகும்.



மேயர் திரு அ. பொ. அரசு



உதவி மேயர் திரு சிவசங்கரன்

மூடப்பட்ட விஷயம்

பத்திரிகை படிப்பது என்பது ஒரு பழக்கம். தினம் காலையில் குறிப்பிட்ட பத்திரிகையைப் படித்து வழக்கமானவர்களுக்கு அந்தப் பத்திரிகை யில்லா விட்டால் அன்றையப் பொழுது சரியாக விடிந்ததாகவே தோன்றாது. அன்றெல்லாம் ஏதோ ஒரு முக்கியமான பணி செய்யத் தவறி விட்டதாகவே ஒரு நினைப்பிருந்து கொண்டிருக்கும்.

இப்படி மக்களின் வாழ்க்கையில் பத்திரிகைகள் முக்கிய அம்சங்களாகி விட்டன. இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, ஆந்திரப்பிரபா ஆகிய மூன்று சென்னை தினசரிப் பத்திரிகைக் காரியாலயங்கள் மூடப்பட்டுவிட்டன. இதற்குக் காரணம் ஆராயப் புகுவது நமது நோக்கமல்ல. காரணம் ஏதாயினும் பொதுமக்களுக்குப் பெரும் நஷ்டம் விளைவித்து விட்டது. பொதுமக்களின் பேரன்புக்குப் பாத்திரமாகிய பத்திரிகைகள் மூடப்பட்டதைக் குறித்து வருந்துகிறோம்.

டாகூரின் ஜயந்தி

உலகம் போற்றும் மகாகவி ரவீந்திரநாத் டாகூரின் நூறாவது பிறந்த நாள், 1961-ம் ஆண்டு மே மாதம் வருகிறது. பாரத நாடெங்கிலும் அவ் வைபவத்தை மகத்தான விழாவாக மக்கள் கொண்டாடப் போகிறார்கள். கவியரசரின் அமர இலக்கியங்கள் பலவற்றைத் தமிழில் வெளியிட்ட பெருமை 'கல்கி' பத்திரிகைக்குப் பிரத்தியேகமாக உண்டு. இந்த வருஷம் மே மாதம் கவியின் பிறந்த நன்னாள் தொடங்கி அவரது நூற்றாண்டு நிறைவு வரை, அவருடைய வற்றாக் கருவூலத்திலிருந்து அபூர்வ இலக்கியச் செல்வங்களைத் தேர்ந்து 'கல்கி' இதழ்களில் அவ்வப்போது வெளியிட உத்தேசித்துள்ளோம். குருதேவரின் ரஸக்கடலில் முக்குளித்தவரான அன்பர் திரு த. நா. குமாரஸ்வாமி வங்க மூலத்திலிருந்து டாகூரின் கதைகளையும் காவியங்களையும் தமிழாக்கித் தர முன்வந்துள்ளார். இந்த இதழில் கவியரசரின் 'சுபதிருஷ்டி' என்ற சிறு கதையையும் 'இரு நாரியர்' என்ற கவிதையையும் நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் வழங்குகிறோம்.

பொதுமக்களும் போலீசும்

சென்னை நகரின் புதிய போலீஸ் கமிஷனராகப் பதவி ஏற்றிருக்கும் ஸ்ரீ ஆர். எம். மகாதேவன் போலீஸ் நிர்வாகத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்.

பதவி ஏற்றதும் அவர், பத்திரிகை நிருபர்களை அழைத்து, சென்னை நகரில் பொது மக்கள்—போலீஸ் உறவை வலுவாக்கச் சில புதிய திட்டங்களைக் கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளார். பொதுமக்களிடம் போலீஸ்காரர்களும், போலீஸ்காரர்களிடம் பொது மக்களும் பரஸ்பரம் மரியாதை செலுத்தி

ஒத்துழைப்பதற்குகமிஷனர் காரியாலயத்தில் தனிப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவித்திருப் பதையே குறிப்பிடுகிறோம். இந்தத் தனிப்பிரிவு - நன்கு பணியாற்றி வரும் என்று நம்புகிறோம். விளம்பரத் துறை ஒருபுறம் இருக்க, சென்னை நகரில் மிகத் தீவிர மாகவும் நல்ல முறையிலும் நிர்வாகம் நடத்தி வந்த திரு அருள் அவர்கள் புகழுக்குக் குறையாமல் பணியாற்று வார் என்று நம்புகிறோம்.



போலீஸ் கமிஷனர்
திரு ஆர். எம். மகாதேவன்

கே. பாஷ்யம் மறைவு

ஸ்ரீமான் கே. பாஷ்யம் அவர்கள் திடீரென்று மார் வலி கண்டு மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டு வருந் தாதவர்கள் கிடையாது. அவர் பிராயம் முதிர்ந்தவராயினும், பொதுநல விவகா ரங்களில் கடைசிவரையில் ஈடுபட்டு வேலை செய்து வந்தார். அவர் மறை வுக்குப் பத்து நாட்களுக்கு முன்புகூட, சென்னை லஷ்மிபுரம் இளைஞர் சங்கத்தில் ராஜாஜியின் தலைமையில் கூட்டுறவு விவசாயத்தைப் பற்றி நடைபெற்ற விவா தத்தில் கலந்து கொண்டார்.

தீவிர தேசபக்தர். காங்கிரஸில் சேர்ந்து நல்ல தொண்டாற்றியிருக்கிறார். இருபத் தேழு ஆண்டுகளுக்கு முன் அந்நியத் துணி பகிஷ்கரிப்பு இயக்கம் நடந்தபோது சென்னை போலீஸாரால் நையப் புடைக் கப்பட்டார். அவர் உயிருக்கே ஆபத்து விளைந்துவிடுமோ என்ற அச்சமே ஏற் பட்டது. பிற்காலத்தில் சென்னை சர்க்கா ரில் மந்திரியாகச் சில நாட்கள் பதவி வகித்தார். தேசப் பணியில் ஈடுபட்டு வந்தபோது கூடவே வக்கீல் தொழிலையும் செய்து வந்தார். வக்கீல் தொழிலில் முன்னணியி லிருந்தார். மற்ற வழக்கறி ஞர்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் பாத்திரராக விளங்கினார்.

அவர் கம்பெனிகள் சம்பந்தமாக ஒரு சட்ட விளக்கப் புத்தகம் எழுதியுள்ளார். அதைத் தேசம் முழுவதிலும் ஒரு ஆதாரப் புத்தகமாகப் போற்றி வருகிறார்கள் என்றால் அவருடைய சட்டப் புலமை யைப் பற்றி ஒருவாறு ஊகிக்கலாம்.

அவர் மறைவினால் சென்னை, மற்றும் ஒரு சிறந்த தேசபக்தரை இழந்தது என்பது மிகவும் துயரம் தருவதாகும். அவருடைய மனைவியாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

சங்கர ஜயந்தி

மாமுனிவர்களும், ரிஷிகளும், யோகி களும் தோன்றி தர்மத்தையும் தெய்வ பக்தியையும் குன்றாது வளர்த்து வந்த நம் புனித பாரதத்தில் பல நூற்றாண்டு களுக்கு முன் அவதரித்து அத்வைதக் கொள்கையை நிலைக்கச் செய்து ஞான ஒளியாக விளங்கிய ஆதிசங் கரரின் ஜனன தினம் மே மாதம் 12-ந் தேதி யன்று வருகிறது. புனிதமான இந் நன்னாளை ஆஸ்திகர்கள் அனைவரும் ஆண்டுதோறும் பக்தியுடன் பாரதத்தின் பல பாகங்களிலும் கொண்டாடி வருகின்றனர். தனித் தனி யாகவும் சங்கமாகவும் கோஷ்டியாகவும் விரிவாக நாடெங்கும் கொண்டாடப் படுகிறது. இந்த ஜயந்தியை யொட்டி விசேஷக் கட் டுரைகள் இந்த இதழில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆதிசங்கரரின் நாமம் என் றென்றும் வாழ்க!

நேயர்களுக்கு நற்செய்தி

தென்னகத்தில் தொழில் வளர்ச்சி அபிவிருத்திக்கு அடிப்படையாகஇருப்பது மின்சாரசக்தி. மின்சாரத்தை உபயோகிப் பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வளர்ந்துகொண்டு போகும் இத்தேவை யைப் பூர்த்தி செய்யச் சென்னை மாநில மின்சார போர்டும் பலப்பல திட்டங்களை மேற்கொண்டு உற்பத்தியை அதிகரித்து வந்திருக்கிறது. இந்த வருடம் கோடை யில் இதுகாறும் வருஷந் தோறும் கோடைகாலத்தில் இருந்து வரும் மின்சார வெட்டு இருக்காது என்று சொல்லுமளவு அபிவிருத்தி யடைந்துள் ளது. இவ்வளர்ச்சியின் பல்வேறு அம்சங் களை நேயர்களுக்கு விளக்கி வைக்கும் பொருட்டு அடுத்த வார கல்கி இதழ் விசேஷ மின்சார இதழாக வெளியிடப் படுகிறது. இதில் மாநில மின்சார வளர்ச் சியைப் பல கோணங்களிலிருந்து சித்தி ரிக்கும் கட்டுரைகள் அத்துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர்களால் எழுதப்படு கின்றன. நேயர்களுக்கு இவ்விசேஷ இதழ் ஒரு விருந்தென அமையுமென்று எதிர்பார்க்கிறோம். 112 பக்கங்கள் கொண்ட இந்த மின்சார மலரின் விலை முப்பது காசுதான்.

குழந்தைகளுக்கும் ஒரு சந்தோஷச் செய்தி. 'மலர் மாமா' என்ற பெயரில் சிறுவர்களுக்குப் பல கதைகளை எழுதிக் குவித்திருக்கும் திரு அகிலன் அவர்களின் 'தங்க நகரம்' என்ற தொடர் கதை அடுத்த 17-ந் தேதி கல்கி இதழிலிருந்து ஆரம்பமாகிறது. 'தங்க நகரம்' ஏற் கனவே புத்தக உருவில் வெளியாகி யிருக்கிறது. இருந்தாலும் 'தங்க நகர'த் தின் அழகை ஏராளமான தம்பி தங்கை கள் கண்டு மகிழ்வதற்காகவே நமது பத்திரிகையில் இது தொடராக வெளி வரப் போகிறது.

சங்கரரைப் போற்றுவோம்

எம். எஸ். சிவஸ்வாமி

நமது சமூகத்தில் பல தினங்களைப் புனிதமான நாட்களாகக் கருதிக் கொண்டாடுகிறோம். ராமநவமி, கோகுலாஷ்டமி, விநாயக சதுர்த்தி, சிவராத்திரி, ஆழ்வார்களின் திருநக்ஷத்திரங்கள், நாயன்மார்களின் பிறந்த தினம் இப்படிப் பல புண்ணிய தினங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் நாம் வணங்கும் தெய்வத்துக்கு உகந்த நாள் என்று அன்று வணங்குகிறோம்; வழிபடுகிறோம். இது நமது பண்பாடு. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வரும் பழக்கம். இதற்கு அடிப்படை நம்முடைய ஆழ்ந்த தெய்வ பக்தியும் நமது மறைகளில் நமக்குள்ள திடமான பற்றுதலும்.

இந்தத் தெய்வ நம்பிக்கையும் பக்தியும் ஆட்டங்கண்ட நாட்களும் நம் பாரதத்திலிருந்தன. இப்போதல்ல; சுமார் பல நூற்றாண்டுகளுக்கு முன், இதர பல பிரிவைச் சேர்ந்தவர்களால் தெய்வநம்பிக்கைக்கே ஆபத்துத் தோன்றியது. அந்தக் காலத்தில்தான் ஆதிசங்கரர் தோன்றி நமது பண்பாட்டையும் தெய்வ நம்பிக்கையையும் ஆட்டம் காணாதபடி நிலைநாட்டி நமது சமூகத்தைக் காப்பாற்றினார். புண்ணிய காலங்கள் என்று உண்டா என்ற கருத்தே தத்தளித்தபோது அவற்றை நிலைநிறுத்திய மகானுடைய பிறந்த தினம் விசேஷ மகிமையும் கொண்ட புண்ணிய தினம் என்பதில் ஐயமில்லை. அதை நாம் பக்தியுடன் கொண்டாட வேண்டும். அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி அதுதான்.


சங்கரர் பிறந்த தினம் — இவ்வாண்டு மே 12ந் தேதி வருகிறது. அவருடைய காலத்தை நிர்ணயிப்பதில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் உண்டு. கி. பி. 800 என்று சிலர் சொல்லுகின்றனர். மற்றும் சிலர் கி. பி. முதல் நூற்றாண்டு தான் அவர் காலம் என்கின்றனர். கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு என்பது வேறு சிலரின் அபிப்பிராயம். இதைச் சரித்திரக்காரர்களுடைய ஆராய்ச்சிக்கு விட்டு விடலாம்.

அவருடைய காலத்தைப் பற்றி இங்கே நமக்கு அக்கறை இல்லை. அவர் வாழ்க்கையும் அவர் புரிந்த சாதனைகளும்தான் அவர் பிறந்த தினத்தை நாம் ஆண்டு தோறும் கொண்டாடுவதற்கு முக்கிய காரணம். அவர் சிறந்த மகான். எல்லாச் சமயத்தவர்களுக்கும் அவர் பொதுவானவர். அவர் அறிவுச் சுடர். ஞான ஒளி, வித்தியாசம் என்பதையே பாராட்டாதவர். அபேதமே அத்வைதம். அதுதான் அவருடைய சொரூபம். அதனால்தான் அவர் அனைவருக்கும் குருவாக இருக்கத் தகுந்தவராகவும், அனைவராலும் போற்றத் தகுந்தவராகவும் இருக்கிறார்.

தென்னகத்தைச் சேர்ந்த காலடி தலத்தில் சிவ குருவுக்கும் ஆர்யாம்பிகைக்கும் புத்திரராக சங்கரர் அவதாரம் செய்ததும், ஐந்து வயதடையுமுன்னரே அவர் புலமை அடைந்ததும், மூன்று வருஷ குருகுலவாசத்துக்குள் தனது எட்டாவது வயதிலேயே சாஸ்திர பண்டிதராக ஆனதும், எட்டாவது வயதில் சன்னியாசத்தை மேற்கொண்டு துறவியானதும், குருவினுடைய கட்டளைப்படி உத்தர மீமாம்சையான பிரம்ம சூத்திரங்களுக்கு விரிவுரை இயற்றியதும், காசி தலத்திலிருந்து அதைப் பிரசாரம் செய்ததும், இப் பாரதத்தில் காஷ்மீரத்திலிருந்து காமரூபம் வரையிலும் பத்ரிகாசிரமத்திலிருந்து குமரிமுனை வரையிலும் பாதசாரியாக விஜய யாத்திரை செய்ததும் யாவரும் அறிந்ததே.

அவர் வாழ்ந்தது முப்பத்திரண்டு ஆண்டுகளே. இதில் கல்வி பயிலும் நிமித்தம் கழிந்தது 8 ஆண்டுகள். அடுத்த எட்டு ஆண்டுகளில் கற்க வேண்டியவை அனைத்தையும் கற்றதுடன் பாஷ்யத்தையும் எழுதி முடித்தது வரையிலுமே எந்த மானிடனாலும் செய்ய முடியாத சாதனை.

வடமொழி இலக்கணம் பயிலுவதற்கே ஆயுள் காலம் போதாது என்பர். வேதத்தைக் கற்கவும், அதன் அங்கங்களான நிருக்தம், சந்தஸ், நியாயம், வைசேடிகம், மீமாம்சை முதலியவைகளைக் கசடறக் கற்கவும் எவ்வளவோ காலம் பிடிக்கும். இப்போதுள்ளதுபோல் புத்தகங்களும், நூல் நிலையங்களும், கலாசாலைகளும்,




ரயில் சாதனங்களும் இல்லாத அந்தக் காலத்தில் தகுந்த ஆசிரியர் கிடைப்பதும், அவரிடம் கல்வி பயின்று பண்டிதனாவதும் சாமானிய மானிடர்களால் சாத்தியமன்று. இப்போது வங்காளம் என்னும் கௌட தேசத்திலிருந்தும், காஷ்மீர் பிரதேசத்திலிருந்தும் தெற்கே சம்ஸ்கிருத இலக்கணம் கற்க மாணவர்கள் அந்தக் காலத்தில் திரள் திரளாக வந்தார்களாம். ஒரு சமயம் ஆயிரம் சீடர்கள் ஒரே சமயத்தில் பதஞ்சலி முனிவரிடம் வியாகரண பாடம் கேட்டுக் கொண்டிருந்தார்களாம். ஆதி சங்கரரே ஒருசமயம் ஆறாயிரம் சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தாராம்! இவற்றையெல்லாம் கேட்கும் போது மெய் சிலிர்க்கிறது. ஒரு கல்லூரியிலேயே இத்தனை மாணவர்கள் இப்போது கூட இருப்பதில்லை. அவர்களுக்குப் போதனை யளிக்க எத்தனை ஆசிரியர்கள், எத்தனை முறைகள், எவ்வளவு உட்பிரிவுகள் இருக்கின்றன. அவ்வளவு இருந்தும் நம் மாணவர்களின் அறிவு வளர்ச்சியைப் பற்றியோ ஆசிரியர்களின் போதனா சக்தியைப் பற்றியோ அதிகம் சொல்லத் தேவையில்லை. ஒரே ஆசிரியர் அவ்வளவையும் அத்தனை மாணவர்களுக்கும் போதித்தார் என்பது நம்மைப் பிரமிக்கத்தான் வைக்கிறது.

அதுமட்டுமல்ல: பிரம்ம சூத்திரங்களுக்கு வேதத்தின் உட்கருத்துக்களுக்கு ஒத்து, ஞான ஒளியைப் பிரகாசப்படுத்தி மோக்ஷத்துக்கு வழிகாட்டும்படி, ஒருபாஷ்யம் இயற்றுவது, அதற்கென்றே அவதரித்த மகான்களால்தான் முடியும். பாஷ்யம் இயற்றினால் மட்டும் போதாதென்று அது சரிவர ஆக்கப்பட்டிருக்கிறதா வென்பதைச் சூத்திரங்களைத் தொகுத்த வியாச முனியே பரிசோதித்து அத்தாட்சி அளித்ததாக வரலாறுகளும் உண்டு. வெறும் புத்தகப் படிப்புத்தானா அல்லது அனுபவத்திலும், அதே இடம் இருக்கிறதா என்பதைக்கூடச் சோதித்து "மனீஷாபஞ்சகம்" என்ற ஞான பாவம் நிறைந்த ஐந்து சுலோகங்கள் மூலம் நிலைகாட்டிய வரலாறும் உண்டு.

அத்தாட்சியும் அங்கீகாரமும் ஒருபுறம் இருக்கட்டும். அதில் பொதிந்துள்ள கொள்கைகளைச் சமூகத்திடையே பரப்பும் பொருட்டு அவர் ஊர் ஊராகத் திரிந்து ஒவ்வொரு மதத்தலைவர்களுடனும் தர்க்கம் புரிந்து அவர்களை வாதில் வென்று வேதமார்க்கத்துக்கு முரணான கோட்பாடுகளையும் பழக்கங்களையும் கண்டித்து "எல்லா மதமும் எனக்குச் சம்மதமே" என்று அவற்றையெல்லாம் சமரசப் படுத்தி எல்லாவற்றுக்கும் மேலாக அத்வைத சித்தாந்தத்தை நிலை காட்டியது அவதார புருஷர்களாலன்றி மற்றவர்களால் சாதிக்க முடியாத காரியம். பதினாறு ஆண்டுகளுக்குள் பரந்த நம் பாரதத்தின் எல்லாப் பாகத்திலுள்ளவர்களும் அதை அங்கீகரித்து, அவர் ஸர்வக்ஞர் (எல்லாம் அறிந்தவர்) என்ற ஸ்தானத்தை அளித்ததே அவருடைய மாபாஷ்யத்தின் சிறப்புக்கு ஒப்பற்ற அத்தாட்சி.

தனக்குப் பிற்காலத்திலும் தான் நிலை காட்டிய தெய்வ பக்தி குன்றாமலிருக்க ஆங்காங்கே மடங்களை ஏற்படுத்தி அதை நிர்வாகம் செய்யத் தனக்கு நிகரான தகுதி வாய்ந்த சீடர்களை நியமித்து, இவ்வளவு காலமாக, இந்த மடங்கள் அன்று ஆரம்பிக்கப்பட்டபோது இருந்தது போல் இன்றும் ஊக்கம் குன்றாது செயலாற்றி வருகிறதென்றால், ஆதிசங்கரர் போட்ட அஸ்திவாரம் எவ்வளவு உறுதியானது என்பது விளங்கும்.

அவரிடம் வாது புரிந்து தோல்வியுற்று அவரைக் குருவாக வந்தடைந்தவர் மண்டன பண்டிதர் என்ற சுரேச்வராச்சாரியார். அவருடைய ஞான ஒளியால் கவரப்பட்டு அவரை அடைந்தவர் பத்மபாதர் என்பவர். ஊமையாயிருந்து அவரை அடைந்ததும் பேசும் திறன் பெற்றுத் தனது பெற்றோர்களால் "இவன் எங்கள் பிள்ளையன்று; உங்கள் பிள்ளை" என்று



அவரிடம் விடப்பட்டவர் ஹஸ்தா மலகர் என்னும் சீடர். மேற்பார்வைக்கு அசடு போல் தோன்றினும், அவர் அருளினாலும் இச்சாமாத்திரத்தாலும் ஞான ஒளி பெற்றுக் கவிபாடும் திறன் பெற்று, தமது பெயரையே தமது கவிதாசந்தஸுக்கு அளித்த சீடர் தோடகாசாரியர்.

அவருடைய அன்பு கனிந்த உள்ளத்துக்கு இரண்டு சம்பவங்களை மட்டும் உதாரணமாக எடுத்துக் காட்டலாம். ஏழை ஸ்திரீ ஒருத்தி பிக்ஷையிட ஒன்றுமில்லாமல் அன்புடன் அளித்த அழுகிப் போன நெல்லிக்கனியை உவகையுடன் பெற்று "கனகதாரஸ்தவம்" என்னும் லக்ஷ்மி துதியைப் பாடி அவள் வீட்டில் தங்கம் மழையெனப் பெய்வித்தது ஒன்று. தனது தலையையே யாசித்த காபாலிகனுக்குத் தயக்கமின்றி, 'நான் நிஷ்டையிலிருக்கும்போது வெட்டிக் கொண்டு போகலாம்' என்று உவகையுடன் உத்தரவு கொடுத்தது மற்றொன்று.

அவர் இயற்றிய நூல்கள் மூவகைப்படும். முதலாவது பாஷ்யங்கள். பிரம்ம சூத்திர பாஷ்யமும், பகவத் கீதை உரையும், முக்கியமான பத்து உபநிஷதங்களுக்கு உரையும் இந்த வகையைச் சேர்ந்தவை. இவையெல்லாம் பண்டிதர்களுக்கும் வித்வான்களுக்கும் உவகையூட்டுபவை. மேல் நாட்டவர்களும் நம் நாட்டவர்களும் தலைமுறை தலைமுறையாகப் படித்து வியந்து பரவசமுறும் நூல்கள். அறிவுக்களஞ்சியம் என விளங்குபவை. இரண்டாவது வகை, அத்வைத சாத்திரத்தை எளிதில் உணர்விக்கும் மூலப் புத்தகங்கள். விவேக சூடாமணி, உபதேச சஹஸ்ரி, அபரோக்ஷானுபூதி போன்ற நூல்கள். இவையெல்லாம் சாதாரண அறிவுள்ள மக்களுக்கு விசேஷ பலன் அளிக்க வல்லவை. அத்வைதக் கொள்கைகளை அறிந்து கொள்ள இன்றியமையாதவை. மூன்றாவது வகையைச் சேர்ந்தது துதிகள். சிவன், விஷ்ணு, அம்பிகை, விநாயகர், முருகர்,



இப்படிப் பல தெய்வங்கள் மீது மனத்தை உருக்கும் துதிகளும் பாக்களும் நிரம்பிய பகுதி. இப் பகுதியைப் படிக்கப் படிக்கப் பரவசமாகும். கவிதா நயங்களும், சாஸ்திர உட்கருத்துக்களும், பக்திப் பெருக்கும், அத்வைத சாரமும், விநயமும் வரிக்கு வரி ததும்பும். சிவானந்த லஹரியும் சௌந்தர்ய லஹரியும் நாம் அடிக்கடி பாடும் பஜகோவிந்தமும் தினந்தோறும் மனனம் செய்யத் தகுந்தவை. வடமொழி எதற்காகப் பயில வேண்டுமென்று யாராவது கேட்டால், ஆதிசங்கரர் இயற்றியுள்ள தோத்திரங்களைப் படித்து மகிழ்வதற்காக என்று இதையே ஒரு காரணமாகக் காட்டலாம்.

பண்டிதர்களுக்கு மட்டுமே முக்கியமாக சூத்திரபாஷ்யம் இயற்றப்பட்டது. என்றாலும், சாதாரண மக்களுக்கு அவர் பக்தியைத்தான் உபதேசித்தார். 'தர்க்கம், வியாகரணம் படிக்கிறோம். இவைகளைப் படித்து என்ன பிரயோசனம்? கடைசிக் காலத்தில் இவை பயன்படுமா? நீ புத்திசாலியாக இருந்தால் சிவனுடைய இணையடிகளைச் சொல். அதுதான் சௌக்கியத்தை உண்டுபண்ணும்.' இப்படி சிவானந்த லஹரியில் ஒரு சுலோகம். அதே போல் 'யமன் நெருங்கி வந்தால் வியாகரணம் உபயோகப்படாது. கோவிந்தனைக் கூறு' என்கிறார் பஜகோவிந்தத்தில். இதிலிருந்து அவருடைய சிவவிஷ்ணு சமரஸம் தெரியும்.

இப்படி 'அவதார புருஷராக விளங்கி உலக க்ஷேமத்தையே லட்சியமாக கொண்டு, சகல ஜீவராசிகளிடத்தும் அன்பு பூண்டு அறிவுச்சுடராகத் திகழ்ந்து அதிகார பேதத்துக்கும் அறிவு முதிர்ச்சிக்கும் ஏற்ப நூல்கள் பல வழங்கி மக்கள் 'சமூகத்தை ஆஸ்திகத்தில் நிலைநாட்டி அறவழியிலும் தெய்வபக்தியிலும் நிலைத்து நிற்கவழிவகுத்துத் தந்த லோக குரு ஆதிசங்கரருக்கு அவர் பிறந்த தினமாகிய அடுத்த பஞ்சமி செவ்வாய்க் கிழமையன்று பணிவுடன் அஞ்சலி செய்வோமாக.



தாயுள்ளம் கனவு காண்கிறது...



தனது சேயின் சுகத்தைப்பற்றி கனவு காண்கிறது தாயுள்ளம்... மிகச் சிறந்த சாதனங்களே அவனுக்கு எந்நாளும்... அவனுக்கு உகந்தவை குழந்தைகளுக்கான ஜான்ஸனின் தயாரிப்புகள்...

குழந்தைகளுக்கான ஜான்ஸனின் தயாரிப்புகளின் உயர்தரத்தை நீங்கள் பூரணமாக நம்பலாம். அவைகள் 60 ஆண்டு அநுபவத்தையும் ஆராய்ச்சிப்பயனையும் அடிப்படையாகக் கொண்டுமிகச் சிறந்த பொருள்களை உபயோகித்து தயாரிக்கப்படுகின்றன. ஆகவேதான், அவைகள் பச்சிளம் குழந்தையின் பூமேனிக்கு மிகவும் உகந்தவையாயிருக்கின்றன.

ஜான்ஸன்ஸ் பேபி சோப்: குழந்தையை குளிப்பாட்டுவதற்கு மென்மையான சோப்


ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்: குளிப்பாட்டிய பிறகும் அவன் 'ஜெட்டியை' மாற்றும்பொழுதும் உபயோகத்திற்கு மிகவும் மென்மையான பவுடர்.

ஜான்ஸன்ஸ் பேபி ஆயிலும் கிரீமும்: குழந்தையின் இளம் சருமத்திற்கு பாதுகாப்பளிக்க சிறந்த சாதனங்கள்

ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்

60 ஆண்டுகளுக்கு மேலாக குழந்தைகளுக்கான சிறந்த சாதனங்களை தயாரித்து வருபவர்கள்

ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்
ஆப் இந்தியா பிரைவேட் லிட்.


MICO
LICENCE BOSCH
MICO LICENCE BOSCH
India's First-
Equals
World's Best
By Every Test
எல்லாவிதமான
என்ஜின்களுக்கும்
ஏற்றதாக
மைக்கோ
ஸ்பார்க் பிளக்
கிடைக்கும்
மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட்
பெங்களூர்-1

பஜ கோவிந்தம்

ராஜாஜி

வயலில் சிறு வாய்க்காலைத் தாண்டுவது போல் பெரும் மாயக்கடலைத் தாண்டினார் ஸ்ரீ சங்கரர். ஆன்மஞானம் வளர்வதற்காகப் பல வேதாந்த நூல்களை அவர் இயற்றினார். அதற்கும் மேலாக, உலகத்தார் உள்ளத்தில் பக்தி வளர்ப்பதற்கென்று பல பாடல்களைப் பாடினார். அவற்றில் ஒன்று மிகப் பிரசித்திபெற்ற "பஜகோவிந்தம்" பாட்டு.

பக்திமார்க்கம் வேறு, ஞானமார்க்கம் வேறு என்று பக்குவமடையாத சிலர் பேசுவதுண்டு. எடுத்து விவகரிக்கும் விஷயத்தைத் தனிப்படுத்திக் குறிப்பதற்காக இதைப்போன்ற சொற்றொடர்களைப் பண்டிதர்கள் ஆங்காங்கு பிரயோகப்படுத்துவார்கள். அதனால் நாம் குழப்பிக்கொண்டு பொருளைத் தவறாக உணரலாகாது. அறிவு நன்றாக முற்றி இதயத்தில் பதிந்தால் அது ஞானமாகும். அந்த ஞானமானது வாழ்க்கையுடன் கலந்து ஒன்றாகச் சென்று செயலுருவம் அடைந்தால் அதுவே பக்தியாகும். முற்றிய அறிவு பக்தி என்று சொல்லப்படும். நன்றாகப் பதிந்து பக்தியாக உருக்கொள்ளாத அறிவு பயன்படாத ஒரு பண்டம். பொன் வேறு பித்தளை வேறு என்பதைப் போல், ஞானம் என்பது ஒரு தனி மார்க்கம் பக்தி என்பது வேறொரு தனி மார்க்கம், என்று எண்ணுவதும் பேசுவதும் அறியாமை. புலன்களை அடக்கினாலன்றி அடைந்த அறிவு முற்றி இதயத்தில் பதியாது; ஞானம் தோன்றாது. புலன்களின் இயற்கை வேகத்தை எப்படி அடக்கி ஆள்வது? மோகத்தையும் பற்றுக்களையும் நீக்கினாலொழிய உள்ளத்தைத் திருத்த முடியாது. உபதேசிக்கும் பொருளைச் செயல்முறையில் ஏற்றும் வழி அறிந்து மக்களுக்கு உபதேசித்த பெரியோர்களில் சிறந்தவர் திருவள்ளுவனார். அவர் சொன்னதாவது:

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

நம்மாழ்வார் பாசுரம்:

அற்றது பற்றெனில் உற்றது வீடுஉயிர்
செற்றது மன்னுறில் அற்று இறை பற்றே

என்கிற திருவாய்மொழிப் பாசுரத்திலும் இந்த விஷயமே அடங்கியுள்ளது.

விஷயா விநிவர்த்தந்தே
நிராஹாரஸ்ய தேஹிந:
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய
பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே.

என்கிற கீதா சுலோகமும் இந்த வழியைக் காட்டுகிறது. ஒரு பற்றானது அடியோடு தீர்ந்துபோய் அழிவின்று மனம் விடுதலைபடைய வேண்டுமானால் மனதை சர்வேசுவரன்பால் செலுத்த வேண்டும். புலன்களை அடக்க வேண்டுமென்ற எண்ணம் உண்மையில் சித்தியடைய வேண்டுமானால் பக்தியின்றி நிறைவேற்றவே முடியாது என்பதை உணர வேண்டும். புலன்களை அடக்க முயற்சி செய்த அனைவருடைய அனுபவமும் இதுவாகும்.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு
முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்து

என்று பாடினார் மாணிக்க வாசக சுவாமிகள். "மூர்க்கர்" என்றால் மெய்ஞ்ஞானத்துக்குத் தடையாக உள்ளத்தில் நிற்கும் அகங்காரமும் ஆசைகளும் பற்றுகளும். அவற்றைவிட வேறு யாரே தீய மூர்க்கர்? ஆசமனம் செய்வது போல் எளிதாக ஞான சமுத்திரத்தை அள்ளிக் குடித்த ஆதிசங்கராச்சாரியரே பக்தியை வளர்க்க வேண்டிய பாட்டுக்களைப் பாடினார் என்றால் அதுவே போதும், பக்தியும் ஞானமும் ஒன்றே என்பதற்கு; வேறு சான்று வேண்டியதில்லை. பல வேதாந்த நூல்களை எழுதிய ஸ்ரீ சங்கரர், விஷயம் அவ்வளவையும் வெகு சுருக்கமாக பஜ கோவிந்தப் பாட்டில் அடக்கி, பக்தியும் ஞானமும் ஒன்றாகக் கூடிய பேருண்மைப் பொருளுக்கு எதுகையும் சந்தமும் கூட்டி, வெகு இனிய வடிவம் தந்து பாடியிருக்கிறார்.

கோவிந்தன் வாழி! நம் கோவிந்தன் வாழி!
கதிவேறில்லை மதிகெட்ட மனமே.
மரணம் வந்தெதிரில் நிற்கும் போது
சரணம் வேறில்லை, மாதவனடியின்றி.
வாவென்று காலன் வந்தழைக்குங்கால்
ஆவென்று அலறுவாய் கற்றறி மூடனே!
நெட்டுருச் சூத்திரங்க ளெப்போது
சற்றேனும் உதவா மடமதியே!

भज गोविन्दं भज गोविन्दं
भज गोविन्दं मूढमते ।
संप्राप्ते संनिहिते मरणे
नहि नहि रक्षति डुकृञ्करणे ॥

பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்
பஜ கோவிந்தம் மூடமதே
ஸம்ப்ராப்தே சந்நிஹிதே மரணே
நஹி நஹி ரக்ஷதி டுக்ருஞ்கரணே.

மந்திரிசபையில் நெருக்கடி!

கொழும்பு, ஏப்ரல் 28உ

இலங்கை மந்திரிசபைக்கு ஏற்பட்டிருந்த எமகண்டம் நல்ல வேளையாக நீங்கி விட்டது. சர்ச்சைக்கு உட்பட்டிருந்த கூட்டுறவு மத்திய வங்கி மசோதாவைத் தாமே நேரடியாக நிர்வகிப்பதாயும் உணவு மந்திரியை அந்த மசோதா சர்வாதிகாரியாக்கி விடுமோ வென்று யாரும் பயப்படத் தேவையில்லை யென்றும் வாக்குறுதியளித்து மந்திரி சபைக்குள்ளிருந்த இடது சாரி-வலது சாரித் தகராறை ஒரு மாதிரியாகப் பிரதம மந்திரி தீர்த்து வைத்திருக்கிறார். ஆனால் இந்தச் சமரச உடன்பாடு எவ்வளவு காலத்துக்கு நீடிக்க முடியுமென்று தெரியவில்லை. கொள்கையினால் முற்றிலும் மாறுபட்டவர்கள் சேர்ந்து கூட்டு அரசாங்கத்தை அமைக்க முன் வந்திருக்கும்போது இத்தகைய கருத்துவேற்றுமை சகஜம்தானென்றாலும் ஒரு தகராறு தீர்ந்தவுடனேயே இன்னொரு தகராறு மூளப்பது அமைதியற்ற நிலைமையை நாட்டில் உண்டு பண்ணி வருகிறது. இலங்கையிலுள்ள அன்னிய பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் ஆகியவற்றையெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற ஒரு புதிய கிளர்ச்சியை அரசாங்கக் கட்சியிலுள்ள இடதுசாரிகள் தீவிரமாக ஆரம்பிப்பதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி விவாதித்து முடிவு செய்ய அரசாங்கக் கட்சியின் அவசரக் கூட்டமொன்றை நடத்த வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது. இந்த யோசனை சர்க்காரில் இருக்கும் வலது, இடது சாரிகளுக்கிடையில் மீண்டும் பெரிய மோதலை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. இப்படியே பொழுது விடிந்தால் மந்திரிகளுக்குத் தங்களுடைய தகராறுகளையே தீர்த்துக்கொள்ள நேரம் போதாமல் இருந்தால், நிர்மாண ரீதியில் அவர்கள் வேலை செய்வது எப்படியென்று மக்கள் கேட்கிறார்கள்.

யாழ்ப்பாணம் சைவ மகா சபையின் ஆதரவின் கீழ் அகில இலங்கை சைவ மகா நாடு சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதற்காக விசேஷ அழைப்பின்மீது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்திர பரமாச்சாரிய தேசிக சுவாமிகள் தமது தலைமையுரையில் இலங்கையின் இன்றைய நிலைமைக்குப் பொருத்தமான சில அரிய உபதேசங்களைச் செய்தார். உலகிலுள்ள சகல மக்களும் ஒரே ஆண்டவனின் படைப்பு என்பதை உணர்ந்து கொள்ளும் பட்சத்தில் ஜாதி, மத, வகுப்புப் பூசல்களுக்கு இடமேயில்லை யென்று கூறினார். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்திர பரமாச்சாரிய தேசிக சுவாமிகள் இலங்கையைச் சேர்ந்தவராவார். சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் இங்கு பிரபல வர்த்தகராயிருந்த திரு கே. வி. எஸ். சுந்தரம் என்பவரே தொழில் துறையைத் துறந்து சன்னியாசம் பெற்று மதுரையை அடைந்து மதுரை திருஞான சம்பந்தர் மடாலயத்தில் இளவரசுப் பட்டத்தை ஏற்றார். இப்பொழுது மகா சன்னிதானமாகி யிருக்கிறார்கள்.

—ரஜனி.

ஆகாசவெடி!

"அமெரிக்கா சென்ற வாரம் பறக்க விட்ட குண்டு, இலக்கை நோக்கித் தாக்கி விட்டுத் திரும்பி வந்துவிடக்கூடிய வகையைச் சேர்ந்தது."

—செய்தி

யாராவது தூக்கப்பட்டால்தான் குண்டு திரும்பி வருமென்றால், இதற்கு எதிரிகள் உதவினால்தானே சாத்தியம் என்கிறார் ஒருவர்.

✱

"அடுத்த மாதம் உதகைக்கு வரும் நேரு, ஐந்து தினங்கள் பூரண ஓய்வெடுத்துக் கொள்வார். அவர் பூரணமாக ஓய்வு பெற நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்."

—முதல் அமைச்சர் காமராஜ்

நேருஜி சரியாக ஓய்வெடுத்துக் கொள்கிறாரா என்பதைப் பார்த்துக் கொள்ள மக்கள் திரளாகக் கூடி விட்டால்...?

✱

"தேசிய பாஷை குறித்து லோக சபை விவாதத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் கட்சிக் கட்டுப்பாடில்லாமல் சுயேச்சையாகப் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்."

—தலைநகரச் செய்தி

சுயேச்சையாகப் பேசி முடித்த பிறகு தங்களைக் கட்சியில் என்ன செய்வார்களோ என்பதை நினைத்துப் பேசாமல் இருக்க மாட்டார்கள் என்று நம்பப்படுகிறது.

✱

"தலாய் லாமாவுடன் பல சோதனைகளைக் கடந்து இந்தியா வந்திருக்கும் கோஷ்டியாரில் சிலருக்குக் கால்கள் சுளுக்கிக் கொண்டிருக்கின்றன."

— செய்தி

இந்தக் கால் பாகம் சோதனையையும் அவர்கள் தாண்டி விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்!

✱

"சீனாவை விட்டுத் திபெத்தைப் பிரிப்பது இமயமலையைப் பெயர்த்தெடுப்பதை விடக் கடினம்."

—பீகிங் பத்திரிகை

ஏன்? இமயமலை மீதும் திபெத் வியாபித்திருப்பதாலா?



81

கல்வி கேள்விகளின் பயன், அறிவு. அந்த அறிவின் பயன் என்ன என்பதை முனிவர் சுருக்கமாகச் சில குறள்களில் சொல்கிறார்.

சென்ற இடத்தால்
செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது
அறிவு.

சென்ற இடத்தால்-மனம் சென்ற இடத்துக்கு. செலவிடா - செல்லவிடாது.

'தீது' என்ற அடுத்த மொழியில் உள்ள தகரம் 'விடாது' என்பதிலுள்ள தகரத்தை விழுங்கி விட்டது. மனத்தை அது சென்ற புலத்தின் கண்ணெல்லாம் செல்ல விடாமல் இழுத்துப் பிடித்து என்பது பொருள்.

பயனற்ற இன்பங்களைத் தேடுவது சஞ்சல மனத்தின் இயல்பு. அப்படிச் செல்ல விடாமல் இழுத்துப் பிடிப்பது அறிவு.

தீது ஒரீஇ—மனம் செல்லும் புலத்தின்கண் உள்ள தீமைகளை ஆராய்ந்து அந்தப் புலத்தில் செல்லாமல் நிறுத்தி.

நன்றின்பால் உய்ப்பது—நல்லதன் கண் செலுத்துவது.

உள்ளம் சென்ற இடத்தில் எல்லாம் செல்ல விடாமல் இழுத்துப் பிடித்துத் தீமையை நீக்கி நன்மைப் பகுதியிலே செலுத்துவது அறிவு.

அறிவின் தொழில் நன்மை தீமை அறிவது மட்டுமல்ல, தீமையில் செல்லாமல் தடுத்து நன்மையில் செலுத்தும் ஆற்றலே அறிவு.

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது
அறிவு.

இழிந்தாராயினும், பகைவராயினும், மேலோராயினும், நண்பர்களாயினும் யார் சொல்லுவதிலும் உள்ள உண்மையை உணரும் ஆற்றல் தருவது அறிவு.

அப் பொருள் - அந்தப் பொருளின். மெய்ப் பொருள் - உண்மைப் பொருளை

அறிவுடையார் ஆவது
அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா
தவர்.

ஆவது - வரப் போவ—

அறிவு உடையவர்கள் வரப்போவதை முன்னதாகவே அறிவார்கள். அறிவில்லாதவர்கள் அதை முன்னதாக அறிய மாட்டார்கள்.

அஃது அறிகல்லாதவர் - அதை அறியும் ஆற்றல் இல்லாதவர்.

தான் ஒன்றைச் செய்தல் அல்லது ஒன்றைச் செய்யாது ஒழித்தல் இவற்றின் வருங்காலப் பயனை அறிவதே அறிவு.

அஞ்சுவது அஞ்சாமை
பேதைமை: அஞ்சுவது
அஞ்சல் அறிவார்
தொழில்.

அறிவுள்ளவர் எதைக் கண்டு அஞ்ச வேண்டுமோ அதை அஞ்சுவார். அறிவில்லாதவர் அஞ்ச வேண்டியதை அஞ்ச மாட்டார். செய்யக் கூடாத பாவத்தைக் கண்டு அஞ்சுவது அறிவு. பாவத்தைக் கண்டு அஞ்சாமல் அதைச் செய்வது அறிவில்லாமை.

பாவம், பழி, கேடு இவற்றை யெல்லாம் அறிந்து அஞ்சுவது அறிவின் தொழில்.

அறிவுக்குப் பயம் உண்டு, பாவத்தைக் கண்டு அஞ்சும் பயம். அறியாமைக்கு மூர்க்கத் தைரியம் உண்டு, பாவத்தைக் கண்டு அஞ்சாமை.

எதிரதாக் காக்கும்
அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர்
நோய்.

வரப்போவதை முன்னதாகவே அறிந்து அதனின்று தன்னைக் காத்துக் கொள்ளும் சக்தி தருவது அறிவு. அத்தகைய அறிவை அடைந்தவருக்குத் துன்பம் இல்லை.

அதிர வருவது ஓர் நோய் - உயிர் நடுங்கும் துன்பம்: காப்பது - முன்னதாகவே அதன் காரணத்தை விலக்குதல். சுகத்துக்கு வழி அறிவு.

அறிவுடையார் எல்லாம்
உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும்
இலர்.

மற்றச் செல்வங்களில் பயனில்லை. அறிவே உண்மைச் செல்வம்.

பாகவதமாகிய

பக்திவயல்

பௌராணிகர்

36. கோகுலத்தில் கொண்டாட்டம்

கண்ணன் குழந்தை வடிவம் எடுத்ததுமே, வசுதேவருடைய கைவிலங்குகள் தளர்ந்து போயின. கண்ணனைத் துணி விரித்த கூடையில் எடுத்து வைத்தார். அதே தருணத்தில் யோக மாயை கோகுலத்தில் நந்தன் மனைவிக்கு மகளாய்ப் பிறந்தாள். கண்ணன் இருந்த கூடையைத் தலைமேல் வைத்து வசுதேவர் வெளிக் கிளம்பினார். மாயையின் மகிமையால் வாயில்காப்போர் உறங்கினர்; நகரத்து மக்களும் நிராத்துயிலில் ஆழ்ந்தனர். தாளிட்டு மூடியிருந்த கதவுகள் கதிரவனைக் கண்ட இருளெனத் தாமாகத் திறந்தன. மெதுவான இடியோடு மெல்லிய மழை பெய்தது. கண்ணன்மீது மழைத்துளி விழாவண்ணம் ஆதிசேஷன் தனது படங்களைக் குடையெனத் தூக்கிப் பின் சென்றான். மழை மிகுந்து வெள்ளம் பெருகிக் கரைமீது நுரை தேக்கும் யமுனா நதி கண்ணனைத் தூக்கிச் செல்லும் வசுதேவருக்கு, முன்னொருநாள் இராம பிரானுக்குக் கடல் இடம் கொடுத்தாற் போல், அடங்கி நீர் குறைந்து வழி அளித்தது.

ஆயர்பாடியில் நந்தனும் மற்றக் கோபாலகர்களும் நினைவற்று உறங்கிக் கொண்டிருந்தனர். அதுவும் அம்மையின் மாயச் செயல். வசுதேவர் நேராக யசோதை படுத்திருந்த அறையை அடைந்தார். தம் மகனை யசோதையின் அருகில் வைத்து விட்டு அங்கிருந்த பெண் குழந்தையைக் கூடையில் வைத்துக் கொண்டு, மறுபடியும் தமது சிறைச் சாலையை அடைந்தார். பெண் குழந்தையைத் தேவகியின் கட்டில்மீது வைத்தார். தமது விலங்குகளைப் பூட்டிக் கொண்டார். கதவுகள் தாமாக மூடித் தாளிட்டுக் கொண்டன.

குழந்தை அழும் சத்தத்தைக் கேட்டு வாயில்காப்போர் விழித்துக் கொண்டனர். கம்ஸனிடம் ஓடோடியும் சென்று தேவகிக்கு எட்டாவது குழந்தை பிறந்து விட்டதென்று தெரிவித்தனர். பரபரப்புடன் கம்ஸன் தன் படுக்கையை விட்டு எழுந்தான்; தனக்கு யமனாக வந்த சிசுவை எண்ணிப் பயந்தான்; கலைந்த மயிர் காற்றில் பறக்கக் கால் தடுமாறித் தன் தங்கை சிறைப்பட்டிருக்கும் சிறை நோக்கி விரைந்து வந்தான்.

அண்ணனிடம் தேவகி குழந்தைக்கு உயிர்ப் பிச்சை கொடுக்க வேண்டுமென்று கெஞ்சினாள். ஆனால் கம்ஸனுடைய கல் நெஞ்சம் இரங்கவில்லை. கண்ணீர் விடும் தங்கையைக் கண்ணெடுத்துப் பாராமல், அவளுடைய கையினின்று குழந்தையைப் பிடுங்கி அருகிலிருந்த கல்மீது ஓங்கி அடித்தான். ஆனால் கண்ணனோடு உடன் பிறந்த மாயை இறக்கவில்லை. கம்ஸனுடைய கையினின்று தாவி வானத்தின்மேல் கிளம்பி ஆயுதங்கள் தாங்கிய எட்டுக் கைகளுடன் காட்சி அளித்தாள். "மதியற்ற மன்னவனே! நான் இறந்தும் பயன் இல்லை. உன் எதிரி வேறு இடத்தில் பிறந்திருக்கிறான்" என்று கம்ஸனுக்கு எச்சரிக்கை செய்தாள். மாயை மறைந்தனள்.

அப்பொழுது கம்ஸனுக்கு ஓரளவு மனம் தெளிந்தது. வசுதேவரையும் தேவகியையும் விடுவித்தான். "குற்றமான சிறுவரைக் கொன்றேனே, எனக்கு என்ன கதி கிடைக்குமோ?" என்று தன்னை நொந்து கொண்டான். தத்துவங்கள் பல பேசினான். கண்ணீர் சொரிந்தான். மைத்துனர் தாள்களைப் பிடித்துக் கொண்டான். தேவகியும் மனம் தேறினாள்.

மறுநாள் தனது நண்பர்களான அசுரர்களைச் சபைக்கு அழைத்து நடந்ததை அவர்களிடம் எடுத்துரைத்தான். "ஊரில் எங்கெல்லாம் பத்து நாட்களுக்குள் பிறந்த குழந்தைகள் உண்டோ, அவை எல்லாவற்றையும் கொன்று விடுவோம்" என்று அவர்கள் அரசனுக்கு உபதேசம் செய்தார்கள். அத்துடன் நிற்காது, கம்ஸனைப் பலவாறு புகழ்ந்தார்கள். "அரசே! நீங்கள் வில்லை நாணேற்றும் கால் கிளம்பும் ஒலியைக் கேட்டுக் கிலி பிடித்து ஓடும் தேவர்களிடம் நமக்கு என்ன பயம்? ஓடிப் போவதில் திறமை வாய்ந்து போர்க்களத்து வெளியே வீரியம் பேசும் விண்ணவர் நம்மை என்ன செய்ய முடியும்? தனித்திருக்கும் ஹரியும் மலையில் பதுங்கி வாழும் முக்கண்ணனும், கண்மூடித் தவம் செய்யும் பிரம

னும் நம்மை அணுக இயலுமா ? ஆகவே, மன்னரே ! எங்களுக்கு உத்தரவு கொடுங்கள். குழந்தை வேடம் பூண்ட ஹரியை வளருவதற்குமுன் இப்போதே கொன்று விடுகிறோம். விஷ்ணுவுக்கு வேதமும் வேள்வியும் ஆதாரம். வேதம் ஓதுவோரையும் தவம் செய்யும் முனிவரையும் கூடவே கொன்று விடுகிறோம்'' என்றார்கள். இதுவே நல்ல யோசனை என்று கம்ஸன் கருதினான். அவ்வாறே செய்யும்படி அசுரருக்குக் கட்டளையிட்டான்.

நிற்க, கோகுலத்தில் கண்ணன் பிறந்த திருவிழாவை அனைவரும் கொண்டாடலாயினர். நந்தனுக்கு வந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. குழந்தைக்கு ''ஜாதகர்மம்'' (அதாவது பிறந்ததும் செய்யும் சடங்கு - மந்திரம் ஓதிக் குழந்தையின் நாக்கு நுனியில் மூன்று தரம் நெய்த் துளியை வைப்பது) செய்வித்தான். இரண்டு லட்சம் பசுக்களை அந்தணருக்குத் தானம் செய்தான். எள்ளை ஏழு மலையாகக் குவித்து அதனிடையே இரத்தினங்களை வைத்துப் பெரியோருக்கு அளித்தான். துதி பாடகர்கள் கானம் செய்தனர். துந்துபியும் பேரிகையும் முழங்கின. ஆயர்பாடியில் வீடெல்லாம் மெழுகி நீர் தெளித்துத் தோரணம் நாட்டி அலங்கரித்தனர். காளையையும் பசுவையும் மஞ்சள் கோடிட்டு வர்ணங்கள் பல தீட்டி மயில்பீலி சூட்டிக் கழுத்தில் ஜரிகை ஆடை முடித்து அழகு செய்தனர். இடையர்கள் எல்லோரும் நல்லாடை உடுத்தி நகை அணிந்து பரிசுகள் கையில் ஏந்தி நந்தன் வீட்டுக்குச் சென்றனர். ஆயர்குல மங்கையர் மகிழ்ச்சி மிகுந்து புத்தாடை அணிந்து கொண்டனர். தாமரை முகத்தில் நுதல் மீது அலர் நூல் இழையெனச் சந்தனத்தால் மெல்லிய கோடிட்டுக் கொண்டனர். உடல் பாரமும், நன்கொடை தாங்கிய கைபாரமும் தாங்காது மெய் குலுங்கக் குண்டலம் இரண்டாடக் காசு மாலை மார்புமீது அசைந்தாட முடியினின்று மலர் உதிர்ந்து பாதையில் சிதறி விழ, ஓடோடியும் யசோதை மைந்தனைக் கண்டு கண்குளிர விரைந்தனர். ''பல்லாண்டு பாலகனைக் காப்பாய்'' என்று ஆசி கூறி, மஞ்சள் நீர் தெளித்து உயர் குரலில் பாடினார்கள்.

இவ்வாறு ஆடவரும் பெண்டிரும் ஆயர்பாடியில் அனுபவித்த ஆனந்தத்தை ஆழ்வார் தாமும் அனுபவித்துப் பாடுகிறார் :—


''ஓடுவார், விழுவார், உகந்து ஆலிப்பார்
நாடுவார்,நம்பிரான் எங்குத்தானென்பார்;
பாடுவார்களும் பல்பறைகொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே''

அனந்தன் அவதாரம் செய்தபொழுது பலவித வாத்தியங்களின் பேரிசை முழங்கியது. கோபர்கள் பாலும் நெய்யும் ஒருவர்மீது ஒருவர் வாரி இறைத்துக் கூத்தாடினார்கள். அனைவருக்கும் நந்தன் நன்கொடை நல்கினான். அன்று தொட்டு லக்ஷ்மி அங்கு தன் செல்வங்களையெல்லாம் சொரிந்து ஆயர்பாடியைச் செழிக்கச் செய்தனள்.

பின் ஒருநாள் தனது ஆட்களிடம் கோகுலத்தைப் பாதுகாக்கும்படி கூறிவிட்டு நந்தன் ஆண்டுக்கொரு முறை தான் செலுத்த வேண்டிய கப்பத்தை எடுத்துக்கொண்டு கம்ஸனைக் காண மதுரைக்குச் சென்றான். நந்தன் மதுரைக்கு வந்திருப்பதைக்கேட்ட வஸுதேவர் தன் மைந்தனின் தன்மையைத் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டு அவனைக் காணச் சென்றார். நந்தனும் வசுதேவரைக் கண்டு களிப்புற்று எழுந்து உபசரித்தான். ''உங்களுக்கு மகன் பிறந்தது சந்தோஷத்துக்குக் காரணம். உங்களைச் சந்தித்தலும் எனக்குச் சந்தோஷமே. பல வேலையில் பிரிந்து வாழும் நண்பர் சந்திப்பதே அரிது. நீங்கள் வாழும் ஆயர்







பாடி மழை பெய்து புல் பூண்டு முளைத்து ஆவினத்துக்கு வசதியாக இருக்கிறதா? எனது மகன் பலராமனும் அவன் தாய் ரோகிணியும் சௌக்கியமா?" என்று வசுதேவர் நந்தனை வினவினார். "உங்களுக்குப் பிறந்த குழந்தைகளைக் கம்ஸன் வதைத்துவிட்டான். பிறந்த ஒரு பெண்ணும் மறைந்தனள். விதியின் விந்தையை அறிந்தவன் வருந்த மாட்டான்" என்று வசுதேவரை நந்தன் சமாதானம் செய்தான். வசுதேவர் மனத்தில் அப்பொழுது ஏதோ தோன்றியது. "கப்பம் கொடுத்தாகி விட்டது. கோகுலம் திரும்புங்கள். அங்கு விசித்திர நிகழ்ச்சிகள் நடக்கின்றன" என்றார். மாட்டுவண்டிகளில் ஏறிக்கொண்டு நந்தன் தன் பரிவாரங்களோடு கோகுலம் திரும்பினான். என்ன நேருமோ என்று அஞ்சி ஹரியைச் சரண் புகுந்தான்.

பூதனை என்று ஒரு கொடிய அரக்கி. குழந்தைகளைப் பசி ஆற உண்பாள். சென்றவிடமெல்லாம் இதுவே அவள் செயல். கம்ஸனால் ஏவப்பட்டுக் கிராமங்களில் திரிந்து வந்தாள். கோகுலம் அடைந்ததுமே தனது கோர உருவை மாற்றிக் கொண்டு அழகிய மங்கை வேடம் பூண்டு, கிராமத்துக்குள் நுழைந்தாள். அவள் அழகைக் கண்டு கோகுலப் பெண்கள் மயங்கினர். பட்டாடை உடுத்து, கொண்டையில் மல்லிகை மலர் செருகி, மெல்லிய இடை அசைய, புன்முறுவல் பூத்து ஆடி வரும் நங்கையை அலர்மாதென்றே கருதினர். விதி அவளைக் கண்ணன் படுத்திருக்கும் இடத்துக்கு இழுத்துச் சென்றது. கொடியவரைத் தண்டிக்கும் தேவன் தனது வரம்பில்லா வல்லமையை வெளிக்காட்டாது சாம்பலால் மூடிய நெருப்பெனத் துயின்று கொண்டிருந்தான். அவனை யாரென்று அறிந்த மாதவன் மூடிய கண்களைத் திறக்கவில்லை. பாம்பைப் பழுதென்று கருதிய பாமரனைப் போல் பூதனை குழந்தையைத் தன் மடிமீது எடுத்து வைத்துக் கொண்டாள். இந்த ஆசைத் தோற்றத்தை யசோதை கண்டு களித்தாள்! அவளுடைய கொடிய நெஞ்சத்தை யசோதை அறியவில்லை. மடி மீதிருந்த கண்ணனுக்குப் பூதனை விஷம் கலந்த தனது தாய்ப்பாலை ஊட்டினாள். நஞ்சோடு அரக்கியின் உயிரையும் உறிஞ்சினான் கண்ணன். பூதனைக்கு வேதனை பொறுக்க முடியவில்லை. "போதும், போதும், என்னை விடு" என்று கதறினாள். அவளுடைய உடலெல்லாம் வேர்வையால் நனைந்து போயிற்று. கைகால்களை உதறினாள். வீரிட்டு ஓலமிட்டாள். அவ்வொலியால் மூவுலகும் நடுங்கியது.

வலி பொறுக்காது தனது உண்மை உருவத்தை எடுத்தாள். உயிர் மாய்ந்து ஊருக்கு வெளியே புவிமீது சாய்ந்தாள். அவள் விழுந்த வேகத்தில் சுற்றுப் பக்கத்திலிருந்த மரங்கள் நொறுங்கிப் போயின. அவளுடைய கோரைப் பற்கள் ஏர்க்காலை ஒத்திருந்தன. மூக்குத்துவாரங்கள் மலையின் குகையெனத் தெரிந்தன. ஸ்தனம் இரண்டும் பர்வதம்போல் தோன்றியது. செம்மயிர் பரவிப் பறந்து கொண்டிருந்தது. பாழுங்கிணறுபோன்ற கண்களும், மணல் திட்டைப் போன்ற இடுப்பும், அணை போட்டாற்போல் கை, கால்களும், நீரற்ற குட்டையைப் போன்ற நாபியும் கண்டவர் மனத்தைக் கலக்கின. ஆயர்பாடியில் வசித்து வந்த ஆண்களும் பெண்களும் அவளிட்ட பேரொலியைக் கேட்டுத் தலை வெடித்து விடுமோ என்று பதுங்கி யிருந்தனர்.

ஆனால் அச்சமயம் அவ்வுயிரற்ற உடல் மீது கண்ணன் தவழ்ந்து கொண்டிருப்பதைக் கண்ணுற்றனர். குழந்தையை அங்கிருந்து எடுத்தனர். கண்திருஷ்டி வராதிருக்கப் பசுவின் பாலைக் கொண்டு கண்ணனைச் சுற்றினர். பசுவின் கால் புழுதியை அவன் மீது தூவினர். ஹரியின் பன்னிரு பேரைச் சொல்லிக் குழந்தையின் உடல் மீது பன்னிரண்டு இடங்களில் பசுவின் சாணியால் தொட்டனர். மந்திரங்கள் ஓதி ரக்ஷையைக் கோரினர்.

யசோதை கண்ணனைத் தாலாட்டித் தூங்க வைத்தாள்.

இதனிடையே, ஆயர்பாடிக்குத் திரும்பிய நந்தகோபரும் அவருடைய ஆட்களும், ஊருக்கு வெளியே மலைபோல் கிடக்கும் உடலைக் கண்டு வியப்புற்றார்கள். வசுதேவர் தங்களிடம் கூறிய எச்சரிக்கை அப்பொழுது அவர்களுக்கு நினைவு வந்தது. கோடரியால் அந்தத் தேகத்தைப் பல துண்டுகளாக வெட்டித் தீக்கிரையாக்கினர். ஆனால் கண்ணனின் கைப்பட்ட உடலன்றோ? எரியும் உடலினின்று கிளம்பிய புகை நறுமணத்தோடு திகழ்ந்தது. கண்ணனைத் தொட்டதுமே கொடிய அரக்கியின் தீவினை தீர்ந்து முனிவரும் அடையாத பெரும் பதவியை அவள் அடைந்தாள். அன்போடு கண்ணனைக் காத்த தாய்மாருக்கு மாசில்லா மோக்ஷம் கிடைத்தது என்பதைக் கூறவேண்டுமா?

“பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்து உண்டிட்டு உறங்குவான் போலே கிடந்த இப்பிள்ளை. மதம் கொள் இரணியன் மார்பை முன் கீண்டான் அன்றோ?”

ஆகவே, இக் கதையைக் கேட்பவர் மனத்தினில் கண்ணனிடம் அன்பு தானாகவே ஊறும் என்பது பெரியோர் கொள்கை.

இருநாரியர்

படைப்பின் தொன்மையில் ஒருநாள்
கடைந்தெழு கடலில் தோன்றினர் இருவர்
பேரழகியாம் ஊர்வசி ஒருத்தி,
அகிலமே ஆசைகொள் அரசி,
வானுலகின் எழில் அணங்கு.

நலந்தரு திருமகள் மற்றவள்:
அகிலம் போற்றும் அன்னை,
பொன்னுலகமர் கடவுள்.

ஒருத்தி, தவமதைக் கலைத்தே
இன்பக் கனலின் சாற்றினை
இளவேனில் செப்பினுள் இட்டுக்
காதல் சிவப்பூறு மலர்கள் ஏங்க
கண்துஞ்சா இளமையின் பாட்டால்
உயிர் உள்ளம், இரண்டையும் கொள்ளை கொண்டே
இறைத்துச் செல்வாள் தன் இருகையால்.

மற்றவளோ, கட்பனித் துளியில்
இனிமை நினைவினைத் தோய்த்துப்
பொன்னவிர் ஏமந்த இருதுவில்
அமைதியின் நிறைவினைத் தந்திடுவாள்.

உலகு அனைத்திலும் ஆசியைப் பரப்பிட
மென்னகையின் இன்னமுதினை,
வாழ்வும் சாவும் இணைந்திடும்
புனிதக் கடலின் கரைமிசை
அலகிலாப் பூசனை திகழ் கோயிலிலே
மீண்டும் கொணர்ந்திடுவாள்.

—ரவீந்திரநாத் டாகூர்

❋❋❋





தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை

காந்தன்

தமிழ்ப் படங்களின் தலைப்புகள் சேலையைப் போல் நீளமாகி வருகின்றன. பதினெட்டாயிரம், பத்தொன்பதாயிரம் அடிகளுக்குக் குறைந்து படங்கள் எடுக்கமுடியாது என்று சத்தியாக்கிரஹம் செய்து வந்த நம் படாதிபதிகள், கச்சா பிலிம் கிடைக்காத காரணத்தினால், மனமுவந்து சில நூறு அடிகளை விட்டுக் கொடுக்க முன் வந்தனர். ஆனால் இதை நினைத்துச் சந்தோஷப்பட வேண்டிய சமயத்தில் படங்களின் தலைப்புகள் மிக மிக நீளமாக விரிந்து கொண்டே வருவதைப் பார்க்க வருத்தமாயிருக்கிறது.

இப்படி நீண்டு கொண்டே போகும் தமிழ்ப்படங்களின் தலைப்புகள் வெண்பா, விருத்தப்பா மாதிரி நான்கு அடிகள் கொண்டதாகி விடுமோ என அஞ்ச வேண்டியிருக்கிறது! ஆனால் அஞ்சிப் பயனில்லை. விஷயம் மிஞ்சி விட்டது.


படத்தின் தலைப்புகள் நீளமாகி வருவது ஒரு புறம் கிடப்ப, அவற்றின் வல்லொற்றுக்கள் ஏனோ விடுபட்டுப் போகின்றன! (உதாரணம்: 'கடன் வாங்கி கல்யாணம்', 'கல்யாண பரிசு'.) இமயத்தில் ஏறி வெற்றிக்கொடி நாட்டி இறவாப் புகழ் பெற்று இரும்பூ தெய்திய தமிழன் தமிழ் மொழிக்கு வனப்பையும், வன்மையையும், வளத்தையும் வழங்கும் வல்லொற்றுக்களைக் கண்டு அஞ்சுவது பேதைமை அன்றோ!

"தாயைப் போல பிள்ளை..." என்று இந்தப் படத்தின் தலைப்பிலும் வல்லொற்றுக்கள் வேண்டுமென்றே விடப்பட்டிருக்கின்றன. படாதிபதிகள் தங்கள் படத் தயாரிப்பில், விட்டொழிக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்க அவைகளையெல்லாம் கவனிக்காமல், வல்லொற்றுக்களின் மீது வன்மம் கொண்டு அவைகளை விழுங்கி வருவது விந்தையாகத்தான் இருக்கிறது!

இந்தப் படத்தின் தலைப்பு கதையோடு பொருந்துகிறதா என்று பார்த்து யாரும் அநாவசியமாகச் சிரமத்துக்குள்ளாக வேண்டாம். ஒரு பிள்ளைக்கு 'ஆபத்சகாயன்' என்று அவன் தகப்பனார் பெயர் வைக்கிறார். இன்னொரு பிள்ளைக்கு 'ஆடிய பாதம்' என்று பெயர் வைக்கிறார். பெயர்களின் பொருளை நினைத்துப் பார்த்தா வைக்கிறார்? அதே மாதிரிதான் படாதிபதியின் நிலையும் இருக்கிறது.

பட்டாளத்து வீராசாமியின் மகன் நாராயணசாமி தென்னூரில் ஹெட் கான்ஸ்டபிள். நாராயணசாமியின் மகன் ரங்கசாமி பாலக்கரையில் ஸப் இன்ஸ்பெக்டர். ரங்கசாமியின் மகன் ராமசாமி திருச்சியில் டிப்டி சூப்பரின்டெண்டெண்ட்.

வீராசாமியின் மனைவி வேலம்மாள் ஓய்வு பெற்ற தன் கணவனுடன் குடும்பத்தில் ஓய்வு பெற்றிருக்கும் கிழவி. நாராயணசாமியின் மனைவி செல்லம்மாள் கொஞ்சம் முன்கோபி. அவசர புத்தியுடையவள். ரங்கசாமியின் மனைவி பங்கஜம் குடும்பப்







பொறுப்புகள் அனைத்தையும் ஏற்று எல்லோருக்கும் அன்போடு பணிவிடைகள் செய்துவரும் பண்பு நிறைந்த ஒரு க்ருஹ லக்ஷ்மியாக இருந்து வந்தாள்.

அதே ஊரில் காட்டிய கலாராணி மரகதமும் அவள் தாயார் மாணிக்கமும் நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெரிதும் பெற்றிருந்தனர். வருமானத்தைப் பொருட்படுத்தாமல் பொதுப் பணிகளுக்காகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தி வந்தனர்.

இவ்வளவாவது திரைக் கதையைத் தெரிந்து கொள்ளுவது அவசியம்.

ஒற்றுமையாக இருக்கும் குடும்ப வாழ்க்கை படத்தின் முன் பகுதியில் மிகவும் சுவாரஸ்யமாகக் காட்டப்படுகிறது.

பட்டாளத்து வீராசாமியாகச் சிவதாணு வந்து அமர்க்களம் செய்கிறார். 'எட்டையா'வாக, கே. சாரங்கபாணி தோன்றிச் சக்கைப்போடு போடுகிறார். ஸப் - இன்ஸ்பெக்டர் ரங்கசாமியின் பாகம் வி. கே. ராமசாமிக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது. 'டூட்டி'யில் ஒருவரையொருவர் தரத்துக்கேற்ப மரியாதை செலுத்தும் இவர்கள் வீட்டுக்கு வந்ததும் உறவு முறைக்குரிய மரியாதைக் கேற்ப நடந்து கொள்வது நன்றாயிருக்கிறது.

இந்தப் படத்தின் கௌரவ நடிகரான சிவாஜி கணேசன் பொற்கைப் பாண்டியனாக ஓரங்க நாடகத்தில் பேசாமல் நடித்துப் படத்துக்கே கௌரவம் தந்து விடுகிறார். அவர் சிறிது நேரமே வந்தாலும், படம் முழுவதும் உயிர்க்களை வீசுகிறது. ஓரங்க நாடகத்துக்குப் பின்னணியாகப் பாடப்படும் பாட்டும் நன்றாயிருக்கிறது.

டெபுடி சூப்பரின்டெண்டாக வரும் மனோகர்தான் கதாநாயகன். போலீஸ் மிடுக்குடன் நன்றாய் நடித்திருக்கிறார்.

தன் வீடு தேடிவந்த மரகதத்துக்கு அவமானம் நேர்ந்தது பொறாமல் வீட்டைவிட்டு வெளியேற முயன்று, பிறகு தாயாரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டபோது மனோகரின் நடிப்பு சிறந்து விளங்குகிறது.

காட்டிய கலாராணி மரகதமாக எம். என். ராஜம் வருகிறார்; தாயாரின் சந்தேகத்துக்கு ஆளாகிக் கண்ணீர் வடித்துக் கலங்கி உருகியிருக்கிறார். "பொற்கைப் பாண்டியன்" கதையைச் சொல்லும் கிழவியாக வரும்பொழுது அவரது 'மேகப்'பும் முக பாவங்களும் நன்றாயிருக்கின்றன.

மரகதத்தினுடைய தாயாக வருபவர் கண்ணாம்பா என்று சொன்னால் போதும். அவர் நெருப்புத் துண்டமாகத் தகித்தும், கரும்புத் துண்டமாக இனித்தும், இரும்புத் துண்டமாக எதிர்த்தும் நிற்பார் என்று யாரும் சொல்லாமல் புரிந்து கொள்வார்கள்.

பண்டரிபாய்க்கு ஏற்ற பாகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. க்ருஹ லக்ஷ்மியாகப் பல படங்களில் நடித்துப்புகழ்பெற்ற அவர் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விடுவாரா? குடும்பத்தைக் கௌரவமாக நடத்தியதிலிருந்து வில்லனின் பாழ் வீட்டில் அவதியுற்ற வரையில் நன்கு நடித்திருக்கிறார்.

மனோகரின் தங்கை லக்ஷ்மியாக வரும் சிவகாமி சினிமாவுக்கு ஒரு புது முகம். முயன்றால் முன்னுக்கு வரலாம்.

கதையின் பிற்பகுதியில் கள்ள நோட்டு, கொள்ளைக் கூட்டம் எல்லாம் வருகின்றன. டி. கே. ராமச்சந்திரன் வில்லனாக வந்து அல்லல் பல விளைவிக்கிறார். நன்றாக நடித்திருக்கிறார்.


வில்லனின் பாழ் வீட்டில் நடனமாடும் பத்மினிபிரியதர்சினி ஆடும் ஆட்டம் அருவருப்பாயிருக்கிறது. தமிழ்ப் படங்களில் இந்தக் கேலிக் கூத்து நடனங்களைச் சேர்த்து விட்டுப் 'பாமர ரஞ்சகம்' என்கிறார்கள். படம் பார்க்கும் பாமரர்களைப் பரந்தாமன்தான் காக்கவேண்டும்! பெண் இனம் தலை குனியும் வண்ணம் அலங்கோலமான ஆடை அலங்காரங்களுடனும், அங்க சேஷ்டைகளுடனும் ஆடுவது எப்படியும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஏ. பி. நாகராஜன் கதையைத் தயாரித்து வசனமும் நன்றாயெழுதியிருக்கிறார்.

கே. சோமு டைரக்ஷனைத் திறமையாகச் செய்திருக்கிறார்.

புது தில்லியில் ராஜாஜி

நல்ல நாளில் நல்லோரைக் காண வேண்டும்; பெரியோரைக் கண்டு சேவிக்க வேண்டும்; அவர்களது ஆசி பெறவேண்டும் என்பது தமிழ்நாட்டு மரபு. தமிழ் நாட்டிலிருந்து வெகு தூரத்திலுள்ள தில்லித் தமிழர்களுக்குத் தமிழகத்துப் பெரியோர்களைப் புது வருஷப் பிறப்பன்று காண வேண்டும் என்ற ஆசை எழுவது இயல்பே அல்லவா? அதைக் கருதிப் புதுவருஷப் பிறப்புக்கு முதல் நாள், தில்லி தமிழ்ச் சங்கத்தினர் தமிழகம் தந்த தனிப்பெருந் தலைவர் ராஜாஜியின்



திருவுருவப் படத்தைத் தங்கள் சங்கத்தில் திறந்து வைத்தனர்.

இந்த வைபவத்துக்குத் தில்லி பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் தலைமை வகித்தார். ஸ்ரீ சி. டி. தேஷ்முக் படத்தைத் திறந்து வைத்தார். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் கிருஷ்ணன் யாவருக்கும் வரவேற்புரை நல்கினார்.

டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் பேசிய போது, "தமிழகத்தின் மூன்று தனிப் பெரும் பண்புகளாகிய தார்க்கரீதி, பகுத்தறிவு, அஞ்சாமை ஆகியவற்றின் பிரதிநிதியாக ராஜாஜி விளங்குகிறார். உபநிடதங்கள் வர்ணிக்கும் ரிஷிகளைப் போல் ராஜாஜி வாழ்கிறார்!" என்றார்.

ராஜாஜியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த ஸ்ரீ சி. டி. தேஷ்முக் ராஜாஜியின் பண்புகளில் பெரிதும் ஈடுபட்டுப் பேசினார். ராஜாஜியின் அறிவுக் கூர்மையையும் அளப்பரிய அன்பு உள்ளத்தையும் வியந்து வியந்து பேசினார். தமக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ராஜாஜியைத் தெரியும் என்றும், அவருடன் மத்திய சர்க்காரில் மந்திரியாக வேலை செய்யச் சந்தர்ப்பம் வாய்த்த போது அந்த நட்பு உறுதிப்பட்டது என்றும் கூறினார். எவ்வளவு இளகிய நெஞ்சம், எவ்வளவு நேசப்பண்பு அவரிடம் இருக்கிறது என்பதைத் தாமும் மற்றவர்களும் உணர்ந்து கொண்டதாகவும் சொன்னார். ராஜாஜியைக் கூர்ந்து பார்ப்பவர்களுக்கே அவர் எவ்வளவு அடக்கம் நிரம்பிய மனிதர் என்பதை உணரமுடியும் என்று ராஜாஜியின் அடக்கப் பண்பை எடுத்துக் காட்டினார் ஸ்ரீ தேஷ்முக்.

ஒருவர் தாம் ரொம்பவும் அடக்கமானவர் என்பதைக் காட்டிக் கொள்வதே ஒருவித ஆணவம் என்று கருதுபவர் ராஜாஜி. உண்மையான அடக்கமுள்ளவன், அதை வெளியில் காண்பித்துக் கொள்ளாது கடைப்பிடிக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர் ராஜாஜி. இதை ராஜாஜியே ஒரு யோக சாதனை போல் கடைப்பிடித்து ஒழுகி வருபவர். ஸ்ரீ தேஷ்முக் இதைக் கண்டுபிடித்துச் சொன்னது, அவருக்கு ராஜாஜியினிடம் எவ்வளவு ஈடுபாடு இருக்கிறது என்பதை விளக்கி விட்டது!

இப்படி ஸ்ரீ தேஷ்முக், ஸ்ரீ வி.கே.ஆர்.வி. ராவ் மற்றப் பெரியார்களும் பாராட்டும் ராஜாஜி பிறந்த தமிழகத்திலிருந்து நாமும் இங்கு வந்திருக்கிறோம் என்று அன்று டில்லி தமிழ்ச் சங்கத்தில் கூடியிருந்த தமிழர்கள் நினைத்துப் பெருமிதம் அடைந்திருப்பார்கள்.

நைஸில்

உங்களையும்,
உங்கள்
குடும்பத்தினரையும்
வேர்க்குருகளிலிருந்து
பாதுகாக்கிறது.



அது மாத்திரமல்ல. அதிகமாக வியர்வை நீர் ஏற்படுவதற்கும், சாதாரண சரும நமைச்சலுக்கும் பயனுள்ள பரிகார முறையாகிறது நைஸில். எப்பொழுதுமே நைஸில் வீட்டில் வைத்திருங்கள்,

நைஸில்

BDH

சருமத்திற்கு சிறந்த பாதுகாப்பளிக்கிறது.

பிரிட்டிஷ் ட்ரக் ஹவுஸஸ் (இந்தியா) ப்ரைவேட் லிட்.,
தபால் பெட்டி 1341 பம்பாய்—1
கிளை ஆபீஸ்கள் : கல்கத்தா . டில்லி . மதராஸ்


அத்தியாயம் 5

சிங்கம் தாணாவதி

"யாரு, தாணாவதியா? வா தம்பி, வணக்கம். என்ன அப்படிப் பார்க்கிறே? இவள்தான் தம்பி என் மகள் வீணா" என்று அந்தப் பட்டிக்காட்டு இளைஞனுக்கு முதலில் தமது மகளை அறிமுகப் படுத்தினார் சச்சிதானந்தம்.

பிறகு வீணாவிடம் திரும்பி, "இவன்தான் அம்மா, தாணாவதிப் பிள்ளை. நம்ம ஊர் கிராம முனிசீப். ரொம்ப நல்லமாதிரி. எங்கிட்டே இவன் வைச்சிருக்கிற மதிப்பும் மரியாதையும் சொல்லி முடியாது" என்று அந்த இளைஞனை அவளுக்கும் அறிமுகப்படுத்தினார்.

கற்சிலைகளிடம் பேசினால், அவைகளிடமிருந்து ஏதேனும் உணர்ச்சியோ, எதிரொலியோ, பதிலோ வெளிப்படுமா? அப்படித்தான் ஆயிற்று சச்சிதானந்தம் செய்து வைத்த அறிமுகமும். தாணாவதியும் வீணாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு இரு கற்சிலைகளைப் போல் நின்றனர்.



கண்கள் உறங்காவோ?

"என்ன ரெண்டு பேரும் இப்படித் திகைச்சுப் போய் நின்னுட்டீங்க? எனக்கு ஒண்ணும் விளங்கலையே!" என்று வியப்புடன் அவர்களை மாறி மாறிப் பார்த்தார் சச்சிதானந்தம்.

சட்டென்று வீணா விழிப் படைந்தாள். "என்னப்பா சொன்னீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"இல்லை; தாணாவதியை முதல் தடவையாகப் பார்க்கிறபோதே இப்படித் திகைச்சுப் போய் நின்னுட்டியே என்னான்னு கேட்டேன்."

"முதல் தடவை இல்லை அப்பா. இவரை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். ஆனால் இப்பொழுதுதான் யாரென்று தெரிந்து கொண்டேன்." வீணாவின் பதிலில் இலேசான ஏளனம் மிதந்தது.

"பார்த்திருக்கிறியா? தாணாவதியையா? எம்மா, கனா-கினாக் கண்டியா? இவன்தான் இந்த ஊருக்கு வெளியே போனதே இல்லையே. அம்மா! நீயும் இங்கே இப்போத்தான் வந்திருக்கிறே......!"

"ஊருக்கு வெளியே வந்து கொண்டிருந்தபோதே இவர் எனக்குத் தரிசனம் தந்து விட்டார், அப்பா!"

மாயாவி

என்றாள் வீணை. அவளுடைய கண்கள் தாணுவதியை நோக்கிச் சிரித்தன.

"அப்படிச் சொல்லு. என்னடான்னு பார்த்தேன்!" சச்சிதானந்தம் தாணுவதியிடம் திரும்பி, "உட்காரு தம்பி. வந்த காலோடு நிக்கிறியே. இப்படி வா. ஊஞ்சலிலே உட்காரு" என்றார்.

தாணுவதி ஊஞ்சலை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தானோ, இல்லையோ, வீணை அதிலிருந்து சடாரென்று எழுந்தாள்.

அந்த ஊஞ்சல் நீளமானது. மூன்று பேர்கள் என்ன? ஐந்தாறு பேர்கள்கூட அதில் அமரலாம். பகல் பொழுதெல்லாம் திருப்புகழும் கையுமாக அந்த ஊஞ்சலே கதியென்று கிடப்பார் சச்சிதானந்தம். எத்தனை பேர்கள் வந்தாலும் அதில்தான் உட்காரச் சொல்வார். இடம் போதாதென்று எவரையும் அதிலிருந்து எழுந்திருக்க விடமாட்டார். "மனமிருந்தால் இடமுண்டு. நெருங்கி உட்கார்ந்துக் கிடுங்க. இது சங்கப் பலகை. எத்தனை பேர்கள் வந்தாலும் உட்கார இடம் கொடுக்கும்" என்பார்.

அதை அவர் சங்கப் பலகை என்று வேடிக்கையாகச் சொல்லவில்லை. உண்மையாகவே அப்படிக் கருதினார். அதற்குக் காரணமும் இருந்தது. ஒரு சமயம், ஏதோ ஒரு கோவில் திருப்பணிக்கு நன்கொடை வசூலிப்பதற்காகப் பத்துப் பதினைந்து பேர்கள் சச்சிதானந்தத்திடம் வந்தனர். வழக்கம்போல் அனைவரையும் கட்டாயப்படுத்தி அந்த ஊஞ்சலிலே அமரச் செய்தார் அவர். ஒவ்வொருவராக உட்கார்ந்த பிறகு, கடைசி ஆளாக அந்தக் குழுவின் தலைவர் அமர்ந்தார். அவர் உட்கார்ந்தாரோ, இல்லையோ, ஊஞ்சல் கம்பிகள் நான்கின் கொக்கிகளும் இத்தனை ஆட்களின் பாரத்தைத் தாங்க மாட்டாமல் ஒரே சமயத்தில் நிமிர்ந்து விட்டன. சிறகொடிந்த விமானத்திலிருந்து விழுபவர்கள் போல் எல்லோரும் கீழே விழுந்து சிதறிப்போயினர். நல்ல வேளையாக ஊஞ்சல் தரையிலிருந்து இரண்டடி உயரத்தில் இருந்ததால் யாருக்கும் காயம் படவில்லை.

பல்லை இளித்துக்கொண்டு, "இந்தக் காலத்து இரும்பே இப்படித் தானுங்க. ஒரு பலமா, இறுவா ஒண்ணும் கிடையாது" என்று கீழே விழுந்தவர்களுக்குச் சமாதானம் கூறினார் அவர். பிறகு இந்த நிகழ்ச்சிக்குப் பிராயச்சித்தம் செய்வது போல் அவர்கள் கோரி வந்த தொகைக்கு இரண்டத்தனை கொடுத்து அனுப்பினார்.

ஆனால் ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள், அந்தத் திருப்பணிக் குழுவுக்குத் தலைமை தாங்கியிருந்த ஆசாமி வசூல் செய்த பணத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டு தலை மறைந்துவிட்டான். அப்பொழுது முதல்தான் சச்சிதானந்தம் தமது ஊஞ்சல் பலகையைச் சங்கப் பலகையென்று தீவிரமாகக் கருதலானார். ஆம், சங்கப் பலகை, புலமை அற்றவர்கள் அமர்ந்தால் தூக்கி யடித்துவிடும் என்று சொல்லுவார்கள், இல்லையா?

இம்மாதிரிச் சில விசித்திரமான கருத்துக்கள், அர்த்தமற்ற கோட்பாடுகள், அசட்டுப் பீதிகள் போன்றவை, சில காலத்துக்கு முன்பிருந்தே சச்சிதானந்தத்திடம் அடிக்கடி தோன்றி, கிராமத்துக்கு வந்த பிறகு படிப்படியாக அதிகரித்து வந்தன. முன்பு அவர் எவ்வளவுக்கு எவ்வளவு மதிநுட்பமும் திறமையும் வாய்ந்தவராக இருந்தாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு இப்பொழுது அசடாகிக் கொண்டிருந்தார். இன்ப வாழ்வில் அடுத்தடுத்து விழுந்த இடிகள்தாம் அவரை இப்படி மாற்றிவிட்டன. கொஞ்சத்துக்குக் கொஞ்சம் திடமான மனமுடையவராக இருந்ததால் இந்த அளவோடாவது நின்றார். கோழையாக இருந்திருந்தால் இருபது வருஷங்களுக்கு முன்பே அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கும்.

இன்றும் அப்படித்தான். தாணுவதி ஊஞ்சலில் உட்கார வந்ததைக் கண்டு மகள் எழுந்தபோது, அது மூன்று பேர்களைத் தாங்காதென்றே அவள் எழுந்துவிட்டதாகக் கருதினார் அவர். எனவே, "நீ ஏம்மா எழுந்திருக்கிறே? இது சங்கப் பலகை அம்மா. தாணுவதியைப்போல் இன்னும் நூறு பேர்கள் வந்தாலும் இடம் கொடுக்கும்" என்றார்.

'தாணுவதியைப் போல்' என்று அவர் கூறியபோது 'அவன் நல்லவன்' என்ற அர்த்தத்தில்தான் கூறினார். ஆனால் வீணை அதற்கு வேறோர் அர்த்தத்தைக் கற்பித்துக்கொண்டு 'குபீ'ரென்று பலமாகச் சிரித்துவிட்டாள்.

சின்ன ராட்சசனைப் போல் பெரிய சரீரம் கொண்ட அவனைக் கிண்டல் பண்ணவே தன் தந்தை அவ்வாறு குறிப்பிட்டார் என்று அவள் எண்ணினாள்.

ஆனால் அவள் அவ்வாறு சிரித்ததைக் கண்டு தாணுவதி கோபமோ, வெறுப்போ அடையவில்லை. அவனும் ஓர் அசட்டுச் சிரிப்பைச் சிந்திக் கொண்டு ஊஞ்சலில் வந்து அமர்ந்தான். பிறகு சச்சிதானந்தத்தை நோக்கி, "மாமா! நீங்க வேடிக்கையான மனுசருங்க. இந்த வயசிலே இத்தினி வேடிக்கையும் விளையாட்டுமா இருக்கிறவங்களை நான் பார்த்ததேயில்லை. ஏம்மா, நான் சொல்றது நிசந்தானே?" என்றான் அவன். அதே அசட்டுச் சிரிப்புடன் அவன் பார்வை ஊஞ்சல் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்ற வீணையிடம் தாவியது.

"என்ன தாணுவதி? என்ன புதிர் போடுறே?" என்று அவனைக் கேட்டார் சச்சிதானந்தம்.

"என்னை அத்தினி அசடுன்னு நினைச்சுட்டீங்க, அப்படித்தானே? நான் அசடா யிருந்தா, மாமா! இந்த ஊரை என் உள்ளங்கைக்குள்ளே வைச்சு ஆட்டிக் கிட்டிருக்க முடியுங்களா?" அவன் உள்ளங்கையை வீணையின் முன்னால் நீட்டி, "ஏம்மா, நான் சொல்றது நிசந் தானே?" என்றான்.

"விளக்கமாகச் சொல்லு, தாணுவதி!" என்றார் சச்சிதானந்தம்.



"ஆமாம், உங்க மகள் ரயிலிலே வந்தாக இல்லை சொன்னாங்க. இந்த அம்மா காரிலே வந்தாங்களே; இவங்களை உங்க மகள்னு வேடிக்கைக்குத் தானே சொன்னீங்க?"

"வேடிக்கை இல்லை, தானாவதி! இவள் என் மகள்தான். என்னவோ நான் செய்த புண்ணியம் இவள் ரயிலிலே வராமல் போனாள். ஆமாம் தானாவதி, ரயிலிலே வந்திருந்தா இவள் இங்கே வந்திருக்க மாட்டாள்; நேரே அந்த ஆண்டவன் கிட்டே போய்ச் சேர்ந்திருப்பாள். அந்தப் புண்ணியவான் நம்ம புஷ்பவனம் பிள்ளை மகன் சுந்தரம் இவளைப் பட்டணத்திலேயிருந்து காரிலே கூட்டிக்கிட்டு வந்து உசிரோட கொண்டு சேர்த்தான். உனக்குத் தெரியாது தானாவதி? மதராஸ் பாஸெஞ்ஜர் கோவிலூருக்குப் பக்கத்திலே தடம் புரண்டு போச்சே!"

"மாமா!" என்று இடிஇடி யெனச் சிரித்தான் தானாவதி. "என்ன சொன்னீங்க? சுந்தரம் இவங்களை உசிரோடே கொண்டு வந்து சேர்த்தானா?"

"ஆமாம், தம்பி! அவன் என் மகளைப் பட்டணத்திலே பார்த்து, காரிலே போகலாம் என்று கூட்டிக்கிட்டு வந்தான். என் வயிற்றிலே பாலை வார்த்தான்."

"உங்க வயித்திலே பாலை வார்த்தது சுந்தரம் இல்லீங்க; இந்தத் தானாவதி ஐயா. ஏம்மா, நான் சொல்றது நிசந்தானே?" அவன் தலை மீண்டும் வீணாவிடம் திரும்பியது.

"விளக்கமாகப் பேசு, தம்பி! சும்மா புதிர் போட்டுக்கிட்டே போனியானா?"

"விளக்கம் என்னங்க விளக்கம்? உங்க மகளையே கேட்டுப் பாருங்களேன், ஐயா மட்டும் இன்னைக்கு என் மயிலை ரெண்டையும் அப்படிச் சுண்டி இழுத்து ஒதுக்கியிருக்காட்டி, சுந்தரம் உங்க மகளை உசிரோட வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்திருப்பானா? கார் விடறானாமில்லே கார்; ரோடே அவர் சொந்தம் போலே."

"என்னம்மா நடந்தது வீணா? வழியில் விபத்து ஏதேனும் ஏற்பட இருந்ததா?" என்று கேட்டார் சச்சிதானந்தம்.

"இவரையே கேளுங்க, அப்பா!" என்று அசட்டையாகக் கூறினாள் வீணா.

"என்ன விஷயம் தம்பி? சுந்தரம் கார் ஓட்டறத்திலே புலி ஆச்சே!"

"ஆமாம் புலிதான் புலி! ஆனால் இந்தத் தானாவதி, சிங்கம் என்கிறது அவனுக்குத் தெரியாது போலிருக்கு. அவரு பட்டணத்திலே படிச்சுட்டா பெரிய மனுசராப் போயிடுவாரோ? ஒரு மட்டு மரியாதை, ஆளு தராதரம் வேண்டாமுங்க?"

"வழியில் ஏதாவது தகராறு நடந்ததா, வீணா?" என்று கலக்கத்துடன் மகளையே கேட்டார் சச்சிதானந்தம்.

"நான் சொல்றேனுங்க. அவங்க பாவம், என்ன கண்டாங்க? சிவனேன்னு

முன்னுலே குந்தியிருந்தாங்க. காலையிலே நான் வயற்கரையைப் பார்க்க வண்டி கட்டிக்கிட்டுப் போனேனுங்க. தொரை காரை விட்டுக்கிட்டு வந்தாரு. எதிரிலே என்ன வருது, யாரு வராங்க என்கிற தைக் கூடக் கவனிக்காம. அதுதான் சொன்னேனுங்களே, ரோடே அவர் ரோடு என்கிற கணக்கிலே......''

வீணு குறுக்கிட்டாள்: ''ஏன் அப்பா! நம்ம ஊரிலே ரோடு கிராம முனிசிப்புக் குத்தான் சொந்தமோ?'' என்று அவள் வெடுக்கென்று கேட்டாள்.

''ரோடு மட்டும் என்னம்மா? ஊரே கிராம முனிசிப்புக்குத்தான் சொந்தம். உங்க வடநாட்டு மகாராசாவுக்கு அவர் ராச்சியம் சொந்தமாயிருக்கலே, அதைப் போலே. கேட்டுப் பாருங்களேன் உங்க அப்பாவை. என்னங்க நான் சொல்றது நிசந்தானே?''

''அந்தக் காலம் மலையேறிப் போச்சு, ஐயா! ராஜாக்களிடமிருந்தெல்லாம் ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். அது தெரியாதா உங்களுக்கு?'' என்றுள் வீணு.

''ஆங்...ராசாக்களிட்டேயிருந்து பிடுங் கிக்கிடலாம். ஆனல் இந்தத் தானுவதி கிட்டே மட்டும் எந்தப் பயலும் வந்துக் கிட முடியாது. வந்தான்னு வாலை ஒட்ட வெட்டிட மாட்டேன்? கேட்டுப் பாருங்க ளேன் உங்க அப்பாவை. ஏங்க, நான் சொல்றது நிசந்தானே?''

''ஆமாம் அம்மா! தானுவதி நல்லவங்க ளுக்கு நல்லவன்; பொல்லாதவங்களுக் குப் பொல்லாதவன்!'' என்று கூறினர் சச்சி தானந்தம்.

''விசயத்தை முழுக் கக் கேளுங்க'' என்று தொடர்ந்தான் தானு வதி. ''காரில் வந்துக் கிட் டிருந்தாங்களா? வந்திக்கிட் டிருந் தாங்க. நான் பாட் டுக்குப் போய்க்கிட் டிருந்தேனு? போய்க் கிட்டேயிருந்தேன். காரும் வண்டியும் கிட்டத்திலே கிட்டத் திலே வந்துக்கிட்டிருந்தது. அப்போ ஒரு மனுசன் என்ன செய்யணுங்க? ஏங்க, நீங்களே சொல்லுங்க, என்னங்க செய்யணும்?''

''ரெண்டு பேரும் ஆளுக்குக் கொஞ்ச மாக வண்டியை ரோட்டிலே ஒதுக்கி ஓட்டிக்கிட்டுப் போகணும்'' என்றுர் சச்சிதானந்தம்.

''போகணுமா, இல்லையா? அவன் காரை ஒதுக்கி ஓட்டினுனு கேளுங்க. கேட்டுப் பாருங்களேன் உங்க மகளே.''

''நீங்கள்தான் காரை ஒதுக்கி ஓட்ட இடமில்லாமல் நடு ரோட்டில் வண்டியை விட்டுக் கொண்டு வந்தீர்களே; எத்தனை ஹாரன் அடித்தும் ஒதுக்க வில்லையே!'' என்றுள் வீணு.

''ஆங்...ஹாரனும் ஹாரனு! இவன் காரிலேதான் புதுசா அந்தப் 'பீப்பீ' வைச் சிருக்கிற கணக்கிலே சும்மா சும்மா அமுக் கிக்கிட்டே வாரானுங்க. அட, ஒரு மனுசன் எதிராலே வண்டி ஓட்டிக்கிட்டு வரா னேன்னு நினைப்பு வேண்டாம் ஒருத்த னுக்கு? அதெல்லாம் எங்கிட்டே எந்தப் பயலானுலும் சரி, மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக்கிடணும். மரியாதை தெரியாதவன் எவனுயிருந்தாலும் நான் சும்மா வுட்டுட மாட்டேன். கேட்டுப் பாருங்களேன், உங்க அப்பாவை. ஏங்க, நான் சொல்றது நிசந்தானே?''

''ஆமாம், ஆமாம்'' என்று தலையைப் பலமாக ஆட்டினுர் சச்சிதானந்தம்.

வீணுவுக்குக் கோபம் வந்து விட்டது. ''என்னப்பா ஆமாம் என்கிறீங்க? காரிலே ஹாரன் எதுக்காக அப்பா வைச்சிருக் கிறாங்க? இவரைப் போலே முன் னுலே எதிராலே எங்கோ கவன மாக வருகிறவங்களுக்கு அறி விப்புச் செய்கிறதுக்காகத் தானே?'' என்று கேட்டாள்.

''இப்போப் பேசினீங்களே, இது நியாயமான பேச்சு. முன் னுலே எதிராலே கவனமில் லாம வருகிறவங்க ளுக்குச் சத்தம் கொடுக்க வேண்டி யதுதான். ஆனல் நான் நல்லா முழிச் சுப் பார்த்துக்கிட்



டுத்தானே வரேன். கண் அவிஞ்சா போச்சு எனக்கு. எதிராலே கார் வருவது தெரியாமல் போக?"

"கார் வருவது தெரிந்தால் நீங்கள் வண்டியை ஏன் ஒதுக்கி ஓட்டியிருக்கக் கூடாது?"

"எதுக்காக ஒதுக்கணும்? என்னுங்க சும்மா இருக்கிறீங்க? சொல்லுங்களேன் நான் எதுக்காக வண்டியை ஒதுக்கணுமின்னு. நான் யாரு? என் கௌரதை என்ன? யாரோ ஒருத்தன் புதுசாக் காரு விட்டுக்கிட்டு வரான்னு அவனுக்காக நான் வண்டியை ஒதுக்கிடறதா?"

வீணு கோபமாக ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் சச்சிதானந்தம் வாதாடாதிருக்குமாறு சாடை காட்டினார். இருந்தாலும் அவனால் கோபத்தை முழுவதும் அடக்கிக் கொள்ள முடியவில்லை. "என்னவோ உங்கள் நல்ல காலம். அவர் கார் ஓட்டுவதில் கெட்டிக்காரர். சட்டென்று சரியான சமயத்தில் 'பிரேக்' போட்டுக் காரை நிறுத்திவிட்டார். இல்லாவிட்டால் நீங்கள், உங்கள் மாடுகள், வண்டி எல்லாம் பக்கத்து வயலிலே விழுந்திருப்பீங்க."

"ஆங்.........பிரேக் போட்டுட்டாராமில்லே பிரேக்கு! இவரு பிரேக்குப் போட்டதிலேதான் ஆபத்து ஏற்படாமப் போயிடிச்சாக்கும். காரிலே ஒரு பொம்பிள்ளே உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்துட்டு ஐயா வண்டியை ஒடிச்சுத் திருப்பினேனு, பிழைச்சீங்களோ?"

"தாணுவதி வண்டி ஓட்டுவதில் கெட்டிக்காரன் அம்மா, மாடுகள் அவன் சொல்படி கேட்கும்" என்று பேச்சை மாற்ற முயன்றார் சச்சிதானந்தம்.

"ஆயிரம் தரத்துக்குச் சொல்லுங்க அதை. இல்லாட்டி உங்க மகளை உசிரோட கொண்டு வந்து சேர்த்திருப்பானு அவன்? ரொம்பத் தலைக் கனங்க புஷ்பவனம் மாமா மகனுக்கு. கண்டாச் சொல்லி வையுங்க, இந்தத் தாணுவதி சிங்கத்துக்கிட்டே வாலாட்ட வேணுமின்னு. அது கிடக்கட்டுங்க. மகள் வரதுன்னு எங்கிட்டே முன்னாடி ஒரு வார்த்தை சொல்லாம இருந்துட்டீங்களே? ஊர்க்காரங்களையெல்லாம் கூட்டிப் பூர்ண கும்பம் வைச்சு கலெக்டர் ஐயாவை வரவேற்கிறதுபோல வரவேற்றிருப்பேனே? கெடுத்துட்டீங்களே! எங்க சச்சிதானந்தம் மாமா மகள். டாக்டருக்குப் படிக்கப் போட்டு வராங்க. ரெண்டாம் மனுசங்களுக்குத் தெரியாமல் வரும்படி ஆயிடிச்சே!" தாணுவதி அதிருப்தியுடன் சூள் கொட்டினான்.

"அதென்னவோ தாணுவதி, உன் நினைப்புப் போலவே ஆயிப்போச்சு. வீணு இங்கே வந்தபோது ஊரே கூடிக்கிடந்தது நம்ம வீட்டு வாசலிலே."

"ஊர் கூடி இருந்திச்சா? எந்தப் பயல் கூடினான் என்னைக் கேட்காமல்?"

"அடடா! நான் சொன்னதைத் தப்பா எடுத்துக்கிட்டியே! ரயில் தடம் புரண்டு போச்சு. வீணு அதிலே வந்து கொண்டிருந்தான் என்கிறது தெரிஞ்சு, விசாரிக்கிறதுக்காக வந்தாங்க அப்பா, அவங்க."

"அப்போ, மகள் வர சேதியை ஊரெல்லாம் சொல்லியிருக்கிறீங்க; எங்கிட்டே மட்டும் சொல்லலே, அப்படித்தானே?"

"அப்படி ஒண்ணும் இல்லே, தம்பி! அவங்களாகவே சேதி தெரிஞ்சு வந்து கூடிட்டாங்க. நான் யாருக்கிட்டேயும் சொல்லலே. என் மகள் வருவது எனக்குப் பிரமாதம். ஊர்க்காரர்களுக்கு என்ன?"


"அது என்ன அப்படிச் சொல்லீட்டீங்க? அவங்க என்ன சாதாரண ஆளாகவா வந்திருக்கிறாங்க? ஆளுங்க உசிரே டாக்டர் கையிலேதானே இருக்குது, மாமா? அவங்க நினைச்சா நம்மைத் தீர்த்துக் கட்டணுமின்னாலும் கட்டலாம்; பிழைக்க வைக்கணுமின்னாலும் வைக்கலாம். ஏம்மா, நிசந்தானே?"

'இது கொஞ்சம் பைத்தியம்' என்று புரிந்து கொண்டான் வீணு. ஆகையால் அவனும் இப்பொழுது "ஆமாம், ஆமாம்" என்று தலையசைத்தான்.

"ஆமாம், மாமா! ஆசுபத்திரி எங்கே தொடங்கப் போறீங்க? எப்போ தொடங்கப்போறீங்க?" என்றான் தாணுவதி.

"அதை இனிமேல்தான் ஆலோசிக்கணும் தம்பி. வீணு இன்னைக்குத்தானே வந்திருக்கிறான்."

"சட்டுனு ஆலோசியுங்க. நம்ம ஊருக்கு ஒரு ஆசுபத்திரி இல்லாத குறையை அம்மாதான் போக்கணும். நீங்க ஒரு



நாள்-கிழமை பார்த்து முடிவு பண்ணுங்க. பாக்கி விசயங்களைக் கவனிச்சுக்க நான் இருக்கேன். சமாய்ச்சுப் போடுவோம், சமாய்ச்சு!"

"பெத்த பிள்ளைக்கு ஒப்பாக நீ இருக்கிறபோது எனக்கு என்ன கவலை தாணுவதி!"

"மாமா! உங்க பிரியம் இருக்குதே, அடடா! அதை என்னென்னு சொல்லுவேன்! என்னென்னு சொல்லுவேன்! நீங்க ஆயிரத்திலே ஒருத்தருங்க; ஆயிரத்திலே ஒருத்தர். அது இல்லாமப் போனா ஒரு மகாராசாவே வந்து உங்களைத் திவானா இருக்கணுமின்னு கூட்டிக்கிட்டுப் போயிருப்பாரா? ஏம்மா, நான் சொல்றது நிசந்தானே?"

"ஆமாம், ஆமாம்." வீணா இப்பொழுது தலையை முன்னிலும் பலமாக ஆட்டினாள். அவளுக்கு உள்ளூற எரிச்சல் பற்றிக் கொண்டுவந்தது; 'எப்பொழுதடா தொலைவான் இவன்?' என்றிருந்தது.

நல்ல காலமாகத் தாணுவதி உடனே கிளம்பி விட்டான். அவன் எழுந்துகொண்டே, "தைலம்மா அத்தை எங்கே காணும் மாமா?" என்று கேட்டான்.

"அடுக்களையில் உறங்கிக்கிட்டிருக்கா."

"உறங்கிக்கிட்டிருக்கிறாங்களா? இப்போது மதியத்திலா? அவள் எங்கே, தங்கச்சி?"

"மாலாவா? அவள் கொல்லையிலே கீரைப் பாத்திக்குத் தண்ணீர் ஊற்றிக்கிட்டிருப்பாள்."

"சரிங்க, அப்போ நான் வரேன். சட்டுனு ஒரு நாளைப் பாருங்க; ஆகப்பத்திரியைத் தொடங்கிடுவோம். அம்மா பட்டணக்கரையிலே இருந்தவங்க; அவங்களுக்கு இந்தக் கிராமத்திலே வேலை வெட்டி இல்லேன்னுப் பொழுதுபோகாது. ஏம்மா, நான் சொல்றது நிசந்தானே?"

வீணா ஒன்றும் சொல்லாததைக் கண்டு, "நிசந்தான், நிசந்தான்" என்று சச்சிதானந்தமே கூறினார்.

"போய் வரேங்க டாக்டரம்மா. கவனிச்சிக்கிடுங்க. எங்க உசிரெல்லாம் இனிமே உங்க கையிலேதானே இருக்கு!" அவன் நகைச்சுவையுடன் ஏதோ பேசிவிட்டவன்போல் கடகடவென்று சிரித்தான். மரியாதையை முன்னிட்டு அவனுக்குக் கைகூப்பினாள் வீணா.

"போய் வா, தம்பி!" என்று அனுப்பி வைத்தார் சச்சிதானந்தம்.

மலை ஒன்று நகர்ந்து செல்வதுபோல் மெல்ல நகர்ந்தான் தாணுவதி. கூடத்தைத் தாண்டியதும் அவன் தோளில் கிடந்த துண்டைத் தலையில் முண்டாசாகக் கட்டிக்கொண்டு, திரும்பி வீணாவை ஒரு தடவை நன்றாகப் பார்த்துச் சிரித்துவிட்டுச் சென்றான்.

அவன் தலை மறைந்ததும், "சரியான பைத்தியம்!" என்று கைகொட்டிக் கலகலவென்று சிரித்தாள் வீணா.

"பைத்தியம் மட்டும் இல்லை அம்மா; கொஞ்சம் போக்கிரியுங்கூட. இதை விரோதிச்சுக்கிட்டா என்ன செய்யுமின்னு சொல்ல முடியாது. ஆனால் நம் வரையில் நல்லவன். நாமும் அவன்கிட்டே நல்லதனமாகவே நடந்துக்கிடணும்" என்று எச்சரித்தார் சச்சிதானந்தம்.

"யாருகிட்டே மாமா? என்கிட்டேயா?" என்று கேட்டுக்கொண்டு, தாவணி நுனியில் ஈரக் கையைத் துடைத்தவாறு அங்கே வந்தாள் மாலா. கீரைப் பாத்திகளுக்குத் தண்ணீர் ஊற்றிய அழகில் அவளுடைய பாவாடை, தாவணி எல்லாம் நனைந்திருந்தன. முகத்தில் முத்து முத்தாக வேர்வை கோத்திருந்தது.

"சே! என்ன மாலா, மேலெல்லாம் இப்படி நனைத்துக்கொண்டு......நீ கீரைக்குத் தண்ணீர் விட்ட லட்சணம்! சீக்கிரம் வேறு பாவாடை, தாவணி மாற்றிக்கொண்டு வா. ஈரத்துணியோடு இருந்தால் உடம்புக்கு ஆகாது" என்று வீணா அருகில் சென்று அவளுடைய நனைந்த உடைகளைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே சொன்னாள்.

"அதெல்லாம் ஒன்றும் செய்யாது. பயப்படாதே அக்கா! தினம் இரண்டு தடவைகள் பாத்திக்குத் தண்ணீர் விடுகிறேன். இரண்டு தடவை ஆற்றங்கரையிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறேன். தாவணியும் பாவாடையும் நனையத்தான் செய்கின்றன. மாற்றிக் கொண்டே இருக்க முடியுமா? எல்லாம் தன்னாலே உலர்ந்துவிடும். கிராமாந்திரத்துப் பெண்களுக்கு இதெல்லாம் சகஜம் அக்கா!" என்றாள் மாலா.

"அந்தாம் இனிமேல் உடம்புக்கு வந்தால் வீட்டிலேயே டாக்டர் இருக்கிறாள். அவளுக்கு என்ன கவலை?" என்று கூறிச் சிரித்தார் சச்சிதானந்தம்.

"சாப்பிட வர்றியா தம்பி? வெய்யிலு உச்சிக்கு வந்திடிச்சே. காலையிலேகூடச் சரியா ஒண்ணும் தின்னலை" என்று உறக்கம் கலைந்து விழித்த தைலம்மாள், பெரிய கொட்டாவி ஒன்றை விட்டுக்கொண்டே அடுக்களையிலிருந்து அழைத்தாள்.

"ஆமாம் மாமா, எழுந்திருங்கள்; நேரமாகி விட்டது. நாங்களும் இன்று உங்களுடனே சாப்பிடுகிறோம்" என்றாள் மாலா.

சச்சிதானந்தம் எழுந்து கை கால் கழுவக் கொல்லைக் கிணற்றடிக்குச் சென்றதும், "யார் அக்கா வந்திருந்தாங்க?" என்று கேட்டாள் மாலா.

"யாரோ, தாணுவதிப் பிள்ளையாமே; நம்ம ஊர் கிராம முனிசீப்பாமே. ஒரு பைத்தியம்......"

"வந்துட்டானா? நினைச்சேன். எந்த வீட்டிலே எந்தப் பெண்பிள்ளை வந்திருக்கிறாளென்று அவனுக்கு எப்படித்தான் மூக்கிலே வேர்க்குமோ, தெரியவில்லை!" என்று அருவருப்புடன் கூறினாள் மாலா.

"அப்படிப் பட்டவனா அவன்?" என்று வியப்புடன் கேட்டாள் வீணா.

"ஆமாம், அவன் உடல், கண், மனம் எல்லாமே விஷம். அவன்கிட்டே ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும், அக்கா!" என்றாள் மாலா.

இதைக் கேட்டபோது வீணாவுக்குத் தாணுவதி போகும்போது தன்னைப் பார்த்த பார்வையும், சிரித்த சிரிப்பும் நினைவுக்கு வந்தன. (தொடரும்)


KANTA CHAP



சுப திருஷ்டி

ரவீந்திரநாத் டாகுர்

காந்திசந்திரனுக்கு அப்படி வயது ஆகிவிடவில்லை; இளம் வயசுதான். மனைவியை இழந்த பிறகு அவன் மறுதாரம் கொள்வதில் நாட்டம் செலுத்தவில்லை. பறவை விலங்கினங்களை வேட்டை ஆடுவதிலேயே தன் மனத்தைச் செலுத்தினான். அவன் நல்ல உயரம்; உறுதி ஏறிய ஒல்கிய உடற் கட்டு; கூரிய பார்வை; பிசகாது குறி வைப்பவன்; மேற்குப் பிரதேசத்தவரைப்போல் உடைகள் அணிபவன். எப்போதும் அவனுடன் கூட்டாளிகள் இருப்பார்கள். குஸ்தியில் வல்ல ஹீராஸிங்கு, சக்கன்லால்; பாடகன் கான்சாகேப்; வாத்தியம் வாசிக்கும் மியாங் சாகேப். இவர்களைத் தவிர வேலை வக்கு இராத நண்பர்களுக்கோர் குறைவில்லை.


வேட்டைமீது விருப்புள்ள நாலைந்து நண்பர்களுடன் ஒரு மார்கழி மாத நடுவில் காந்திசந்திரன் நைநீலி என்னும் பெரிய ஏரிக்குச் சென்றான். இரண்டு பெரிய படகுகளில் வேட்டை கோஷ்டியினர் தங்கியிருந்தனர். இன்னும் நாலைந்து தோணிகளில் இவர்களுக்குப் பணி புரியும் வேலையாட்கள் சிலர் இருந்தனர்.

ஒரு கிராமத் துறையருகில் இவர்கள் இறங்கியிருந்தனர். இதனால் கிராமப் பெண்டுகள் வழக்கம் போல் துறைக்கு வந்து நீராடுவதையும், நீர் மொண்டு செல்வதையும் நிறுத்திக் கொண்டனர். பறவை இனங்களைச் சுடும் துப்பாக்கியின் வேட்டுக்கள் ஊரையும் நீர் நிலையையும் அதிரடச் செய்யும். மாலை மழுங்கி இரவு வந்ததும் காந்திசந்திரன் கோஷ்டியார் நடத்தும் சங்கீதக் கச்சேரி, அக்கிராம மக்களின் இன்துயிலைக் கலைத்துவிடும்.

ஒருநாள் காந்திசந்திரன் படகில் அமர்ந்து, துப்பாக்கியைத் தன் கையாலேயே துடைத்துச் சீர்ப்படுத்திக் கொண்டிருக்கையில் அருகிலே எங்கோ வாத்தின் குரல் கேட்கவே திரும்பிப் பார்த்தான். ஓர் இளம் பாவை, இரு வாத்துக் குஞ்சுகளைத் தன் மார்போடு அணைத்துப் படித்துறையில் வீற்றிருந்தாள். அந்த இடத்தில் நீர் ஆழமாக இல்லை; எத்தனையோ வகையான பாசி நிரம்பியிருந்தது. அந்தப் பெண், வாத்து இரண்டையும் நீரிலே நீந்தவிட்டு, அவை தொலைவில் போகாதபடி, அன்பும் எச்சரிக்கையும் கொண்டு காத்து நின்றாள். வேறு நாட்களாக இருந்தால் அந்தக் குஞ்சுகளை வெகுதூரம் போக விட்டிருப்பாள். ஆனால் ஊரில் வேட்டையாடும் கூட்டம் ஒன்று வந்திருப்பதை உணர்ந்ததால் தானோ என்னவோ, சற்று அச்சமே அவளுக்கு.

அப்பாவை அசாதாரணமான அழகி. பிரமன், அப்பொழுதுதான் அச்செல்விய உருவைச்செய்து முடித்தது போலவே இருந்தது. அவளுக்கு வயது என்ன என்பதைக் கூறுவது சற்றுக் கடினம். நல்ல மலர்ச்சி அடைந்த அங்கங்கள்; ஆனால் களை சொட்டும் அவள் முகத்தில் எண்ணங்களால் ஏற்படும் எந்தவிதமான 'மாசு மருவும் இல்லை. இளமைப் பருவத்தில் தான் வந்து நிற்பதைப் புரிந்து கொள்ளாத பேதை அவள்.

காந்திசந்திரன் சிறிது நேரம் துப்பாக்கியைப் பழுது பார்ப்பதிலிருந்து தன் மனத்தைத் திருப்பினான். படித்துறையில் ஓர் அழகி வீற்றிருக்கும் காட்சி அவனை வியப்பில் ஆழ்த்தியது. இதுபோன்ற இடத்தில் இத்தகைய பெண் ஒருத்தி



சுப திருஷ்டி: கன்னிகை கண் நோக்குதல் வங்காளி மண முறையில் ஒரு சடங்கு. மணமகளின் முகத்திரையை விலக்கி மணமகன் அவளை நோக்குதல்.

தென்படுவான் என்று எதிர்பார்க்கவே இல்லை. அரசனுடைய அந்தப்புரத்தை விட இந்த இடமே இவ்வெழில் வடிவத்தாளுக்கு ஏற்ற நிலைக்களன். தங்கச் செப்பில் இருப்பதை விடச் செடியில் இருந்தால்தான் மலர் அழகுடன் விளங்கும்! சரத் காலமானபடியால், மெல்லிய பனியும், இளம் வெய்யிலும் சேர்ந்த அக்காலை வேளையில் நீரில் அசையும் நாணற் புல் பளபளத்தது. அச் சூழ்நிலையில் தென்படும் இளமை யார்ந்த அந்தப் புது முகம் மயல் கொண்ட காந்திசந்திரனின் கண்முன் வரப்போகும் விழாவின் இனிய சித்திரமதை எழுப்பியது.

மந்தாகினியின் கரைமிசை தருணியான மலைமடந்தை இரு அன்னப் பறவைகளை மார்பில் ஏந்தி வருகிறான்! காளிதாஸன் இந்த அழகிய கட்டத்தைத் தன் காவியத்தில் வரைய மறந்தே விட்டான்!

அச்சமயம் திடுமெனத் துறையருகில் இருந்த அவ்விளம்பாவை விதிர்த்திட்டு முகத்தில் அழுகைக்குறி தோன்றத் தன் வாத்துக்குஞ்சு இரண்டையும் எடுத்து மார்பில் அணைத்துப் புரிபடாத குரலில் கூவிக்கொண்டே துறையை விட்டு ஓடினாள். இதன் காரணத்தை அறியக் காந்திசந்திரன், வெளியே வந்து பார்த்தான். அவனுடைய ரசிக நண்பர்களில் ஒருவன் வெறும் விளையாட்டாக அந்தப் பெண் திகில் கொள்வதற்கு அவள் நீரில் விட்டிருக்கும் வாத்துக்களைக் குறி வைத்து வெற்று வேட்டு ஒன்றைச் சுட முற்படுவதைக் கண்டு அவன் பின்புறமாக வந்து, துப்பாக்கியைப் பிடுங்கி, அவன் கன்னத்தில் ஓசை எழ ஓர் அறை விட்டான் காந்திசந்திரன். தன் முயற்சிக்கு இப்படி ஒரு ரஸபங்கம் ஏற்படவே அந்த ரசிகன் தொப்பென உட்கார்ந்து விட்டான். காந்திசந்திரன் தன் இடத்துக்குத் திரும்பி மீண்டும் துப்பாக்கியைப் பழுது பார்க்கலானான்.



காந்திசந்திரன் கரையில் இறங்கிப் பறவைகளைச் சுட ஒவ்வொரு தோப்பு புதரும் விடாமல் திரிந்துவிட்டுப் பளிச்செனத் திகழும் ஒரு கிராம இல்லத்தின் அருகில் வந்து நின்றான். விசாலமான முற்றம்; இறவானம் சுற்றிலும் உள்ள திண்ணையில் வரிசையாகத் தானியம் வைக்கும் குதிர்கள். நன்றாகப் பெருக்கிச் சுத்தமாக விளங்கும் மாடுகள் கட்டும் பெரிய தொழுவம். அதன் பக்கத்தில் இலந்தை மரத்தின் கீழ், காலையில் பார்த்த அப்பெண், காயம் பட்ட புறா ஒன்றைத் தன் மார்பில் வைத்துக் கண்ணீர் வெடித்து வர அழுது கொண்டிருந்தாள். தன் மேலாடையின் நுனியைப் பானையிலுள்ள நீரில் தோய்த்து, புண்பட்ட அப்புறாவின் அலகில் மெல்லப் பிழிந்துகொண்டிருந்தாள். அவ்வீட்டார் வளர்க்கும் பூனை அவள் மேல் காலை வைத்து எம்பி, அந்தப் புறாவைக் கவரவே நோக்கியது. அவ்விளம் பாவை நடுநடுவே பூனையின் மூக்கை விரலால் தட்டி அதன் கொடூர எண்ணத்தை அடக்கி வந்தாள்.

ஒல் அடங்கிய அப்பகல் வேளையும், அந்தக் கிராம இல்லத்தைச் சுற்றிலும் பரவியிருந்த ஓர் அமைதியும், காந்திசந்திரனின் மனத்துள் உருக்கம் மலிந்த சித்திரம் ஒன்றை எழுப்பின. இலைகள் அடர்ந்திராத அம்மரத்தினின்று வரும் நிழலும் வெயிலும் அப்பாவையின் மடிமீது படிந்தன. நீர்த் துறையில் அன்று இளங்காலையில் காட்டு மோகினியோ என்று ஐயுறும்படி தோன்றியவள் அன்று பகற்பொழுது சந்தடியற்ற அம்மாட்டுத் தொழுவத்தின் நிழலில் அன்பே உருவெடுத்து வந்த வீட்டு லட்சுமி போலவே காட்சி தந்தாள்.

துப்பாக்கியும் கையுமாகத் திடுமெனக் காந்திசந்திரன் அங்கு தோன்றவே பாவை திடுக்கிட்டுப் போனாள். திருடன் கையும் பிடியுமாக அகப்பட்டுக் கொண்டது போலாயிற்று. 'புறாவை என்னவோ நான் சுடவில்லை. இதை அவள் நம்புவதற்கு என்ன செய்வது?'—இவ்வாறு சங்கடப்பட்டான் காந்திசந்திரன். அவளோடு எந்த மாதிரி பேசுவது என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதே யாரோ 'ஸுதா' என்று அழைக்கும் குரல் வந்தது.

அவள் சட்டென எழுந்தாள். மீண்டும் 'ஸுதா' என்ற குரல் வந்தது. அப்பொழுது அவள் புறாவுடன் விரைவாகக் குடிலை நோக்கிச் சென்றாள். 'அழகிக்கு ஏற்ற பெயரே...ஸுதா...அமுதம் போன்றவள்' என்று காந்திசந்திரன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

பிறகு காந்திசந்திரன் தன்னைச் சேர்ந்தவர்களிடம் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு, தெரு வழியாக அந்தக் குடில் வாசலின் எதிரே வந்து நின்றான். நடு வயதைக் கடந்த மழித்த முகத்தில் சாந்தம் ஒளிரும் பிராம்மணர் ஒருவர் ரேழியில் வீற்று ஹரிபக்தவிலாஸத்தைப் பாராயணம் செய்து கொண்டிருந்தார். பக்திச் சுவை சொட்டும் அவருடைய முகத்தின் சாயலோடு, கருணை வழியும் கண்களுடைய அப்பாவையின் முக ஜாடை ஒத்திருப்பது போல் பட்டது காந்திசந்திரனுக்கு.

வணக்கம் செலுத்தியதும் காந்திசந்திரன் அப்பெரியவரை நோக்கி, ''ரொம்பத் தாகமாயிருக்கு, சுவாமி! ஒரு செம்பில் குளிர்ந்த ஜலம் கொடுத்தால், தேவலே'' என்றான். பிராம்மணர் சட்டென்று எழுந்து புதிதாக வந்த ஆளை வரவேற்று உட்காரச் சொல்லியதும், உட்புறம் சென்று ஒரு பித்தளைத் தட்டில் பதாஸா (இனிப்புப் பட்சணம்) சிலவற்றையும், ஒரு வெண்கலப் பாத்திரத்தில் நீரும் எடுத்து வந்து தம் கையாலேயே அதிதி முன்பு வைத்தார்.

காந்திசந்திரன் நீரை அருந்தியதும், அவருக்குத் தான் இன்னாரென்பதை அறிமுகப்படுத்தினான். ''சுவாமி! என்னால் உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டியிருந்தால் சொல்லுங்கள். முடிந்ததைச் செய்கிறேன்'' என்றான்.

பெரியவரான நவீன பானுஜ்யே, ''அப்பனே! எனக்குச் செய்ய வேண்டிய உதவி என்ன இருக்கு? ஸுதா என்று எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். விவாகம் ஆகிற வயசு அவளுக்கு. அவளை ஒரு நல்ல வரனுக்குக் கொடுத்து விட்டால் நான் பெரிய கடமையிலிருந்து விடுபட்டவனாவேன். அவளுக்கு எங்குமே நல்ல வரன் குதிரவில்லை. வெளியிடங்களில் போய்த் தேடுவதற்கான சாமர்த்தியமோ எனக்குப் போதாது. நான் வழிபடும் கோபிநாத விக்கிரகத்தைத் தனியே விட்டு எங்கும் நகரவே மாட்டேன்'' என்றார்.

''நீங்கள் முடிந்தால் என்னை வந்து பாருங்கள். நான் படகில்தான் இருப்பேன். வரனைப் பற்றி நாம் யோசனை செய்வோம்'' என்றான் காந்திசந்திரன்.

இந்தப் பக்கம் காந்திசந்திரன் அனுப்பிய ஆட்கள் இந்த பானுஜ்யேயின் பெண் ஸுதாவைப் பற்றித் தகவல் அறிந்து கொண்டு வந்தார்கள். ''அந்த மாதிரி நல்ல சுபாவமுள்ள பெண் எங்குமே கிடைக்க மாட்டாள்'' என்றனர்.

மறுநாள் நவீன பானுஜ்யே படகில் வந்து காந்திசந்திரனைச் சந்தித்தார்.



டால்கம் பௌடர்
யூ டி கோலான்
லிப்ஸ்டிக்
பேஸ் பௌடர்
டஸ்டிங் பௌடர்
Lakmé
லக்மே
அழகின் அலங்காரத்திற்கென
ப்ரஞ்சு முறையிலிருந்து
தயாரிக்கப்பட்ட சாதனங்கள்
Lakmé
லக்மே ஒரு டாடா தயாரிப்பு

சுந்தர் திரும்பவும் வெற்றியடைகிறான்

வலைக்கு மேலே இக்கட்டான நிலைமையில் பந்து வந்துகொண்டிருந்தது. இச்சந்தர்ப்பத்திலும்கூட, சுந்தர் துள்ளி எழுந்து பந்தை ஒரேயடியாக அடித்து ஆட்டத்திற்கு வெற்றியை அளித்தான். எந்த விளையாட்டு விளையாடுவதற்கும் சாமர்த்தியம், வேகம், சக்தி இவைகள் அவசியமாக வேண்டும். தவறாத பயிற்சி சுந்தருடைய சாமர்த்தியத்தையும், வேகத்தையும் அபிவிருத்தியாக்கியது. என்றாலும் தினசரி க்ளுகோவிடா சாப்பிடுவதன் மூலம் வேண்டிய சக்தி அவனுக்கு கிடைக்கிறது. வேலையிலோ, விளையாட்டிலோ அதிகம் உழைக்கும்போது சரீரத்திற்கு அத்யாவசியமான ரத்தத்துடன் சீக்கிரம் கலந்துகொள்ளும் சர்க்கரை க்ளுகோவிடாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

* * *

டீயிலோ, காப்பியிலோ, பாலிலோ அல்லது குளிர்ந்த பானங்களிலோ க்ளுகோவிடாவைச் சேர்த்து அருந்துங்கள். ஒரு கப் அல்லது கிளாஸுக்கு, ஒன்று முதல் மூன்று தேக்கரண்டியளவு க்ளுகோவிடாவை கலந்து சாப்பிடுங்கள். அது எளிதில் கரையக்கூடியது.





இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்:
பாரி அண்டு கோ லிட்.

அதிக சக்திக்கு
அவசியம் வேண்டியது

க்ளுகோவிடா

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.

தரையில் உடல் படியும்படி அவரை வணங்கியதும், தானே அவர் பெண்ணை மணக்க விரும்புவதாகத் தன் எண்ணத்தை வெளியிட்டான் காந்திசந்திரன்.

இப்படி ஒரு பாக்கியம் எதிர்பாராமல் வருவதைக் கண்டபொழுது பிராம்மணருக்குக் குரல் தழுதழுத்தது. களிப்பு மிகுதியால் அவருக்குப் பேசவே முடியவில்லை. இதென்ன பிரமையோ என்றுகூட அவர் நினைத்தார்.

''என்னுடைய பெண்ணை நீங்கள் நிச்சயமாகவா மணக்க விரும்புகிறீர்?'' என்று கேட்டார்.

''உங்கள் சம்மதம் இருந்தால் நான் மணக்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றான் காந்திசந்திரன்.

''ஸுதாவை மணந்து கொள்வீரா?''

'ஆமாம்!''

''அவளை நீங்கள் ஒருதரம் பார்க்க வேண்டாமா?''

''எதற்கு? சுபதிருஷ்டியின் போது தான் பார்க்கப் போகிறேனே...''

நவீன பானுர்ஜியே, குரலில் குழைவுடன், ''என்னுடைய ஸுதா ரொம்ப அடக்கமான பெண். வீட்டுக் காரியமெல்லாம் நன்றாகச் செய்வாள்...நீங்கள் அவளைப் பாராமலேயே மணந்துகொள்ளத் துணிந்து விட்டீர்கள். நான் வேறு என்ன சொல்வது? என் ஸுதா கணவன் சொல்லை மீறாத பத்தினிப் பெண்ணாக இருக்க வேண்டும். நிமிஷமேனும் மனமாற்றமிராமல் நீங்கள் வாழவேண்டும். உங்கள் இருவருக்கும் மங்களம் உண்டாகும்...இதுவே என் உள்ளத்திலிருந்து வரும் ஆசி'' என்றார்.

அதற்குமேல் காந்திசந்திரன் தாமதிக்க விரும்பவில்லை. தைமாதமே விவாகத்தை முடித்துவிட நிச்சயம் செய்துவிட்டான்.

அந்தப் பக்கத்திலேயே பெரிய மனிதரான மஜும்தாரின் பழைய மாளிகையில் இந்தத் திருமணம் நடைபெற ஏற்பாடும் ஆயிற்று. முகூர்த்த நாள் வந்தது. மணமகன் மேள வாத்தியத்துடன் தீவட்டி ஒளியில் வந்து சேர்ந்தான்.

சுபதிருஷ்டியின் போது மணமக்கள் ஒருவரையொருவர் முதன்முறையாகப் பார்த்துக் கொண்டனர். டோபர் (மணமகள் அணியும் மலர் மகுடம்) அணிந்து அதன் மறைவில் நாணத்தால் கனிந்த முகமாகவும் அதில் சந்தனப் பூச்சுடனும் இருக்கவே ஸுதாவை நன்றாகக் கவனிக்கக் காந்திசந்திரனுக்கு வாய்ப்பு இல்லை. உள்ளத்திலிருந்து எழும் களிப்பின் மயக்கு அவனைத் தடுத்தது. பூவமளியில் தன் இனியாளைக்காண அவன் அறையினுள் நுழைந்தபோது வெட்கத்தால்



பதுங்கிக் கொள்ளும் அப்பேதை மணமகளின் முகமலரை மறைக்கும் 'கோம்டா' (முட்டாக்கு)வைத் திறந்துவிடுமாறு காந்திசந்திரனை ஓர் அம்மாமி தூண்டினாள்.

அவ்வாறு செய்ததும், காந்திசந்திரன் திடுக்கிட்டான். இவள் அல்லவே அந்தப் பெண்? இதயத்தையும் மூளையையும் ஒரு பேரிடி தாக்கியது போன்ற வேதனைக்கு உள்ளானான். அவ்வழகிய பள்ளியறையின் சோபையே விளக்கு அணைவதுபோல் அவன் கண்முன் இருண்டது. புதுமணமான அவ்விள மடந்தையின் முகம் அவ் அந்தகாரச் சுழலில் எங்கோ மறைந்தே போயிற்று.

காந்திசந்திரன் இரண்டாவது முறை விவாகம் செய்து கொள்வதில்லையென்று தன்னுள் ஓர் உறுதி பூண்டிருந்தான். இப்படி அதிர்ஷ்ட தேவதை அவனை எள்ளி நகையாடும் ஒரு நிலைக்கு வந்துவிட்டதே அந்தப் பிரதிக்ஞை! எத்த

னையோ கட்டழகிகளெல்லாம் அவனுக்கு மாலையிடக் காத்திருந்தனர். உறவினர்களுடைய வேண்டுகோளையெல்லாம் அலட்சியம் செய்தான். உயர்வான குலம், நல்ல குடும்பம், ஏராளமான சீர் வழுமை, இவற்றைப் புறக்கணித்துவிட்டு ஒரு பட்டிக்காட்டில் வாழும் ஏழை பிராம்மணன் மகளை மணந்தது போன்ற வெட்கக்கேடான விஷயம் எதுவுமே இல்லை. உலகத்தவர் முன்னால் எப்படி அவன் முகத்தைக் காட்ட முடியும்!

அவனுடைய கோபமெல்லாம் முதலில் மாமனாரை நோக்கிப் பாய்ந்தது. மோசடியாக ஒரு பெண்ணைக் காட்டிவிட்டு வேறு ஒருத்தியை மணக்கத் தந்தானேயென்று. ஆனால் யோசித்துப் பார்த்தான் — 'அந்தப் பிராம்மணன் என்னவோ பெண்ணைப் பாரென்றுதான் சொன்னான். ஆனால் நான்தானே வேண்டாமென்றேன். என்னுடைய புத்தி பிசகால்தான் இந்த ஏமாற்றத்துக்குள்ளானேன்; இதை யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் இருப்பது நல்லது.'

மருந்தை என்னவோ விழுங்கியாகிவிட்டது. ஆனால் அதன் கசப்பு நாக்கைவிட்டுக் கொஞ்சத்தில் நீங்குமா? பூவமணியின் போது நடக்கும் வேடிக்கை தமாஷ் எல்லாம் காந்திசந்திரனுக்குப் பிடிக்கவே இல்லை. தன் மீதும், உலகத்தவர் மீதும் அடங்காச் சினம் பொங்கி எழுந்து அவன் உடலையும் உள்ளத்தையும் எரிக்கத் தொடங்கியது.

அச்சமயம், அவன் பக்கத்தில் இருந்த மணமகள் பயத்தினால் உரக்கக் கூவினாள். அவள் மடி மீது எங்கிருந்தோ ஒரு முயல் குட்டி தொப்பெனப் பாய்ந்து ஓடியது. மறுகணமே நீர்த்துறையில் பார்த்த அந்தப் பெண் அங்கே தோன்றி அதைப் பிடித்து ஆதரவுடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். "ஐயோ, அம்மா, இந்தப் பைத்தியம் வந்து விட்டதே" என்று அங்கிருந்த சிலர் அவளை வெளியே போகச் சொல்லி அதட்டினர். ஆனால் அவள் துளிக்கூட லட்சியம் செய்யவில்லை; மணமக்கள் எதிரே சப்பரித்துக்கொண்டு உட்கார்ந்து குழந்தைகளுக்குரிய ஆவலுடன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். வீட்டைச் சேர்ந்த வேலைக்காரி அவளை இழுத்துச் செல்ல வந்தபொழுது, "அவள் பாட்டுக்கு உட்கார்ந்திருக்கிறாள் பாவம்...... இருக்கட்டுமே" என்றான் காந்திசந்திரன்.

அந்தப் பெண்ணை விளித்து, அவன், "உன் பெயர் என்ன?" என்றான்.

அவள் அதற்கு நேராக விடை தராமல், தலையை உருட்டினாள். அங்கே கூடியிருந்த அத்தனை பெண்டுகளும் 'கொல்'லென நகைத்தனர். காந்திசந்திரன் மீண்டும் வினவினான்—"உன் வாத்துக் குஞ்சு நன்றாக வளர்ந்திருக்கிறதா?" சற்றும் கூச்சமிராமல் மௌனமாக அவனையே நோக்கினாள் அந்தப் பேதை.

விஷயம் புரியாமல் காந்திசந்திரன் மறுபடியும், "உன்னுடைய புறாவுக்குக் காயமெல்லாம் ஆறிவிட்டதா?" என்றான். இதனாலும் பலனில்லை. பெண்டுகள் சிரிக்கவே, எல்லோரும் தன்னை ஏமாற்றுவதாகவே நினைத்துக் கொண்டான் காந்திசந்திரன்.

கடைசியில் அவனுக்குச் சரியான தகவல் கிடைத்தது: அந்தப் பெண் செவிடு, ஊமை. அந்த ஊரில் உள்ள பட்சி மிருகங்களுக்கெல்லாம் அவள் துணைவி. அன்று 'ஸுதா!' என்று யாரோ கூப்பிட்டதும் அப்போது அவள் எழுந்து சென்றதும் வெறும் உடனிகழ்ச்சியே தவிர வேறு ஒன்றுமில்லை.

காந்திசந்திரனின் உள்ளம் சட்டென ஒரு திகிலில் மூழ்கி எழுந்தது—'இவளை எனக்குத் தராமல் உலகம் வஞ்சனை செய்ததென்று நினைத்தேனே. ஏதோ நல்லவேளை, நான் மீண்டேன். இந்தப் பெண்ணின் முழு வரலாறு தெரியாமல், நான் அவள் தந்தையிடம் சென்று இவளை மணக்கக் கோரியிருந்தால், அவன் ஆட்சேபமின்றி அவளை என் காலில் கட்டியிருப்பானே...பிழைத்தேன்.'

தன் கைக்கு எட்டாத அந்தப் பெண்ணைப்பற்றிய மோகம் காந்திசந்திரன் மனத்தை அலைத்துக்கொண்டிருந்தவரை அவன் சொந்த மனைவியின் விஷயத்தில் குருடனாகவே இருந்தான். தன் அருகிலிருந்த, ஆறுதல் தரக் கூடிய, ஓர் இன்ப ஊற்றை அடியோடு மறந்திருந்தான். அவன் மனத்துள் மோகத்தை எழுப்பிய ஒரு கட்டழகி, ஊமை, செவிடு என்பது தெரிந்ததும் அவனுடைய கண்முன் நின்ற ஒரு மாயத்திரை பட்டென அறுந்து விழுந்தது. தொலைவில் நின்ற பொருள் மங்கி மறைந்தது. அண்மையில் உள்ளது கண்ணுக்குத் தெற்றெனப் புலனாகியது. 'பெருந் தவறினின்று தப்பினோம்' என்று பெருமூச்செறிந்து காந்திசந்திரன், லஜ்ஜையினால் ஒடுங்கிக் கிடக்கும் தன் ஸுதாவை ஒரு நன்னாள், தனிமையில் அணுகி மெல்ல அணைத்து, முகம் நிமிர்த்திக் கண்ணாறக் கண்டான். குறுக்கே நின்ற தயக்கம் யாவும் விலகியது. அகத்திலிருந்தும், அகல் விளக்கிலிருந்தும் சுடர்விட்ட ஒளியில் காந்திசந்திரன் அவளிடம் தண்ணிய அழகையும், பொறையின் செவ்வியையும் கண்டான். அன்று நவீன பானுஜ்யே தந்த ஆசி பலித்ததெனத் தெளிந்தான்.

தமிழ் கூறும் நல்லுலகம்

பம்பாய் அமெச்சூர் நாடக மன்றத்தினர் கடந்த பதினேழு ஆண்டுகளாக நாடகக் கலைக்கு அரும்பணி ஆற்றி வருகிறார்கள். அவர்கள் சுமார் நாற்பது நாடகங்களைப் பல முறைகள் நடத்தியிருக்கிறார்கள். பம்பாயில் மட்டுமல்லாமல் சென்னை நாக்பூர் போன்ற இடங்களிலும் நடத்தியிருக்கிறார்கள்.

இவ்வாண்டும் கடந்த ஏப்ரல் 11, 12 தேதிகளில் ஸ்ரீ தேவன் எழுதிய 'துப்பறியும் சாம்பு'வையும், ஸ்ரீ ரா. மா. எழுதிய 'நல்லதும் கெட்டதும்' நாடகத்தையும் நடத்தினார்கள். இரண்டு நாடகங்களும் மிகச் சிறப்பாக அமைந்தன. எல்லோருமே மிக நன்றாக நடித்தனர்.

நாடகக் கலைக்கு அரிய தொண்டாற்றிவரும் மாதுங்கா நாடக சங்கத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

★

ஸ்ரீராமநவமி உற்சவம் இந்தியாவெங்கும் நடக்கும் ஒரு உற்சவமாகும். பம்பாயிலும் ஆஸ்திக சமாஜத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஏப்ரல் 8-ந் தேதியிலிருந்து 17-ந் தேதி வரை ஒன்பது நாட்களும் உற்சவம் சாஸ்திரோக்தமாக நடந்தேறியது. முதல் நாள் ஸ்ரீ ஜி. பி. கபாடியா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். தினந்தோறும் கதாகாலட்சேபங்களும் சகஸ்ரநாம அர்ச்சனையும் நடந்து பம்பாய் ஆஸ்திகப் பெருமக்களை பக்திபரவசத்தில் ஆழ்த்தின. ஸ்ரீராமநவமி அன்று பகவானுக்கு நடந்த பாலாபிஷேகமும், பிறகு அவர் வீதி வலம் வந்ததும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

★

கலாசதன் மாணவிகளான பேபி ரேணுகா, பேபி ஹேமமாலினி இவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் பம்பாயில் பிப்ரவரி 28ந் தேதியன்று விமரிசையாக நடந்தேறியது.

திரு கே. எஸ். ராகவன் அவர்களின் புதல்வியான பேபி ஹேமமாலினியும், திரு டி. கே. மணி அவர்களின் புதல்வியான பேபி ரேணுகாவும் நன்றாக ஆடினார்கள். குழந்தைகளின் நடனத்தை ரசிகர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

★

இந்தோர் வாழ் தென்னிந்தியர்கள் 17-1-59 அன்று ஒன்றுகூடி ஸ்ரீராம நவ புண்ணிய தினத்தை ஸ்ரீ ரவீந்திரன் அவர்களின் இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அவ்வமயம் அகில இந்திய ரேடியோ இந்தோர் நிலையத்தின் மியூசிக் ப்ரொடியூசர் ஸ்ரீ நட்கர்ணி அவர்களின் ஹிந்துஸ்தானி சங்கீதமும், ஸ்ரீ ராஜம் ஐயங்காரின் புல்லாங்குழல் கச்சேரியும் ஸ்ரீ செல்லம் ஐயர் ஸ்ரீமதி சரோஜா சர்மா ஆகியோர்களின் இன்னிசைக் கச்சேரியும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. இன்னிசைக் கச்சேரிக்கு மிருதங்கம் வாசித்த ஸ்ரீ ரவீந்திரன் அவர்கள் கூடியிருந்த அனைவரது பாராட்டுதலையும் பெற்றார்.

★


சோலாப்பூரில் கடந்த மூன்று வருடங்களாக ஸ்ரீராமநவமி மகோற்சவம் சிறப்பாக நடந்து வருகிறது. இவ்வருடமும் காலை மாலை இரு வேளைகளில் பூஜையுடனும் இன்னிசைக் கச்சேரியுடனும் மூன்று நாட்கள் ஸ்ரீராமநவமி விழா நடந்தது. துவக்க விழாவை பம்பாய் ரயில்வே சர்வீஸ் கமிஷன் காரியதரிசி திரு ஆர். சீனிவாசன் ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீமதி ஞானா சுப்பிரமணியம், திரு எம். ஆர். சுப்பிரமணியம், திரு நாராயணசாமி, சுலோசனா ராகவன் முதலியவர்களின் இன்னிசைக் கச்சேரிகள் விழாவைச் சிறப்பித்தன.

★

கோவை ஸாயிபாபா பகுதியிலுள்ள குருகுலம் பாலர் பள்ளியின் வருஷாந்திர தினம் சென்ற ஏப்ரல் 14ந் தேதி திரு கே. கப்ரி அவர்களின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சாதாரணப் பள்ளிக்கூடங்களைப் போலல்லாது சூழ்நிலைக் கேடுகளாலும் குடும்ப நிலைக் குறைபாடுகளாலும் சீர்கேடுற்ற "பிரச்னை" மாணவர்களுக்குக் கல்வியை மனோதத்துவ விஞ்ஞான ரீதியில் புகட்டும் இல்லம் இந்தக் குருகுலம். இப்புனிதமான பணியைத் தமது சொந்த முயற்சியினால் சிறப்பாக நடத்தி வருகிறார் திரு டி. எஸ். சங்கரன். இம்மாதிரி ஆடம்பரமற்று ஆனால் மிகவும் முக்கியமான சேவை புரிந்து வரும் ஸ்தாபனங்களுக்குத்தான் பொதுமக்களுடைய ஆதரவும் அரசாங்கத்துடைய ஆதரவும் அதிகமாகத் தேவை. ஆனால் சாதாரணமாகக் கிடைப்பதில்லை. ஒருகால் ஏதாவது உதவி கிடைத்தாலும் போதிய அளவுக்கு இருக்காது. இதை எடுத்துக் காட்டிப் பேசினார் தலைவர் திரு கே. கப்ரி. குருகுல இல்லத்தின் தலைவருடைய பணியைப் பரிவுடன் பாராட்டினார்.



பாத யாத்திரை



வேலையின் விளைவாக 8 மணி நேரம் நாற்காலியின் வடிவமும், ஓய்வின் விளைவாக 9 மணி நேரம் கட்டிலுக்கேற்ற வடிவமும் பூண்டு உயிர் வாழுகிறது கந்தையாவின் உடம்பு. மீதியிருக்கும் 7 மணி நேரத்தில் அது 'என் என்றால் என்னையாக' ஏதும் செய்துவிடுவதாகச் சொல்ல முடியாது—உட்கார்ந்து சாப்பிடும் அபிநயம் நீங்கலாக.

அன்று மாலை வழக்கப்படி தமது காரியாலய நாற்காலியிடமிருந்து சமாதி நீங்கியபின், அவர், புதுமண வாழ்வு புகுந்த நண்பரொருவர் வழங்கிய சிற்றுண்டியை வயிற்றில் இறக்குமதி செய்துவிட்டு, நண்பர்கள் புடைசூழ பஸ் க்யூவைச் சரணடைந்தார். ஒரு மணி நேரம் கழிந்தும் பஸ்ஸே தென்படாததால் அவர் உடம்புக்கு நெடுநேரம் லாந்தல் கம்பத்தின் வடிவம்!

“இதைவிட நடந்தே போய்விடலாம், நடராஜா!” என்று குரல் கொடுத்தார் கந்தையாவின் மேலதிகாரி கந்தரமூர்த்தி. ஆனால் இப் 'பாத யாத்திரைப் பிரேரணை' நடைமுறை'க்கு வருவதற்கு முட்டுக்கட்டையாக, கந்தையாவின் கால்கள் தயங்கின. கந்தரமூர்த்தி சொன்னார்:

“ஒங்க காலிலே தெம்பு இல்லாமலில்லே, கந்தையா. இருக்கற தெம்பை உபயோகிக்கறதில்லே நீங்க. உங்களைச் சொல்றதைவிட, மனுஷனை சோம்பேறியாக்கிட்ட இந்தப் பாழும் பஸ், ரெயில், ஆட்டோரிக்ஷா நாகரிகத்தைத்தான் கொறை சொல்லணும்; இன்னைக்கு தேதிக்கி இந்தப் புண்ணிய பூமியிலே நடந்தாலே 'பாத தாமரைகள் நொந்திடுமோ'ன்னு ஆயிப்போச்சு மனுஷன் கதி!”

“சொன்னதும் நெனப்பு வருதே. எங்க சங்கத்திலே ஒரு தரம் 'பாத யாத்திரை'ங்கற தலைப்பிலே பிரசங்கம் செய்யவேண்டிய புண்ணியவான் ஒருவர் மூணு மணி நேரம் லேட்டா வந்து பஸ் கிடைக்காததைச் சாக்காகச் சொன்னார்!” என்று கூறி, க்யூவில் கலகலப்பை உண்டுபண்ணினான் நையாண்டி நடராஜன்.

“புறப்படலாமா? என்று நெருக்கினார் மேலதிகாரி கந்தரமூர்த்தி: கந்தையாவோ “... வந்து ... நம்ம வீட்டிலே பொண்சாதிக்கு உடம்பு சொகமில்லே. அதனாலே, போனதும் நானே சமையல் செய்தாகணும். 8 மணி நேரம் வேலை செய்துட்டு 2 மைல் நடந்த பெறவு எப்படி நான் ...?” என்று இழுத்த வண்ணம் நகரலானார்.



DL/P.1A-19 TM

"நடையை வேகமாப் போடுங்க, கந்தையா. உங்க காலிலே தெம்பு இல்லாமலில்லே, பால் சாப்பிடற பழக்கமுண்டா?" என்றார் சுந்தரமூர்த்தி.

"எருமைப் பால் சாப்பிடுகிறாரோ ஒருவேளை, இவ்வளவு சோம்பேறியாக இருக்க? என்று இடைவெட்டினான் நையாண்டி. கந்தையா சொன்னார்:

"எங்க வீட்டுக்கு ஒரு சைக்கிள்தான் வந்து பால் கொடுத்துட்டுப்போகுது!"

எதையோ திடும்மென்று நினைத்துக்கொண்ட மேலதிகாரி "ஒரு விஷயம், நடராஜ். நம்ப கந்தையாவுக்குக் கல்யாணம் ஆனபோது நம்ப ஆபீசுக்காரங்க அவருக்கு ஒரு சைக்கிளைப் பரிசாக் கொடுத்திருக்கறாம்..." என்றார்.

"கரெக்டு! அதை விட்டுவிட்டு ஒரு வெள்ளித் தட்டையும் ஒரு கட்டிலையும் கொடுத்த பலன், மனுஷன் தினமும் சாப்பிடறான், தூங்கறான்! சைக்கிளைக் கொடுத்திருந்தோம்னு ஆபீசுக்காவது நேரத்திலே வருவாரில்லே, பஸ் மேலே பழியைப் போடாமே!" என்று நடராஜன் சளசளத்துவிட்டுக் கந்தையாவிடம் திரும்பி "இப்பத்தான் கண்டுபிடிக்கக் கிளம்பிவிட்டீங்களோ, கந்தையா, ஆகார விஷயத்திலேயாவது தூங்கிடாம முழிப்பா இருங்க!" என்றான்.

"மெய்தான், கந்தையா. நீங்க சாப்பிடற சாப்பாட்டுலே நல்லநல்லதா நாலுவித சத்தும் வைட்டமின்களும் கலந்திருந்தா, உடம்புலே தெம்பில்லேங்கற பல்லவிக்கே இடமிருக்காது" என்றார் சுந்தரமூர்த்தி.

"மருந்துக் கடைக்காரர் கொடுத்தால்தான் நமக்கு வைட்டமின் என்கிறதில்லே. காய்கறிக் கடைக்காரரிடமும் கிடைக்குது, பலசரக்குக் கடைக்காரரிடமும் கிடைக்குது!" என்றான் நையாண்டி.

"பலசரக்குக் கடைக்காரரிடமா?" கந்தையாவின் முகத்தில் கேள்விக் குறி!

"சரியாப் போச்சு! பலசரக்குக் கடைக்காரரிடம் கிடைக்காதா 'டால்டா' வனஸ்பதி?" என்று எதிர்க் கேள்வி போட்டுக்கொண்டு விளக்கலானார் சுந்தரமூர்த்தி: "எல்லாவித சமையலுக்கும் உபயோகப்படற உயர்தர தாவரக் கொழுப்பான 'டால்டா'விலே வைட்டமின்கள் சேர்க்கப்பட்டிருக்கு—நோய்நொடிங்களை எதிர்த்து நிற்கத் தெம்பு தருகிற வைட்டமின் ஏ, பல்லுக்கும் எலும்புக்கும் வலிவு தருகிற வைட்டமின் டி, இரண்டும் சேர்க்கப்பட்டிருக்கு!



"அப்போ நான் கால் ராத்தல் வாங்கிப் பார்க்கட்டுமா?" என்று கேட்டுக்கொண்டார் கந்தையா. மேலதிகாரி சிரித்துவிட்டுக் கூறினார்: "அப்படியெல்லாம் கிடைக்காது கந்தையா. ஸீல் செய்த டின்களிலேதான் கிடைக்குது 'டால்டா' பிராண்ட் வனஸ்பதி. தூசி படிய, ஈ மொய்க்க, திறந்த டின்களிலே விற்கக்கூடியதல்ல 'டால்டா'. 'டால்டா'ன்னு சொல்லி எதையாவது கொடுத்தனுப்பக் கூடாதுன்னு கடைக்காரன்கிட்ட கண்டிப்பா சொல்லிப்புடுங்க. டின் மேலே பேரீச்ச மர அடையாளம் இருக்கான்னு பார்த்து வாங்குங்க!" சிந்தனைப் பாதையில் நடை போட்டது கந்தையாவின் மனது!

"எங்கேய்யா போயிகிட்டே இருக்கீங்க, கந்தையா. வீடு வாசல், சீக்குப் பொன்சாதி, சமையல் எல்லாத்தையும் தாண்டி எங்கே நழுவறீங்க?" என்ற நையாண்டி நடராஜனின் எக்காளக் குரலும், இரும்புப் பிடியும் கந்தையாவை சிலிர்க்கச் செய்தன; இதென்ன ஆச்சரியம்! வீட்டு வாசலுக்கே அல்லவா வந்துவிட்டார், எப்படி நடந்துவிட்டார் இரண்டு மைல்களை! அந்த உற்சாகத்திலே, "எங்கே போகிறேனா? கடைக்குப் போகிறேன் ஒரு 'டால்டா' டின் வாங்க, இது தெரியவில்லையா!" என்று வெடுக்கென்று கந்தையா அந்த நையாண்டியின் நாக்கை அடக்கியபோது ஆளே மாறிப்போயிருந்தார்: பேச்சிலே ஒரு துடுக்கு, நடையிலே ஒரு மிடுக்கு!

DL/P. 18-14 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்

தனிப்பெருந் தலைவன்

பாத்திரங்கள் :

பெர்னுந்தோ—காஸ்டில் தேசத்து அரசன்
உராகா — அரசகுமாரி.
டியேகோ—ரோடரிகோவின் தந்தை (பிரபு)
கோமேஸ—ஷிமேனுவின் தந்தை. (பிரபு)
ரோடரிகோ—கதாநாயகன் (பிரபு)
சாஞ்சோ — ஷிமேனுமேல் காதல் கொண்டவன் (பிரபு)
அரியஸ், அலான்சோ — பிரபுக்கள்.
ஷிமேனு—கதாநாயகி, கோமேஸின் புத்திரி.
லெயனோரா — அரசகுமாரியின் தாதி.
எல்விரா — ஷிமேனுவின் தாதி.

காட்சி 4.

[ஷிமேனு. எல்விரா]

ஷி: என்ன சங்கடம் எல்விரா! எதை விரும்புவது, எதை வெறுப்பது என்ற நிலையான திட்டமே இல்லை. இருவரும் என் நிமித்தம் யுத்தம் செய்யப் போகிறார்கள். அதன் முடிவு எப்படியாகினும் எனக்குத் துயரமே. ஒன்று என் தந்தையின் மரணம் பழி வாங்கப் படாமல் போகும்; அல்லது என் காதலன் இறக்கும்படியாக நேரும்.

எல் : மற்றொரு விதமாய் நோக்கி ஆறுதல் அடையுங்களேன். ஒன்று ரோடரிகோ இடைப்பார், அல்லது தந்தைக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்கல் பூர்த்தியாகும். எப்படியானாலும் சரி; உங்கள் புகழும் நிலைத்து நிற்கும், உங்களுக்கு ஒரு கணவனும் கிட்டுவான்.

ஷி : ஆ! நினைத்துப் பார்த்தால் என்ன கொடுமை? நான் மணம் செய்துகொள்ள வேண்டியவன் என் ரோடரிகோவைக் கொன்றவனாயிருப்பான், அல்லது என் தந்தையைக் கொன்றவனாயிருப்பான். என் மனம் அல்லாடுகிறது. இந்தச் சண்டையின் முடிவை நினைத்தால் எப்படியும் பயங்கரமாயிருக்கிறது. பழி வாங்கல், காதல், இவ்விரண்டுமே என்னைத் துன்பப்படுத்தும். இவையிரண்டுமே என்னை விட்டுத் தொலையட்டும். என்னைப் பரிசோதிக்கும் இறைவனே! இந்தச் சண்டையில் இருவருக்கும் வெற்றி தோல்வி இல்லாமல் செய்வாயாக.

எல் : ஏன் இப்படி மனத்தைப் புண்படுத்திக் கொள்ள வேண்டும்? ஏன் இடைவிடாமல் ரோடரிகோமேல் துவேஷத்தை வைத்து அவர் மரணத்தை விரும்ப வேண்டும்? ரோடரிகோ அவசியம் வெற்றி பெற்று விடுவார். அதன்மேல் சமாதானப் படுங்கள்; நிபந்தனைக்கு இணங்கி உங்கள் கணவராவார்; உங்கள் ஆசை நிறைவேறியதாகும்.

ஷி : என்னை எவ்வளவு வேதனைப்படுத்துகிறாய், எல்விரா! அவன் வெற்றியடைந்தால் அவனை ஏற்றுக் கொள்ளுவேன் என்று நினைக்கிறாய்? இந்த யுத்தமும், அரசர் ஆணையும் என் தந்தையின் மரணத்துக்கும் என் கடமையின் தீவிரத்துக்கும் போதுமானதாகாது. ரோடரிகோ சாஞ்சோவை வெல்லலாம். ஆனால் அத்துடன் என்னையும் வென்ற கீர்த்தியை அவனுக்குக் கொடுக்கப் போவதில்லை; அரசர் நிபந்தனை யென்னவாயிருந்தாலும், என் கௌரவத்தைக் காக்க நான் இன்னும் ரோடரிகோவுக்கு ஆயிரக்கணக்கான எதிரிகளை உண்டாக்குவேன்.

எல் : இந்த அகம்பாவம் உங்களுக்கு வேண்டாம்; அதற்குத் தண்டனையாக சகனே ஒருவரும் உங்களுடைய பழி வாங்குதலை நிறைவேற்றப் போவதில்லை என்று விதிக்கலாம், எச்சரிக்கை! கௌரவத்துடன் இனி மௌனமாயிருக்கலாம், வரும் சந்தோஷத்தை அங்கீகரிக்கலாம் என்பதை இன்னும் ஏற்றுக் கொள்ளாமல் ஏன் முரண்டுகிறீர்கள்? நீங்கள் நினைக்கும் கடமை நிறைவேறுவதின் பயன்தான் என்ன? ரோடரிகோ இறந்தால் உங்கள் தந்தை மீண்டுவிடுவாரா? ஒரு மரணத்தால் ஏற்பட்ட துன்பம் போதாதா உங்களுக்கு? மற்றொரு மரணமும் மற்றொரு துன்பமும் வந்துதான் ஆக வேண்டுமா? உங்கள் பிடிவாதத்தைப் பார்த்தால் உங்களுக்கென்றே பிறந்தவனாயிருக்கும் ரோடரிகோவை நீங்கள் அடைவதற்கு அருகதையில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. இறைவனே அவருக்கு மரணத்தைக் கொடுத்து உங்களுக்கு சாஞ்சோவைக் கணவனாக்கினாலும் ஆக்கலாம்.

ஷி ஆ! அதை நினைப்பூட்டி என் துயரத்தை ஏன் பெருக்குகிறாய், எல்விரா? முடியுமானால் அவ்விருவருக்கும் வசப்படாமல் இருப்பதையே விரும்புகிறேன். ஆனால் என் மனம் ரோடரிகோவிடமே செல்கிறது: காதலால் அல்ல; அவன் தோல்வியடைந்து விட்டால் நான் சாஞ்சோவுக்கு உரியவளாக வேண்டுமே என்ற பயத்தால்.

[சாஞ்சோ கத்தியுடன் வருகிறான்]

ஆ! இதென்ன காண்கிறேன். ஐயோ, எல்லாம் சர்வநாசம், எல்விரா!

காட்சி 5

[சாஞ்சோ. ஷிமேனு எல்விரா. சாஞ்சோ இரத்தம் தோய்ந்த கத்தியோடு ஓடி வருகிறான்.]

சாஞ் உங்கள் பாதத்தில் இந்தக் கத்தியைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டு........

ஷி : ஆ! ரோடரிகோவின் இரத்தம் தோய்ந்த கத்தியா? பாவி! என் அன்

எம்.வி.சுப்பிரமணியம் ஐ.ஸி.எஸ் (ரிடையர்ட்)

புக்குப் பாத்திரமானவனை நீக்கியபின் என் கண்முன் தோன்ற உனக்கு எப்படி மனம் துணிந்தது? என் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் காதலே! இப்பொழுது நீ அனுதாபப்படு! உனக்கு இனிப் பயமில்லை. என் தந்தையின் ஆவி திருப்தியடைந்தது. நீ இனிமேல் அடங்கி நிற்க வேண்டாம். ஒரே கத்தி வீச்சால் என் கௌரவம் நிலை நின்றது. என் அன்பு நிராசையாயிற்று. ஆனால் அது வெளிப்பட்டு விட்டது.

சாஞ்: நீங்கள் கொஞ்சம் சாவதானமாய்.......

ஷி: இன்னும் பேசுகிறாயா? நான் வழிபடும் வீரனைக் கொலை செய்த பாவி? நீ அவனைச் சதி செய்தே கொன்றிருப்பாய்; அவனைப் போன்ற பராக்கிரமசாலி உன் போன்ற எதிரிக்கு ஒரு பொழுதும் நேரில் தோல்வி அடைந்திருக்க மாட்டான். என்னிடம் ஒன்றும் எதிர்பார்க்காதே; நீ எனக்கு இயற்றியது சேவையல்ல; என்னைப் பழி வாங்குவதாக நினைத்து என் உயிரையே வாங்கி விட்டாய்

சாஞ்: ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது; நான் சொல்வதை முழுவதும் கேளாமல்......

ஷி: ஓகோ! நீ உன் வெற்றியைப் புகழ்ந்து கொள்வதையும், அவன் துர்ப்பாக்கியம், என் குற்றம், உன்னுடைய பராக்கிரமம், இவைகளை விவரிப்பதையும் நான் பொறுத்துக் கொண்டு கேட்கவும் வேண்டுமோ?

காட்சி 6

[பெர்னாந்தோ, டியேகோ, அரியாசோ, அலான்சோ, சாஞ்சோ, ஷிமேனு, எல்விரா.]

ஷி: பிரபோ! உங்களிடமிருந்து மறைத்து வைக்க நான் எவ்வளவோ முயற்சி செய்ததை இனிமேலும் மறைத்து வைக்க அவசியமில்லை. அவனைக் காதலித்தேன்; அது உங்களுக்கே தெரியும்; ஆனால் அவ்வளவு அருமையானவனை என் தந்தைக்குப் பழி வாங்குவதற்காகப் பலி கொடுக்கவே நிச்சயித்தேன். அவ்வாறு என் காதலுக்கு மேல் என் கடமையை மதித்தது உங்களுக்கே தெரியும். ஆனால் ரோடரிகோ இறந்ததும் நான் அவனுக்குக் கடும் வைரியாயிருந்தது மாறி, துக்கக் கடலில் மூழ்கிய காதலியாயிருக்கிறேன். என் தந்தைக்கு ஏற்பட்ட அவமானத்துக்குப் பழி வாங்கும் கடமை முற்றிற்று; இப்பொழுது இறந்த காதலனுக்காகக் கண்ணீர் விடுவதே கடமையாயிற்று. எனக்கு ஆதரவு காட்ட வந்த சாஞ்சோ எனக்கு நாசத்தையே இழைத்தான்; ஆனால் அவனுக்கு வெகுமானம் நான்! பிரபோ! என்மேல் இரக்கம் கொள்ளுங்கள். நான் சாஞ்சோவுக்கு மனைவியாகும் அந்தக் கொடிய வேதனையிலிருந்து என்னை விடுவியுங்கள். எனக்கு நாசத்தை இழைத்த வெற்றிக்குப் பதிலாகச் சாஞ்சோவுக்கு என் செல்வங்களெல்லாம் கொடுக்கிறேன். என்னை விட்டு

தாய்க்கு அடுத்தபடியாக
குழந்தைக்கு
க்ரைப்பினால்தான்



யார்தான் சந்தோஷத்தை விரும்பாதவர்கள்? குழந்தை உள்பட எல்லோரும் சந்தோஷத்தை விரும்புகிறார்கள் குழந்தைக்கு தாயின் சீராட்டலும், மணி சத்தமும் இன்பத்தை அளிக்கலாம். ஆனால் இவை மனதிற்குதான் சிறிது சந்தோஷத்தை அளிக்கின்றன.

உடம்பு ஆரோக்கியத்தினால் சந்தோஷமடைவது எப்படி? குழந்தைக்கு தேக ஆரோக்கியமே நீடித்த சந்தோஷத்தை கொடுக்கக்கூடியது. குழந்தைகளுக்கு வயிற்றுக் கோளாறுகளையும், பல் முளைக்கும் சமயத்தில் ஏற்படும் வயிற்றுப் போக்கின் உபத்திரவத்தையும் தடுக்க சக்திவாய்ந்த க்ரைப்பினாலை எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஜண்டு
க்ரைப்பினால்

மிகச்சிறந்தது......சக்தி வாய்ந்தது



ஜண்டு பார்மஸூடிகல்
வொர்க்ஸ் லிட்.,
கோகலே ரோட் ஸௌத், பம்பாய்-28

Graphic Z 50


விட்டும்; நான் கன்னி மாடத்தில் புகுந்து, என் தந்தையையும் காதலனையும் ஒருங்கே இடைவிடாமல் நினைத்துக் கொண்டு இறுதிவரை கண்ணீர் வடித்துக் கொண்டிருக்க அவகாசம் ஏற்பட வேண்டும். அது போதும் எனக்கு.

இயே: பார்த்தீர்களா, பிரபோ! அவளுடைய உண்மைக் காதலை அவள் வாயாலேயே கூறி விட்டாள்!

பெர்: ஷிமேனா! நீ நினைத்தது வேறு; முழு விவரமும் தெரிந்து கொள்ளாமல் ஆத்திரப்பட்டுப் பேசுகிறாய். ரோடரிகோ இறக்கவில்லை; சாஞ்சோவை வென்றான்; சாஞ்சோ உன்னிடம் வந்து பொய் சொல்லியிருக்கிறான் போலிருக்கிறது.

சாஞ்: இல்லை, பிரபோ! ஷிமேனா நான் சொல்வதற்குச் செவி கொடுக்காமல் தன் பதற்றத்தினால் தன்னையே ஏமாற்றிக் கொண்டாள். உண்மை உரைக்கவே அவளிடம் வந்தேன். அவள் காதலிக்கும் ரோடரிகோ உத்தம வீரன். என்னை வென்று நிராயுதபாணியாய் ஆக்கிவிட்டு வீரமுழக்கம் செய்தான் அவன். "பயப்படாதே. வெற்றியை வேண்டுமானாலும் உறுதியின்றி வைத்திருப்பேனே யன்றி ஷிமேனாவுக்காக யுத்தம் செய்ய வந்தவனைக் கொல்ல மாட்டேன். இப்பொழுது அரசர் முன்போய்த் தோன்றுவது என் கடமை; ஆகையால் எனக்காக ஷிமேனாவிடம் சென்று நடந்ததைச் சொல்லி, என் வெற்றியின் அறிகுறியாக உன் கத்தியைக் கொண்டு போய்க் கொடு" என்று ரோடரிகோ என்னிடம் சொல்லி அனுப்பியதை அவளிடம் போய்க் கூறவே நான் சென்றேன். இந்தக் கத்தியைப் பார்த்து அசாவசியமாகத் தவறாக அனுமானம் செய்து கொண்டு விட்டாள் ஷிமேனா. நானே வெற்றிபெற்று வருவதாய் நினைத்துக் கோபித்துக் கொண்டு தன் காதலை வெளியிட்டாள் அவள். அந்த ஆவேசத்தில் ஒரு வார்த்தை சொல்லக்கூட எனக்கு இடம் கொடுக்கவில்லை. அவ்வளவு ஏன்? என்னை அவள் வாய்திறந்து பேசவே விடவில்லை. தானாகவே நான் ரோடரிகோவை வெட்டிய வாளுடன் அவள் முன் வந்து நிற்பதாகக் கற்பனை செய்து கொண்டு விட்டாள். நானோ, தோல்வியடைந்தும், என் அன்பு நிராசையாய்ப் போயும், மகிழ்ச்சியையே அடைந்திருக்கிறேன். இந்த அருமைக் காதலர்கள் ஒன்று கூடுவதை நோக்கிப் பெருமிதம் கொண்டிருக்கிறேன்.

பெர்: குழந்தாய்! இந்த நேர்மையான காதலைப் பற்றி நீ ஏன் வெட்கப்பட வேண்டும்? நாணத்தால் அதை இழந்து விடப் பார்க்காதே. உன் கடமை தீர்ந்தது; உன் கௌரவம் மீண்டுவிட்டது. உன் தந்தை திருப்தியானார். இனியும் ரோடரிகோவை ஆபத்துக்குட்படுத்துவது முறையில்லை. தெய்வசங்கல்பம் எப்படியென்பதை நீயே பார்த்து விட்டாய். தந்தைக்காக இவ்வளவு செய்த பின், உனக்காகக் கொஞ்சம் செய்து



கொள். நீ காதலிப்பவனையே கணவனாக அடையும் என்னுடைய நிபந்தனையை ஏற்றுக் கொள்.

காட்சி 7

[பெர்னாந்தோ டியேகோ, அரியாஸோ, சாஞ்சோ, அலான்ஸோ, ரோடரிகோ, அரசகுமாரி ஷிமேனு, லியனோரா, எல்விரா. அரசகுமாரி ரோடரிகோவின் கையைப் பற்றி ஷிமேனுவிடம் அளிக்கிறுள்]

அரசகுமாரி: கண்ணீரைத் துடைத்துக் கொள், ஷிமேனு! உன் தேசத்து அரசகுமாரி தன் கையாலேயே அளிக்கும் இந்த உத்தம வீரனை வருத்தமின்றி ஏற்றுக் கொள்.

ரோ: பிரபோ! உங்கள் அனுமதியுடன் ஷிமேனுவின் பாதத்தில் வீழ்ந்து ஒன்று கேட்டுக்கொள்ள வேண்டும்......

அம்மணி! என் வெற்றியின் வெகுமானத்தைக் கேட்க வரவில்லை நான். என் காதல், போரின் பண்பையோ, அரசர் கட்டளையையோ மதித்துமாக்கிக் கொள்ளாது. உங்கள் தந்தைக்காக நீங்கள் இழந்தது இன்னும் போதாது என்று தோன்றினால், எவ்விதமாய் உங்களைத் திருப்தி செய்யலாம் என்று மட்டும் கூறுங்கள். இன்னும் ஆயிரம் ஆயிரம் வீரர்களுடன் போர் செய்ய வேண்டுமா? எட்டுத் திசைகளும் வெற்றி முழக்கம் செய்து, பாசறைகளைத் தாக்கிப் படைகளை முறியடித்துப் புராண வீரர்களை யொத்த புகழ் பெருக்க வேண்டுமா? என் குற்றத்துக்குப் பரிகாரமாகுமானால் அவையாவற்றையும் செய்கிறேன். ஆனால் உங்கள் கௌரவத்துக்கு என் மரணத்தாலேயன்றி வேறு எதனாலும் சாந்தி ஏற்படாதென்றால், அதை மற்றவர் மூலமாய்த் தேட வேண்டாம். இதோ, உங்கள் பாதத்தில் இருக்கிறது என் தலை. உங்கள் கையாலேயே அதை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். எவராலும் வெல்ல முடியாத என்னை உங்கள் கையொன்றுதான் வெல்ல முடியும். வேறு எவரும் நிறைவேற்ற இயலாத பழி வாங்கலை நீங்களே இயற்றிக் கொள்ளுங்கள். ஆனால் நான் இறந்தபோது தண்டனையை மறந்துங்கள்; உங்கள் நினைவிலிருந்தும் என்னை நீக்கி விடாதீர்கள்; என் மரணமே உங்கள் கௌரவத்துக்குப் பாதுகாப்பு. ஆகையால் என் ஞாபகத்தையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; எப்பொழுதாவது என்மேல் அனுதாபம் ஏற்பட்டால் "அவன் என்னைக் காதலிக்காமல் இருந்திருந்தால், அவன் இறந்திருக்க மாட்டானே" என்னும் உங்கள் மனத்துக்கு மட்டும் சொல்லிக் கொள்ளுங்கள்.

ஷி: எழுந்திரு, ரோடரிகோ...பிரபோ, நான் திரும்பவும் உங்களிடம் சொல்ல வேண்டியதில்லை. இவ்வளவு பண்பு வாய்ந்த ரோடரிகோவை நான் வெறுக்க முடியுமா? அரசருடைய உத்தரவை மீற முடியாது. ஆனால், நீங்களே யோசித்துப் பாருங்கள். இந்தக் கல்யாணத்துக்கு அனுமதிப்பது முறையா? என் கடமைக்கு இந்த நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்துவது ஒழுங்கான நீதி செலுத்துவதாகுமா? தேசத்துக்கு ரோடரிகோ இன்றியமையாதவனாயிருந்தால் அவனுக்குச் சம்பளமாக என்னைக் கொடுக்கலாமா? தந்தையைக் கொன்றவனைக் கைப்பிடித்தாள் என்னும் அழியாப் பழியை என்மேல் செலுத்தலாமா? என்றால் அந்தப் பழியைத் தாங்க முடியாது.

பெர்: காலக்கிரமத்தில், முதலில் குற்றமாய்த் தோன்றுவது பிறகு சரியாகிவிடும். வெற்றி முறையினால் நீ அவனுக்கு உரியவளானாய்; இருந்தாலும், இப்போதே உன்னை அவனுக்கு அளிப்பது உன் கௌரவத்துக்குப் பங்கம் ஆகும் என்று நினைக்கிறேன்; ஆதலால் அதைச் சிறிதுகாலம் தள்ளிவைத்தாயிருக்கட்டும். உன் துக்கத்தைத் தேற்றிக்கொள்ள ஒரு வருஷ காலம் எடுத்துக் கொள். அதனிடையில், ரோடரிகோ, நீ ஆயுதபாணியாகவே இரு. நீ முறியடித்த மோரர்களின் தேசத்துக்கே சென்று அங்கு மீண்டும் போரைத் தொடர்ந்து நடத்து. என் சேனைக்கு அதிபதியாய் அங்கு சென்று அந்த நாட்டைச் சூறையாடு. உன் பேரைக் கேட்டாலே அவர்கள் கலங்குவார்கள். உன்னை ஏற்கெனவே "தனிப்பெருந் தலைவன்" என்று அழைத்தவர்கள் இப்போது உன்னை அரசனாகவே ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் எந்தப் பதவியை யடைந்தாலும் உன் காதலில் நிலையாக நில். ஷிமேனுவுக்கு இன்னும் தகுதியுள்ளவனாய் உன்னை ஆக்கிக்கொள். உன் பராக்கிரமத்தின் பிரகாசத்தால் அவள் உன்னை மணப்பது தனக்கும் புகழேயாகும் என்று கருதுமாறு செய்து கொள்.

ரோ: ஷிமேனுவை அடைவதற்கும் உங்களுக்குச் சேவை செய்வதற்கும், நான் நிறைவேற்றக் கூடாத உத்தரவு ஒன்றுமே யில்லை. அவளைப் பார்க்காமல் சிறிது காலம் இருக்க வேண்டுமென்றாலும், அவளை அடையும் நம்பிக்கைக்கு இடம் இருப்பதே எனக்குப் பெரும் பாக்கியம். பிரபோ! அந்த நம்பிக்கையிலேயே நான் வாழ்ந்து கொண்டிருப்பேன்.


பெர்: ரோடரிகோ! உன் தைரியத்தை நம்பு; என் வாக்குறுதியை நம்பு; அவள் இதயத்தில் நீ ஏற்கெனவே குடி கொண்டிருக்கிறாய். அவள் கௌரவம் உன்னை மணப்பதற்கு இன்னும் சற்று இடையூறாயிருக்கிறது. அதுவும் காலத்தினாலும் உன் புகழினாலும், உன் அரசராலும் நீங்கும் நாள் விரைவில் வரும். தனிப்பெருந் தலைவனே! ஆயிரமாயிரம் வீரர்களையும், நாடுகளையும், அரசர்களையும் வென்று சிறப்புப் பட்டம் பெற்ற நீ ஒரு பெண்ணின் உள்ளத்தை வெற்றிகொள்ள இன்னும் காலம் வரவில்லை. என்றாவது ஒரு நாள் அது வரும். அதுவரை பொறுத்துக் கொண்டிரு. (முற்றும்)


இந்த மனோரம்யமான
பிரகாசமான பெயிண்டை ஒரு முறை
வாங்கி உபயோகித்துப் பாருங்கள்!
ஷாலிமார் ஸூபர்லாக் ஸின்தடிக் எனாமல்— உட்புறமோ, வெளிப்புறமோ, எந்தப் புறமானாலும் பூசலாம். அதி சீக்கிரத்தில் உலர்ந்து அதிக நாள் மிகப் பளபளப்புடன் இருக்கக் கூடியது. வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், ப்ரஷ்ஷினாலாவது, ஸ்பரேயினாலாவது அல்லது டிப்பிங் முறையிலாவது, எல்லாவித இடத்திலும் பூசலாம்.
38 வித கலர்களில் இவை பெயிண்ட், காலன் டின்களிலும், 5 காலன் டிரம்களிலும் கிடைக்கின்றன. கலர்கள் ஒன்றோடொன்று கலக்கலாம்.
ஷாலிமார் ஸூபர்லாக் ஸின்தடிக் எனாமல்
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD
Calcutta - Bombay - Madras - New Delhi - Kanpur

கண்ணை மூடிக்கொண்டு
சாணைக் கற்களை
நான் தெரிந்தெடுப்பதில்லை



சாணைக் கற்களைக் கண்ணை மூடிக்கொண்டு வாங்குவதோ அல்லது மலிவு விலை என்பதற்காக வாங்குவதோ புத்திசாலித்தனமாகாது. அது சிக்கனமான முறையுமில்லை. சாணைக்கல் தினுசுகளை நீங்கள் தெரிந்தெடுக்கும் போது அவற்றில் நிலையான தரமேன்மை, சிக்கனமான சேவைத்திறன் ஆகிய இரு இணையற்ற குணம்சங்கள் இருக்கின்றனவா என்று கவனிப்பது அவசியம். பட்டை தீட்டும் வேலை எதுவாக விருப்பினும் சரி, கார்போரண்டம் யுனிவர்ஸல் சாணைக் கற்களில் மேற்கண்ட இரு குணம்சங்கள் மட்டுமின்றி இன்னும் எத்தனையோ விசேஷ அம்சங்களைக் காண்பீர்கள்.



சாணைக் கருவிகள்:
சாணைக் கற்கள், செக்மெண்டுகள், ரப்பிங் பிரிக்ஸ், ஷார்பனிங் ஸ்டிக்ஸ், தீட்டும் கற்கள், வால்வ் கிரைண்டிங் காம்பவுண்ட் முதலியன.

கார்பொரண்டம் யுனிவர்ஸல் லிட்.
தலைமை ஆபீஸ்: 52/53, ஜஹாங்கீர் தெரு.
டெலிபோன்: 2941 (4 லைன்கள்)
தொழிற்சாலை: திருவொற்றியூர்,
சென்னை.

விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் வில்லியம் ஜாக்ஸ் & கம்பெனி லிட்.
கல்கத்தா-1, பம்பாய்-1, சென்னை-1
புது டில்லி, பெங்களூர்-1, கான்பூர்.

பிரத்தியேக வகைகளுக்கு மட்டும்:
மெஸர்ஸ் H. S. காக்ஸ் & கோ., பிரைவேட் லிட்.,
24, ராம்பார்ட் ரோ, பம்பாய்.

BOMAJ CUZ 48 TM

அது என்ன குறை?

தேன்கூடு

ஆர்வி

மூத்தையா கையெழுத்திட்டிருந்த கடிதம் ஒன்று மேஜையின்மீது கிடந்தது. அதைப் படித்த பிறகு பாரிஸ்டர் பரமசிவத்துக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது. இருந்தாலும் அவருக்கு ஏற்பட்டிருந்த ஏமாற்றம் முழுதும் நீங்கவில்லை.

அவர் எதிரே வைக்கப்பட்டிருந்த தேதித் தாளை ஒரு புரட்டுப் புரட்டினார். அதில் கண்ணபிரான் சென்னைக்கு வந்த நாளும் பிறகு சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்ற நாளும் குறிக்கப்பட்டிருந்தன. இரண்டுக்கும் இடையே இருந்த இருபது நாட்களும் இப்போது எண்ணிப் பார்த்தால்கூட அவருக்குக் கசப்பாக இருந்தன.

பார்க்கப் போனால் கண்ணபிரான் சென்னையில் ஒருநாள்கூடத் தங்கியிருக்கவில்லை. வந்த அன்றைக்கே அவன் எங்கே புறப்பட்டுச் சென்றான், யாரோடு சென்றான், எந்த எந்த ஊர்களுக்கெல்லாம் போனான் என்பதொன்றும் அவருக்குத் தெரியாது. அவருக்கு மட்டும் என்ன; மூத்தையாவுடைய 'பீ-ஹைவ் கம்பெனி' சென்னைக் கிளைச் சிப்பந்திகளுக்கும் அடையாற்றுப் பங்களாவிலுள்ளவர்களுக்கும்கூடத் தெரியாது. ஆனால் அவன் சென்னை திரும்பி வந்து, அன்றிரவே சிங்கப்பூருக்குப் பயணமானது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அவருக்கோ அதுவும் தெரியாது. மூத்தையாவின் குடும்ப ஆலோசகரான அவருக்கு இது எத்தனை பெரிய அகௌரவம்!

இத்தனைக்கும் அவர் தினம் ஒரு முறையாவது அவனைப் பற்றிப் போன் மூலம் விசாரித்துக் கொண்டேயிருந்தார். நடுவில் இரண்டொரு நாள் அடையாற்றுப் பங்களாவுக்கு நேரில் சென்று பார்த்துவிட்டுக் கூட வந்தார். அவருக்குச் சரியான தகவல்கள் தருவார் யாருமே இல்லை. கண்ணபிரான் வந்தால் உடனே தமக்குத் தெரிவிக்கும்படி அவர் சொல்லி வைத்திருந்தார். அப்படியிருந்தும் கண்ணபிரானை அவர் சந்திக்க முடியாமல் போனது அவருக்குப் பெருத்த மனத்தாங்கலைக் கொடுத்தது.

"தம்பி வந்ததுமே எனக்கு உடனே தகவல் கொடுக்கும்படி சொல்லியிருந்தேனே!" என்று அவர் பங்களா மேற்பார்வை பார்க்கும் பழனியை அழைத்துக் கடிந்து கொண்டார்.

"தகவல் கொடுக்க எண்ணித்தான் போன் செய்யப் போனேன். ஆனால் புது எஜமான் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்!" என்றான் அவன்.

"ஏன்?"

"உங்களுக்குத் தந்தி கூடக் கொடுத்திருந்தாராம். இருந்தும் நீங்கள் வராததனாலே உங்களுக்கு வீணாகத் தொந்தரவு கொடுக்க வேண்டாம் என்றுதான் போன் செய்யச் சொல்லவில்லை."

"எனக்கா தந்தி கொடுத்திருந்தாராம்! எனக்கா?"

"ஆமாம்; அப்படித்தான் அவர் சொன்னதாக ஞாபகம்."

புது எஜமானனுக்கு ஏற்றவாறு பழனி ஏதோ சொல்லி மழுப்புகிறான் என்று எண்ணிக் கொண்டார் பாரிஸ்டர். அவருக்கு என்னவோ இது பெருத்த அகௌரவமாகத் தோன்றியது. ஆனால் அவர் இதுபற்றி ஒரு பெரிய விசாரணையே நடத்தியதில் பழனி கூறியது உண்மைதான் என்பது வெளியாயிற்று. இது ஆறுதல் தருவதற்கு மாறாக அவருடைய கோபத்தை மேலும் கிளறியது. தந்தியை உஷாதான் வாங்கியிருக்கிறாள்!

"உஷா! தந்தியை நீயா கையெழுத்துப் போட்டு வாங்கினாய்?"

"ஆமாம், அப்பா!"

"அப்படியானால் அதை எங்கே வைத்துத் தொலைத்தாய்?"

"தெரியாது, அப்பா!" பொன்னியைக் காட்டிக் கொடுத்துவிட உஷாவுக்கு விருப்பமில்லை.

"என்ன தெரியாது, அப்பா! உன்னை யார் வாங்கச் சொன்னது?"

அதுவும் பொன்னிதான். ஆனால் உஷா வாயைத் திறக்கவில்லை. அவர் தம்மை மறந்து கூட உஷாவை ஒரு வார்த்தை அதட்டிப் பேசியதில்லை. ஆனால் இன்று அவருடைய குழந்தை முகம் குங்குமமாய்ச் சிவந்தது. கண்கள் ரோசம் தாளாமல் கலங்கிப் போய் விட்டன. பாரிஸ்டர் இதைச் சிறிதும் கவனியாமல், "உன்னால் இன்னும் என்னென்ன உபத்திரவங்களெல்லாம் பாக்கியிருக்கின்றனவோ!" என்று நிஷ்டூரமாகக் கூறினார்.

வாய் தவறி அவர் இந்த வார்த்தைகளைக் கூறிவிட்டார். ஆனால் அப்புறம்

தனியாகப் போய் உட்கார்ந்து யோசித்துப் பார்த்தபோது அவர் உள்ளத்தின் ஆழத்தில் ஒளிந்திருந்த ஒரு குரல்தான் பீறிக்கொண்டு வெளி வந்ததாகத் தோன்றியது. அந்தச் சுடுமொழிகளை எண்ணி அவர் உள்ளமே நடுங்கியது; உஷாவின் முகத்தைப் பார்க்கவே அவர் நெஞ்சம் கூசியது. ஓ பாவமும் அறியாத அந்தக் குழந்தையைப் பார்த்துச் சொன்ன ஒவ்வொரு சொல்லும் அவரையே திரும்பி வந்து தாக்கியது.

சொர்ணம்பாள் கட்டிலில் சாய்ந்தவாறே இதையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். ஆயினும் அவள் ஒரு வார்த்தைகூட உஷாவுக்காகப் பரிந்து கொண்டு ஏன்தான் பேச வரவில்லையோ? பாரிஸ்டர் உஷாவைப் பார்த்துச் சொன்னவை, சொல்லாதவை யனைத்தும் தன்னை வந்து தாக்கியதைப் போலக் குன்றிப் போய் உட்கார்ந்திருந்தாள் அவள். எப்போதும் போல அவள் குறுக்கிட்டிருந்தால் பேச்சு இவ்வளவு தூரத்துக்குப் போயிருக்காது.

இரவு படுக்கப் போகும்போது அவள், "குழந்தையிடம் என்ன வார்த்தைதான் பேசுவது என்பது இடையாதா?" என்று பாரிஸ்டரைக் குற்றம் சாட்டுவதுபோல் கேட்டாள்.

"என்ன நடந்தது?"

"நடப்பது என்ன? உஷா இன்னும் பச்சைக் குழந்தையல்ல. அவளுக்கு எல்லாம் நன்றாகப் புரிகிறது. நாமே செய்துவிட்ட தப்புக்கு அது எப்படிப் பொறுப்பாளியாகும்? அது சாப்பிடாமலே படுத்துத் தூங்கிப் போய்விட்டது!"

பாரிஸ்டருக்குத் தம் முதுகில் எட்டுக்கால் பூச்சி ஒன்று ஊர்ந்தது போன்ற வேதனை உணர்ச்சி உண்டாயிற்று. முகத்தைப் பல கோணல்களாகச் செய்து கொண்டு அவர், "எதற்கும் நான்தானா? நான் வாய் தவறிப் பேசிவிட்டால், எல்லாம் தெரிந்த நீ அப்போது என்ன செய்து கொண் டிருந்தாயாம்? அன்பாக, ஆதரவாக அழைத்து அதனிடம் ஒரு வார்த்தை சொல்லக்கூட உன்னால் முடியவில்லையோ? மசக்கை என்றால் ஒருவருக்குமே வராத, வரக் கூடாத வியாதி வந்து விட்டதாக உனக்கு எண்ணமோ? எல்லாம் உன்னால்தானே வந்தது? உன்னால்தானே இவ்வளவும்! தந்தியை நீ வாங்கி வைத்திருந்தால் இவ்வளவு தூரத்துக்கு ஏன் பேச்சு வருகிறது?" என்று கூறிவிட்டு, போர்வையை முகம் தெரியாமல் மூடி இழுத்து விட்டுக்கொண்டு படுத்தார்.

காலையில் குழந்தையை அழைத்து வட்டியும் முதலுமாய் இதற்கு ஈடு செய்துவிட வேண்டும் என்று எண்ணியவாறே கண்களை மூடிக் கொண்டார். ஆனால் என்ன செய்தும் காலையில் உஷாவைப் போய்ப் பார்க்கவே அவருக்குத் துணிச்சல் வரவில்லை. குழந்தையின் இயல்புப்படி நடந்ததை மறந்துவிட்டு அவளாக ஓடி வந்து, "அப்பா!" என்று அழைத்தபோது கூட அவரால் குனிந்த தலையை நிமிர்த்திப் பார்க்க முடியவில்லை.

அப்போதுதான் முத்தையாவின் கடிதம் தபாலில் வந்திருந்தது. உஷாவின் அழைப்புக்கு, "உம்..." என்று கூறியபடியே கைகள் நடுங்க அவர் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார்.

கண்ணபிரான் நல்லவிதமாக ஊர் வந்து சேர்ந்து விட்டானாம். சென்னைக்கு அவன் வந்திருந்தபோது பாரிஸ்டர் செய்த அன்பு உபசாரங்களையெல்லாம் அவன் சொல்லித் தெரிந்து கொண்டாராம். பல இடங்களைப் பார்த்துவிட்டு உடனே திரும்ப வேண்டும் என்ற ஆசை காரணமாக அவனால் பாரிஸ்டரோடு அதிக நாட்கள் தங்கியிருக்க முடியவில்லையாம். வரும்போது சொல்லிக் கொள்ளாமல் புறப்படும்படி ஆகிவிட்டதாம். அதை அவரை முன்னிட்டு வித்தியாசமாக எடுத்துக் கொண்டு விடக் கூடாதாம்.

முத்தையாவின் கடிதத்தை அவர் இரண்டு மூன்று முறை திருப்பித் திருப்பிப் படித்தும் அவருக்கு உண்மையான திருப்தி உண்டாகவில்லை. காலை மிதித்துவிட்டு உதடு ஒட்டாமல் வருத்தம் தெரிவிக்கும் உபசாரமாகத்தான் கடிதமும் அமைந்திருந்தது. முத்தையா அந்தரங்கசுத்தியுடன்தான் கடிதமும் எழுதியிருந்தார் ஆனால் யாரை முன்னிட்டு அவர் கடிதம் எழுதியிருந்தாரோ, அவனுடைய நொண்டிச் சாக்குகளையெல்லாம் அவரால் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கண்ணபிரானுடைய அரும்பு மீசையும் அலட்சிய நோக்கும் அவருடைய கண்ணெதிரே வந்து நின்றன. காளையர்களை அவர்கள் போக்கில் விட்டுப் பிடிக்கவேண்டும் என்பது சரிதான்; பத்தொன்பது வயதுகூட நிரம்பாத இந்தக் காளையை அதன் போக்கில் விட்டுவிடுவது எளிதான காரியமும் கூடத்தான்; ஆனால் அப்படி விட்டு விட்டால் பிறகு பிடிக்கத்தான் முடியாது என்று அவருக்குப் பட்டது. இப்போதுதான் அவருக்குத் தாம் வேறு ஒரு தலைமுறையைச் சேர்ந்த



வர் என்ற எண்ணம் உண்டாயிற்று. தம்முடைய முதுமையை இன்றுதான் அவர் தெளிவாக உணர்ந்து கொண்டார். இளம் பெண்களோடு ஓர் இளைஞன் தனியாக விகல்பமின்றி, பல நிலைகளில் சகஜமாகப் பழக முடியும் என்று சாதிக்கிற இந்த யுகத்தில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமானால், தம்முடைய கருத்துக்களையும் கொள்கைகளையும் சிறிது மாற்றி அமைத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று அவருக்குப் பட்டது. அவரால் முடியுமோ, முடியாதோ அது அவசியத்திலும் அவசியமாகத் தோன்றியது.

கண்ணபிரானோடு காரில் வந்து இறங்கிய பெண்ணை அவர் சில விநாடிகள்தான் கவனித்துப் பார்த்தார். ஆனால் புகைப்படம் எடுப்பதற்கு நிமிஷக் கணக்கா ஆகிறது? நொடிக்குள்

எதிரிலுள்ள காட்சி, கருவிலேயே பதிவாகி விடுவதைப் போல் அவளுடைய எழிலுருவம் அவர் உள்ளத்தில் பதிந்து விட்டது. பதினாறு வயது அரிவையாக அவள் தோன்றினாள். அவளுடைய உடல் வளர்ச்சிக்கு ஏற்றவாறு உள்ளத்தின் வளர்ச்சி இருந்திருக்காதென்றே அவருக்குத் தோன்றியது. களங்கமற்ற கண்களின் பார்வையைக் கொண்டே பாரிஸ்டர் இதைக் கண்டு கொண்டு விட்டார். சோலையின் குளிர்ச்சிக்கு வெளியே பாலையின் வெப்பம் உண்டு என்பதை அறியாத பேதைமை அவளுடைய பார்வையிலேயே கலந்திருந்தது. வாசமற்ற புஷ்பத்தின் வண்ணப் பகட்டு அவளிடம் இல்லை. ஆனால் மணமுள்ள மென்மலரைப் போல் அவள் புதுமை எழிலோடு விளங்கினாள். மனத்தைக் கண்டபடி அலைக்காத வடிவழகு படைத்திருந்தாள் அவள். அவளைப் பார்த்ததுமே உண்டாகும் உணர்ச்சி எத்தகையதானாலும் கண்ணபிரானைக் காண்பதற்கும் அதற்கும் எத்தனையோ வேற்றுமை இருப்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.


கண்ணபிரான் இவளை எங்கே சந்தித்தானோ? ஆனால் ஒன்று மட்டும் பாரிஸ்டருக்கு நிச்சயமாகப்பட்டது. அந்தப் பெண், இனி எப்படியெல்லாம் மாறக் கூடுமோ தெரியாது; ஆனால் அன்று வரையில் உலகத்தைப் பற்றிச் சிறிதும் அறியாதவள் என்பது நன்றாகத் தெரிந்தது. உள்ளத்திலே கள்ளம் இருந்தால், கண்களிலே இத்தகைய ஒளியைக் காண முடியாது; முகத்திலே ஆவலையும் உற்சாகத்தையும் காண முடியாது. அச்சமும் பொய்க் கூச்சமும் சிறிதும் கலக்காத இன்முறுவலைக் காண முடியாது. ஆகவே இது ஏதோ இடையில் ஏற்பட்ட வழிச் சிநேகிதமாக இருக்க வேண்டும் என்று அவர் தம்மைத் தேற்றிக் கொண்டார். இந்த எண்ணமே அவருக்கு இப்போது ஒரு சிறு திருப்தியைத் தந்தது.

கண்ணபிரானிடம் அவருக்கு அத்தனை நம்பிக்கை விழாத போதிலும், அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வர அவர் கொஞ்சமும் விரும்பவில்லை. கால மாறுதலை உணர்ந்து தம்மையே சிறிது மாற்றிக் கொள்ள வேண்டும் என்றே அவர் எண்ணினார். எதுவரையில் சந்தேகங்களுக்கு மனத்தில் இடம் கொடாமல் இருக்கிறோமோ, அதுவரையில் அங்கே வேதனைக்கும் இடமில்லை என்ற உண்மையை அறியாதவரல்ல. வேதனையில்லாத உள்ளத்தில்தான் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் உண்டாக முடியும் என்பதும் அவருக்குத் தெரியும். தம்மிடம் வரும் வழக்குகளின் உண்மைகளைப் பற்றி அவர் சந்தேகப்படுவது என்று வந்து விட்டால், அப்புறம் அதற்கு ஒரு முடிவு ஏது? வெற்றியு புகழும் தான் எப்படி உண்டாகும்?



மூத்தையாவின் கடிதத்தைப் பார்த்த பிறகுதான் அவருக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று. கண்ணபிரானை அவர் மனப்பூர்வமாக நம்பியே இவ்வளவு தூரம் எழுதியிருக்கிறார்? ஆகவே இவர்மட்டும் அவனிடம் அவநம்பிக்கை கொள்வானேன்? இளைஞர்கள் புரிந்தும் புரியாமலும் எப்படி எப்படியோ இருப்பார்கள். இதில் அதிருப்தி அடைவதற்குத்தான் என்ன அவசியம் இருக்கிறது?

இதற்காகக் குழந்தை உஷாவிடம் அவசரப்பட்டு, நிதானமிழந்து பேசியதை எண்ணி அவர் உள்ளம் வேதனையடைந்தது. அவள் மனத்தைப் புண்படுத்தி விட்டதைக் கண்டு அவர் மனம் பச்சாத்தாபப்பட்டது. ஆனால் குழந்தை இரவோடு இரவாக அவர் பேசியது எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவரிடம் ஓடி வந்து விட்டாள். மறுபடியும் அவள் கலகலவென்று பேசத் தொடங்கி விட்டாள். அவரால் மட்டும் அப்படி ஏன் அதை அடியோடு மறக்க முடியவில்லை? எப்போதும் போல் அந்தச் சிறுமியின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க, வெட்கமாகவும் கூச்சமாகவும் இருப்பானேன்? கேட்ட கேள்விக்குக்கூட அவரால் இயற்கையாகப் பதிலளிக்க முடியவில்லை. வெகு நேரமாகப் போராடிய பின்னர்தான் அவர் சிறிது கலகலப்பாகப் பேச முயன்றார். அப்பொழுது கூட அதில் ஏதோ ஒரு குறை இருப்பது போல் அவருக்கே பட்டது. தளதள வென்றிருந்த பசுங் கீரையைப் பூச்சி கொஞ்சம் அரித்து விட்டது போல் இருந்தது அந்தக் குறை.




அத்தியாயம் 10

இடிந்து போனாள்

எல்லாம் எப்போதும் போலத்தான் நடைபெற்று வந்தன. எதிலும் சிறிது கூட மாறுதல் தெரியவில்லை. ஆனால் பிறர் கண்ணுக்குப் புலப்படாத மாறுதலை உஷா மட்டும் உணர்ந்தவன் போல் தோன்றினான். தாயின் உடல் நிலையில் மாறுதல் ஏற்பட்டு வந்ததைப் போலவே அவளுடைய அன்பிலும் மாறுதல் கலந்திருப்பதை உஷா தெளிவாக உணர்ந்து கொண்டான்.

இது அவனுக்கு ஒரு கலக்கத்தை உண்டாக்கியது. அம்மாவிடமிருந்து விலகி விலகிச் செல்வதுபோல் அவன் எண்ணினானோ, என்னவோ! கூப்பிடக் கூப்பிடத் துள்ளிக் கொண்டு எட்ட எட்ட ஓடிச் செல்லும் அவன் இப்போது அம்மா தன்னைக் கூப்பிட மாட்டாளா, கொஞ்சமாட்டாளா என்று ஏங்கினான். அரை வாயால் அழைப்பதற்கு முன்னே அம்மாவைப் போய்க் கட்டிக் கொண்டான். மாதம் ஆக, ஆக, சொர்ணாம்பாளுக்கு பலவீனமாக இருந்தது என்னவோ உண்மை. கை இறுகத் தன்னைத் தழுவ முடியாது என்பது அந்தச் சிறுமிக்குத் தெரியும். இருந்தாலும் அன்னையின் அணைப்பிலே முன்பு இருந்த வெத வெதப்பு எங்கே போயிற்று? அப்போது இருந்த வேகமும் பரிவும் இப்போது எங்கே போய் ஒளிந்து கொண்டு விட்டன? இவன் பழைய அம்மாவே இல்லையோ? அல்லது அவன் தான் பழைய உஷாவாக இல்லையோ?

நட்டுவனார் சொக்குப் பிள்ளை பாக்கு உரலை இடித்துக் கொண்டே, பாரிஸ்டரைப் பார்த்து, "இது மத்தப் பிள்ளைங்களைப் போல இல்லீங்க! குடத்தைப் போலக் குப்புனுபுடிச்சிக்கிறசூடிகையான பிள்ளைங்க! அதன் வயசுக்கு அதுக்கு அறிவு அதிகம்!" என்றார். அதனால் தானோ என்னவோ. உஷாவுக்குத் தன் தாயின் நிலைமை சிறிது கூடுதலாகவே கலக்கத்தைக் கொடுத்தது. அந்த அன்னையின் உள்ளத்திலே வெளியில் சொல்ல முடியாத வேதனை ஒன்று புகுந்து கொண்டு வாட்டுவதுபோல அவனுக்குப்



சென்னை திருவொற்றியூர் இம்பீரியல் டுபாகோ கம்பெனியின் பர்ஸனல் மானேஜராகப் பணியாற்றிய மேஜர் திரு ஆர். சபேசன் அவர்கள் உயர் பதவியை வகிக்கக் கல்கத்தா தலைமைக் காரியாலயத்துக்குச் செல்கிறார். ஏப்ரல் 15 ந் தேதி கல்கத்தா மெயிலில் அவர் மனைவியாரோடு புறப்பட்டுச் செல்கையில், ஏராளமான நண்பர்களும், திரைப்படப் பிரமுகர்களும் வந்திருந்து அவருக்கு மாலைகள், பரிசுகள் வழங்கி வழியனுப்பினர்.

வருவது தெரிந்தது. முன் சீட்டில் டிரைவருக்கு அருகில் உட்கார்ந்திருந்த பாபுவைக் கண்டதும், அவனுக்கு விவரம் தெரியாத உற்சாகம் உண்டாயிற்று.

"வண்டி போர்டிகோவிலேயே நிற்கட்டும்! இதோ வந்து விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு, மிஸஸ் மீனாட்சி, ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த உஷாவைக் கூடக் கவனியாமல் மாடியேறிச் சென்றாள். அந்த அம்மாள் இவ்வளவு விரைவாகப் படியேறுவதை இன்றுதான் உஷா கண்டாள். "ஏதோ அவசரம்போலிருக்கிறது; அந்தமட்டில் நல்லதாயிற்று!" என்று அவள் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

ஐந்து நிமிஷம் கூட ஆகியிருக்காது. பொன்னி தடதடவெனப்படியிறங்கி ஓடி வருவது தெரிந்தது: அவள்முகத்தில்காணப்பட்ட பரபரப்பைக் கண்டு "என்ன பொன்னி அங்கே?" என்றாள் உஷா.

"இரு, இதோ வந்திட்டேன்!" பொன்னி நடு வாசலில் நின்ற வண்டியை நோக்கி ஓடினாள். முன்னால் உட்கார்ந்திருந்த டிரைவரிடமும் பாபுவிடமும் என்னவோ ரகசியமாகக் கூறினாள்.

அது என்னவாக இருக்கும்? இதெல்லாம் என்ன? யோசிப்பதற்குக் கூட நேரம் இல்லை. பொன்னியைத் துரத்திக் கொண்டு வருவதுபோல் இறங்கி வந்தாள் ஜட்ஜின் மனைவி. "ஒரு நிமிஷம் இரு, பொன்னி! ஒரு நிமிஷம்—இப்படி வா!" என்று முன் ஹாலில் நின்றவாறே அழைத்தாள். அவள் முகமெல்லாம் முத்து முத்தாக வேர்த்து விட்டிருந்தது "பொன்னி! இந்த வண்டியிலேயே உஷாக் கண்ணும் போகட்டும். பாபு! குழந்தையையும் அழைத்துக் கொண்டு போ! பங்களாவில் இறங்கிக் கொண்டு வண்டியை மட்டும் அனுப்பிவிடு!" என்று மூச்சு இரைக்கக் கூறினாள்.

"எங்கே, எதற்காக?" என்று திகைத்தாள் உஷா.

"நம்ப பங்களாவுக்குத் தாண்டா, கண்ணு!" என்றாள் மீனாட்சி.

"இப்போ எங்கள் வாத்தியார் வந்து விடுவார் மாமி. நான் எங்கேயும் போக மாட்டேன்!" என்று தலையை வேகமாக ஆட்டி மறுத்தாள் உஷா.

பட்டது. பொழுது விடிந்தது முதல் இரவு உறங்கப் போவது வரையில் எப்போதும் போல் சொர்ணம்பாள் தன்னைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் உஷாவுக்கு என்னவோ உற்சாகம் குன்றி உள்ளம் சோர்ந்து சோர்ந்து போயிற்று.

முன்போல் சொர்ணம்பாள் காட்டியப் பயிற்சியின்போது வந்து எதிரே உட்காருவதில்லை. அது மிகவும் நல்லதாயிற்று என்று எண்ணினார் நட்டுவனார். "அம்மா இருந்தா, காத்துலே நடுங்குகிற விளக்கு மாதிரி உனக்குத் தடுமாறுது. பிடியெல்லாம் பிசகிப் பிசகிப் போயிடுது. அவங்க எதிரிலே இல்லாமல் இருக்கிறதுதான் தேவலை!" என்றார் அவர். அப்படி மேலுக்குச் சொன்னாரே தவிர, கற்பனை மிகுந்த உஷாவின் உண்மை நிலையை அவர் உணர்ந்து கொண்டுதான் இருந்தார். குழந்தை உஷாவின் கலை வளர்ச்சிக்கு இடையூறாக எதுவும் நேர்ந்துவிடக் கூடாதே என்று அவருக்கு இருந்த கவலையைத்தான் காட்டியது அவரது பேச்சு.

மாலைவேளையில் ஒருநாள் பாரிஸ்டரைக் 'கிளப்'பில் கொண்டு போய் விட்டு விட்டு, குப்பன் வண்டியை எடுத்துக் கொண்டு சொக்குப் பிள்ளையை அழைத்து வரப் போயிருந்தான். உஷா முன் ஹாலில் உட்கார்ந்து நடன ஆசிரியரை வழிபார்த்துக் கொண்டிருக்கும்போதே மிஸஸ் மீனாட்சியின் வண்டி உள்ளே நுழைந்து

"வாத்தியார் வந்தால் நான் சொல்லிக் கொள்கிறேன்! இன்று பாடம் வேண்டாம். நீ போய், ஏறிக்கொள்ளேன்! நேரமாகிறது. பார்!"

"இன்று என்ன, இன்று?"

"எல்லாம் சொல்கிறேனே வந்து!"

உஷா அந்த அவசரத்தைக் கண்டு துளியும் மசியவில்லை. மிஸஸ் மீனாட்சி பொன்னியைப் பார்த்து வாயைப் பொத்திக் காட்டினாள்.

உஷா அவர்களை மீறிக்கொண்டு மாடிக்குச் செல்ல முயன்றபோது பொன்னி பாய்ந்து வந்து வழியை மறித்து. "இப்போது நீ மேலே போகக் கூடாது! சொன்னால் கேள். உஷா!" என்று அதட்டலாகவும் கெஞ்சலாகவும் வேண்டிக் கொண்டாள்.

பொன்னி மட்டும் வழியை மறித்துத் தடுத்திருந்தால் உஷா எப்படியோ அவளை ஏமாற்றிவிட்டு மேலே ஓடிச் சென்றிருப்பாள். ஆனால் மீனாட்சியை மீறிக்கொண்டு போக அவளால் முடியவில்லை. 'மேலே போகக் கூடாது' என்ற வார்த்தையைக் கேட்டதும் அவளுக்குப் பயமும் அழுகையும் முட்டிக் கொண்டு வந்தன. "ஏன் போகக் கூடாது? நான் போகத்தான் போவேன்!" என்று கூச்சலிடத் தொடங்கினாள்.

அவர்கள் இருவரும் அவளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தவித்தார்கள். எதையோ வெளிப்படையாகச் சொல்லவும் முடியாமல் உஷாவைச் சமாதானப் படுத்தவும் முடியாமல் அவர்கள் சிறிது நேரத்துக்குள் திணறி விட்டார்கள்.

"நீங்கள் விலகிப் போங்கள். நான் உஷாவை அழைத்துப் போகிறேன்!" பின்னாலிருந்து ஒரு குரல் வந்தது.

உஷா திரும்பிப் பார்த்தாள். பாபு தான் அங்கே காணப்பட்டான்.

"உங்கள் கான்வென்டிலே இதைத்தான் சொல்லிக் கொடுக்கிறார்களோ? கடன ஆசிரியர் பெரியவர்களை மீறிக் கொண்டு போவதற்குத்தான் பயிற்சி தருகிறாரோ?" என்றான் பாபு.

உஷா அவன்மீது வைத்த விழியை எடுக்காமல் நின்று கொண்டு தான் இருந்தாள்.

"இறங்கி வந்து வண்டியில் ஏறிக் கொள், அம்மா! அதுவும் இதைப் போல்; அழகான பங்களாதான்! சொன்னால் சட்டென்று புரிந்து கொண்டு கேட்டால் எல்லாருக்கும் பெருமையாக இருக்கும்!"

மிஸஸ் மீனாட்சிக்கும் பொன்னிக்கும் பெரிய வியப்பாக இருந்தது. உஷா மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவளைப் போல் வண்டியை நோக்கி நடந்து சென்றாள். வண்டி புறப்படும் சமயத்தில் மாடியிலிருந்து வந்த அலறல் சத்தத்தைக் கேட்டு அவள் அப்படியே இடிந்து போய்ச் சாய்ந்து கொண்டாள்.

(தொடரும்)

சிரிக்காதே!

"நீங்கள் தவறித் தண்ணீரில் விழுந்து நீந்தத் தெரியாமல் திணறினால்......யோசிக்க வேண்டாம். சட்டென்று எங்கள் புஸ்தகத்தின் எழுபத்தி மூன்றாம் பக்கத்தைப் புரட்டி உடனே அதில் கண்டபடி செய்யவும்."

❋

"தண்ணீர் 'ஐஸ்' ஆக மாறினால் என்ன நிலைமை ஏற்படுகிறது?"

"விலை கொடுத்து வாங்கும்படி ஆகிறது!"

❋

"யார் ரொம்பத் திருப்தியாக இருப்பார்கள்; பத்து லட்சம் ரூபாய் சொத்து இருப்பவரா? இல்லை, பத்து குழந்தைகள் உள்ளவரா?"

"பத்து குழந்தைகள் இருப்பவர் தான்...போதும் இனிமேல் வேண்டாம் என்று அவர்தான் இருந்து விடுவார்."

❋

திருடன்: உம்! பணமெல்லாவற்றையும் கொடுங்க. அப்புறம் நகைகளை வைத்துக் கொண்டு அதன் கிரயத்தை மட்டும் பணமாகக் கொடுங்க. நாங்கள் உங்கள் நகைகளை எடுத்துப் போய்க் கடையில் விற்றால் மாட்டிக் கொண்டு விடுகிறோம்.

❋

பிரும்மச்சாரி: எனக்குக் கல்யாணம் ஆனமாதிரி சொப்பனம் கண்டேன். அப்போது கடிகாரம் அலாரமடித்து என்னை எழுப்பி விட்டது!

நண்பன்: நான் பிரும்மச்சாரியாகவே இருந்து காலத்தைக் கழிப்பதுபோல் சொப்பனம் கண்டேன்! என் ஐந்து குழந்தைகளும் சத்தம் போட்டு என்னை எழுப்பி விட்டன!

❋

விடைத்தாளில் கடைசியில் எழுதியிருந்தது: இந்த விடைகளெல்லாம் பக்கத்துப் பையனின் விடைகளைத் தழுவி எழுதியதல்ல......!

❋


ஒரு ஆஸ்பத்திரியில்: "எத்தனை பேர்கள் இன்றைக்கு இறந்து போனார்கள்?"

"மூன்று பேர்கள் சார்!"

"நான் நான்கு பேருக்கு மருந்து கொடுத்து விட்டுப் போனேனே?"

"ஆமாம்! அதில் ஒருவர் அதைச் சாப்பிட மறுத்து விட்டார்!"

உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது பயர்ஸ்டோன்



. . . நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்

ஏனென்றால் — உலகத்தின் தலைசிறந்த மோட்டாரோட்டப் பந்தயங்களில், ஒரு டயர் கூட 'பழுதுபடாமல், ஆபத்தான நெளிவு சுளிவுகளுக்கும் அசுர அதிர்ச்சிகளுக்கும் கடுங் கொதிப்புக்கும் ஈடுகொடுத்து பயர்ஸ்டோன் டயர்கள் தமது பாதுகாப்புத் தன்மையை ஆண்டுதோறும் நிரூபித்து வருகின்றன. உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பவை பயர்ஸ்டோன் டயர்கள். ஏனெனில், உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும் ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்புத் தரும் அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. பயர்ஸ்டோன் டயர்கள் அளிக்கும் சிறந்த பாதுகாப்புச் செயலில் நிரூபிக்கப்பட்டது.


ஸவுத் கரோலினாவிலுள்ள டார்லிங்டன்னென்னுமிடத்தில் நடைபெற்ற ஒன்பதாம் வருடாந்திய 500 மைல் மோட்டாரோட்டப் பந்தயத்தில் முதன்மையாக வெற்றிபெற்றவரான க்ளென் ராபர்ட்ஸ், அப் பந்தய ஓட்டத்தில் 121 டிகிரி உஷ்ணத்தை எதிர்த்து நிற்க வேண்டியிருந்த பயர்ஸ்டோன் டயர்களே தமது அற்புத சாதனைக்கு அடிகோலியதென்று கூறுகிறார்.


Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலக்ஸ் சாம்பியன்

டியூப் இல்லாதது அல்லது டியூப்புள்ளது






W. G

பாண்டிமாதேவி

எட்டாம் அத்தியாயம்

ஒரு துயர நிகழ்ச்சி



வெள்ளத்திலும், புயலிலும் சிக்கிக் கொண்டு மீளும் வழி தெரியாமல் இறந்து போன அந்தப் பெண்ணின் முகத்தை உற்றுப் பார்த்துக் குமார பாண்டியன் பெயர் சொல்லி அலறியதைக் கண்டதும் சக்கசேனாபதிக்கும், புத்த பிட்சுவுக்கும் அடக்க முடியாத வியப்பு ஏற்பட்டது.


முகத்தைப் பார்த்து இனங் கண்டு கொண்டதும் அவன் வாயிலிருந்து அலறலாக ஒலித்தது அந்த ஒரே ஒரு வார்த்தை தான். அதன்பின் அவன் வாயிலிருந்து வார்த்தையே பிறக்கவில்லை. விழிகள் விரிய முகத்தில் மலைப்பும், பீதியும் தெரிய, வாய் பேசும் ஆற்றல் இழந்து விட்டது போல் அப்படியே அசையாமல் நின்றான் அவன்.

"இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா? இவள் யார்?" என்று ஒரே சமயத்தில் சக்கசேனாபதியும் பிட்சுவும் அவனை நோக்கிக் கேட்டார்கள். சிறிது நேரம் அவர்கள் கேள்வியையே காதில் போட்டுக் கொள்ளாதவன் போல் மலைத்தது மலைத்தபடியே நின்ற இராசசிம்மன் பின்பு மெல்லத் தலை நிமிர்ந்தான்.

"சக்கசேனாபதி! இது என்ன பரிதாபம்? தென்பாண்டி நாட்டிலிருந்து கடல்கடந்து வந்து இறங்கி இந்தப் பெண் தனியாக எப்படி இங்கே வந்தாள்? இவளுடைய விதி இங்கே வந்து முடிய வேண்டுமென்றுதான் இருந்ததா?" என்று பரிதாபம் மிக்க குரலில் அவரை நோக்கிக் கூறினான்.

"இந்தப் பெண் யாரென்றே நீங்கள் இன்னும் எனக்குச் சொல்லவில்லையே?" என்று கேட்டார் அவர்.

"சந்தேகமே யில்லை! இவள் தென்பாண்டி நாட்டுத் தளபதி வல்லாள தேவனின் தங்கை. பகவதி என்று பெயர். இவள் எப்படி, எதற்காக, யாருடைய உதவியால் இங்கே வந்தாள் என்பதல்லவா எனக்குப் புதி-



நா. பார்த்தசாரதி

ராக இருக்கிறது? எப்படியானாலும் இந்த அவலக் காட்சி என் நெஞ்சை உருக்குகிறது. இந்த வயதில் இந்தப் பெண்ணுக்கு இப்படி ஏற்பட்டிருக்க வேண்டாம்" என்று நாத் தழுதழுக்கக் கூறிவிட்டுக் கண்களில் திரண்ட நீரைத் துடைத்துக் கொண்டான் குமாரபாண்டியன்.


"இளவரசே! நீங்கள் பிழையாக அனுமானம் செய்கிறீர்கள். எனக்கு இவள் அந்தப் பெண்ணாக இருப்பாளென்று நம்ப முடியவில்லை. அவளாவது, தென்பாண்டி நாட்டிலிருந்து இங்கே ஓடிவருகிறதாவது? தளபதியின் தங்கை மாதிரியே முக அமைப்பும், தோற்றமுமுள்ள வேறு யாரோ ஒரு பெண்ணாக இருப்பாள் இவள்" — என்றார் சக்கசேனாபதி.


"எனக்கும் அப்படிச் சந்தேகமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் இந்த ஆண்மை மதர்ப்பும் பெண்மை நளினமும் கலந்த அழகு முகம் அந்தப் பெண்ணுடையதுபோலவே இருக்கிறதே!" என்று இராசசிம்மன் கூறியபோது, "சாவும், நோவும் கூடத் தனக்கு வேண்டியவர்களுக்கு வந்தால்தான் மனிதனுக்கு அனுதாபப் படமுடிகிறது. வேண்டாத முன் பின் தெரியாதவருக்காக அனுதாபத்தைக் கூட அநாவசியச் செலவு செய்ய மனிதன் தயாராயில்லை"— என்று மனத்துக்குள் எண்ணிச் சிரித்துக் கொண்டார் பிட்சு.

"நான் சொல்வதை நம்புங்கள். இது நிச்சயமாகத் தளபதியின் தங்கையாக இருக்க முடியாது. தோற்றத்திலுள்ள ஒற்றுமையே உங்கள் கண்களை ஏமாற்றுகிறது. கவலையை விடுங்கள்" என்று சக்கசேனாபதி உறுதியாகக் கூறினார்.

"நீங்கள் சொல்கிற மாதிரி இருந்தால் நல்லதுதான். ஆனால் நமக்காக அப்படி இருக்குமா? இந்தப் பாவிப் பெண் நேற்றிரவு அடிகள் சொன்னதைக் கேட்டு அவரோடு வந்திருக்கக் கூடாதோ? இப்படி உயிர் விடவா அடிகள் மேல் சந்தேகப்பட்டு மழையிலும் புயலிலும் திண்டாடினாள்? ஐயோ! விதியின் கொடுமையே!" என்று புத்தபிட்சுவிடம் பிரலாபித்தான் இராசசிம்மன். "துயரம் பொதுவானது. யாராயிருந்தாலும் மனம் வருந்திக் கலங்க வேண்டிய இளமைச் சாவு இது. ஆனாலும் நம் கையில் என்ன இருக்கிறது? நாம் துன்பங்களைக் காணவும், நுகரவும், உண்டாக்கவுமே பிறந்தவர்கள். வெறும் மனிதர்கள்" என்று உணர்ச்சி கொந்தளிக்கும் சொற்களால் இராசசிம்மனுக்கு ஆறுதல் கூறினார் பிட்சு.

"நாம் என்ன செய்யலாம்? நேற்றிரவு அவ்வளவு மழையிலும் காற்றிலும் இந்தப் பெண்ணின் ஓலம் கேட்டதும் நம் உயிர்களைக் கூடப் பொருட்படுத்திப் பயப்படாமல் எழுந்து உதவ ஓடி வந்தோம். தண்ணீர் உடைப்பு நம்மைத் தடுத்து விட்டதே. புத்திசாலிப் பெண்ணாயிருந்தால் பிட்சு கூப்பிட்டபோதே இக்கரைக்கு வந்திருக்க வேண்டும். பாவம்... விதி முடிகிற சமயத்தில் அறிவுகூட நல்லது கெட்டதைப்





"பகுத்துணராமல் பிறழ்ந்துவிடுகிறதே! இல்லையானால் கள்ளங் கபடறியாத இந்த அடிகளைப் பற்றி ஐயுற்றுப் பயந்திருப்பாளா இவள்?" என்று சக்க சேனாபதியும் சோகத்தோடு சொன்னார்.

ஆறுதல்களையும் மீறி இறந்து கிடக்கும் அந்தப் பெண்ணுடல் பகவதியினுடையதுதான் என்று குமார பாண்டியனின் மனம் உறுதியாக எண்ணியது. ஆனால் அதைத் திடப்படுத்திக் கொள்ள இன்னும் ஒரு சரியான சான்று இருந்தால் சந்தேகம் தீர்ந்துவிடும். 'தளபதி வல்லாள தேவனின் தங்கையை நன்றாகப் பார்த்துப் பழக்கப்பட்டு அடையாளம் சொல்லக் கூடிய ஒருவர் இருந்தால் அவள்தானா என்பதை இப்போதே உறுதிப்படுத்திக் கொண்டு விடலாம். ஆனால் அவன் ஒருவனைத் தவிர அவளை அடையாளம் தெரிந்தவர்கள் யார் இருக்கிறார்கள் அங்கே?'

இராசசிம்மன் மனத்தின் உணர்ச்சிப் பரப்பெல்லாம் சோகம் கவ்விட மேலே என்ன நினைப்பதென்று தோன்றாமல் மயங்கி நின்றான்.

"சக்க சேனாபதி! எனக்குத் தெரிந்த பெண்களுக்குள்ளே வல்லாளதேவனின் தங்கைக்கு ஒரு தனிக் குணம் உண்டு. பெண்ணின் அழகும், ஆணின் நெஞ்சுரமும் கொண்டவள் பகவதி. ஒரு பெரிய வீரனின் தங்கை என்று சொல்வதற்கு ஏற்ற எல்லா இலட்சணங்களும் பகவதியிடம் உண்டு" என்று கண்களில் நீர் மல்க அவன் கூறினான்.

"நீங்கள் மனத்தைத் தேற்றிக் கொள்ளுங்கள். இறந்துகிடப்பது அந்தப் பெண்ணாக இருக்க முடியாதென்றே எனக்குத் தோன்றுகிறது. நாம் இந்த விவரத்தைத் தமனன் தோட்டத்தில் விசாரித்து உறுதி செய்து கொள்ளலாம். இவள் பகவதியாயிருக்கும் பட்சத்தில் தமனன் தோட்டத் துறையில் வந்து இறங்கினால்தான் இந்தப் பாதையாகப் புறப்பட்டிருக்க முடியும்? இந்தப் பெண்ணை அடையாளம்

சொல்லி,—'இவள் எப்போது, யாருடன், எந்தக் கப்பலில் வந்து இறங்கினாள்'— என்று கப்பல்துறை ஊழியர்களிடம் விசாரிப்போம். அந்த விசாரிப்புக்குக் கூட அவசியமில்லை. ஏனென்றால் இவள் பகவதியாயிருந்து கப்பலில் தென்பாண்டி நாட்டிலிருந்து வந்திருந்தால் தமனன் தோட்டத்துத் துறையிலேயே கப்பலை விட்டுக் கீழிறங்க முடியாமல் நம் வீரர்கள் சிறைப்பிடித்து நிறுத்தியிருப்பார்கள். நான்தான் கப்பல்களைத் தடுத்து நிறுத்தும்படி கண்டிப்பான கட்டளையிட்டு




வந்திருக்கிறேனே! நேற்றைக்கு முன் தினம் இரவு தமனன் தோட்டத்திலிருந்து எனக்கு வந்த தகவலிலிருந்து ஒரே ஒரு கப்பல்தான் பிடிபட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கப்பலில் வந்திருந்தால் இந்தப் பெண்ணை இறங்கிவர விட்டிருக்க மாட்டார்களே?" என்று சக்கசேனாபதி விளக்கமாகச் சொன்னபோது, 'அவர் சொல்கிறபடியே இருக்கலாமென்று' இராசசிம்மனுக்கும் தோன்றியது.

"ஒரேமாதிரி முக அமைப்பும், தோற்றமும் உள்ள பெண்கள் வேறு இடங்களில் இருக்க முடியும். இறந்து கிடக்கும் பெண் பகவதியைப் போன்ற தோற்றமுடைய வேறொருத்தியாகவும் இருக்கலாம்" என்று நினைத்து மன அமைதி அடைய முயன்றான். மனத்தின் வேதனையும், குழப்பமும் பிடிவாதமாகத் தணிவதற்கு மறுத்தன. சலனமில்லாத முக பாவத்தோடு நின்று கொண்டிருந்தவர் புத்தபிட்சு ஒருவர்தான். 'நன்றாகப் பழுத்த பழங்களெல்லாம் உதிராமல் இருக்கும்போது காற்றின் கொடுமையால் பிஞ்சுகளும், காய்களும், மரத்திலிருந்து உதிர்ந்து விடுவதுண்டு. தோல் சுருங்கி நரை திரை மூப்புக் கண்டவர்களுக்கெல்லாம் வராத சாவு இளைஞர்களுக்கு வந்து விடுகிறது. அவரவர்களுக்கென்று அளந்து வகுத்த நாட்களுக்கு மேல் யாரும் வாழப் போவதில்லை' என்று உலக நியாயங்களை எண்ணிப் பார்த்துக் கலக்கத்தைத் தவிர்த்தவர் அவர் ஒருவர்தாம்.

"இந்தச் சோக முடிவை எண்ணிக் கலங்கி இப்படியே நின்று கொண்டிருந்தால் செயலும், பயனும் நிறைந்த நம் நேரம் கடந்து போய்விடும். நாம் தமனன் தோட்டம் போக வேண்டுமே!" என்று தங்கள் காரியத்தை நினைவுபடுத்தினார் சக்கசேனாபதி. குமார பாண்டியன் குனிந்த தலை நிமிராமல் நீண்ட பெருமூச்சுவிட்டான்.

"இனியும் இப்படியே செயலிழந்து கவலைப்பட்டு நிற்பதில் பயனில்லை. வாருங்கள்! யாராயிருந்தாலும் இறந்து கிடக்கும் இந்தப் பெண்கொழுந்து நம்முடைய பரிதாபத்துக்கும் இரக்கத்துக்கும் உரியவள். செய்ய வேண்டியதைச் செய்து விட்டு நம் வழிகளில் நாம் நடப்போம்!" என்று சொல்லி விட்டுத் தண்ணீர் ஓடி அரித்திருந்த ஒரு பள்ளத்தில் அந்தப் பெண்ணின் உடலை எடுத்து இட்டார் புத்த பிட்சு. சக்க சேனாபதியும் அவருமாக இரு பக்கங்களிலும் உட்கார்ந்து கைகளால் மண்ணைத் தள்ளிக் குழியை மூட ஆரம்பித்தார்கள். மண்ணோடு அவர்கள் கண்ணீரும் குழியில் சிந்தியது. புதரில் மலர்ந்திருந்த காட்டுப் பூக்கள் சிலவற்றைக் கை நிறையப் பறித்துக் கொண்டு வந்து அந்தக் குழிக்குள் சொரிந்து விட்டு முகத்தை மூடிக்கொண்டு விசும்பினான் இராசசிம்மன்.

"தம்பி! உணர்ச்சியை அடக்கு. நீ முகத்தை மூடிக் கொண்டு அழுவதைப் பார்த்தால் இவள் நீ நினைக்கிற பெண்ணென்றே உன் மனம் நம்பி விட்டதாகத் தெரிகின்றது. மண்ணைச் சொரிந்தாலும், மலரைச் சொரிந்தாலும் வேறுபாடு தெரியாத நிலையை இந்தப் பெண் அடைந்து விட்டாள். உன் அனுதாபத்துக்குரிய உயிர் இப்போது இந்த உடம்பில் இல்லை. இது எலும்புச் சட்டம் வேய்ந்து நரம்பு நாரிட்டுத் தைத்த தோல் பை. இந்தக் கரிய கூந்தலும், நீல நெடுங் கண்களும், கோலப் புருவமும், காலக் கனலெரியில் அழியும் மாயங்கள். இந்தப் பெரியவர் அடிக்கடி உன்னை 'இளவரசே' என்று கூப்பிடுவதிலிருந்து நீ ஒரு அரசகுமார


Kassels
காஸல்ஸ் விசிறியின்கீழ்
குளுமையும்
நிம்மதியும்!
மாட்ச்வெல் எலக்ட்ரிகல்ஸ்
(இந்தியா) லிமிடெட்
தபால் பெட்டி 156, புது டில்லி
தொழிற்சாலைகள்: பூனா மற்றும் டில்லி.
பூரண விற்பனை உரிமையாளர்கள்:
ரேடியோ லாம்ப் ஒர்க்ஸ் லிட்.
பம்பாய் . கல்கத்தா . டில்லி . மதராஸ்
கான்பூர் . பங்களூர் . பாட்னா
இந்தூர் . வார்தா . கௌஹாத்தி


எக்லா
தென் இந்தியா விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப் போல், நீங்களும்
தென்னாட்டின் அதி உஷ்ண நிலையிலும்கூட குளு
மையும் இதமும் பெறலாம்... மனோரம்மிய மணம்
பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால். குளுமை
யான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த
ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி
தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு
லட்சிய முகப்பவுட
ரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE


னென்று தெரிகிறது. ஆளுங்குடியிற் பிறந்தவனுக்கு இறுகிய மனம் வேண்டு மென்று அரசியல் நூல்கள் சொல்லும். நீயோ துன்பங்களைக் கண்டபோதெல் லாம் இப்படி நெகிழ்ந்து விடுவாய் போலி ருக்கிறது. உன் மனத்தில் நான் சொல் லும் உரைகளைப் பதித்துக் கொள்ளப்பா" என்று குழியில் மண்ணைத் தள்ளிக் கொண்டே கூறினார் புத்த பிட்சு. அப்போது.

"நீல நிறத்தனவாய் நெய்யணிந்து
போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே!
கோலங் குயின்ற குழலும் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியில் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியில் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே......"

என்று அவர் 'கையறு நிலையாக' (ஒருவர் மரணத்துக்கு வருந்திப் பாடும் பாட்டு)ப் பாடிய பாட்டு தன் நெஞ்சுக்கென்றே பாடியது போல் தோன்றியது இராச சிம்மனுக்கு.

குழியை மண் மூடிக்கொண்டது. உடல் மறைந்தது. எங்கோ சிறிது தூரம் நடந்து போய் ஒரு சிறு அரசங் கன்றை வேரோடு பிடுங்கி வந்து அந்த இடத் தில் ஊன்றினார் புத்த பிட்சு. பக்கத்தில் தேங்கியிருந்த தண்ணீரையும் வாரி இறைத்தார். பின்பு தலை நிமிர்ந்து மற்ற இருவரையும் பார்த்துச் சொன்னார்:— "நாம் போகலாம், ஒரு உயிரின் கதையை மண்ணுக்குள் பத்திரப்படுத்தி விட்டோம். இதற்கு முன்னும் இப்படி எத்தனையோ உயிர்களின் கதைகளை மண் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனையோ? மண்ணுக்கு ஒன்றும் புதிதில்லை."

மூன்று பேரும் மௌனமாகத் திரும்பி நடந்தார்கள். இரவு தங்கியிருந்த கட்ட டத்தின் வாயிற்படிக்குப் பக்கத்தில் போனபோது, முதல் நாளிரவு உறக்கம் வராமல் அந்தப் படியில் உட்கார்ந்து 'வாழ்க்கையின் முழுமையைப் பற்றித் தான் பைத்தியக்காரத்தனமாகச் சிந் தித்த சிந்தனைகள் இராசசிம்மனுக்கு நினை வுக்கு வந்தன. முழுமையாம், முழுமை! எங்கே இருக்கிறது அது? "உங்கள் இருவருக்கும் குதிரைகள் இருக்கின்றன. நான் நடந்து போக வேண்டியவன். எனக்கு விடை கொடுங்கள்" என்று அந்த இடத்துக்கு வந்ததும் புத்த பிட்சு விடைபெற்றுக் கொண்டார். பிரிந்து போகும்போது மீண்டும் அவர் இராச சிம்மன் முகத்தைப் பார்த்து, "தம்பி! கவலையை விடு; நீ அரசகுமாரன்; ஆயிரக் கணக்கான உயிர்களைக் கொல்லும் போரில் கூடக் கலங்காமலிருக்க வேண் டியது உனக்கு அறம். இந்த ஒரு உயிருக் காகவே இப்படி மயங்கிச் சோர்கிறாயே? போ; உன் காரியத்தைப் பார்க்கக் கிளம்பு" என்றார்.



பெரிய கடிகாரத்தைவிடச் சின்ன கடிகாரம் மெதுவா ஓடறதே; ஏன்?"
"பெரிசுக்குச் சரியா 'சின்னதாலே' ஓட முடியுமா, அப்பா! சின்னது மெதுவாகத்தான் ஓடும்!"

சிறிது நேரத்தில் மழையானும், காற்று னும், சிதைந்த காட்டு வழியில் அவர்கள் குதிரைப் பயணம் தொடங்கியது. 'காலக் கனலெரியில் வேம் வாழி நெஞ்சே' என்ற பிட்சுவின் சொற்கள் மனத் தளத்தி லிருந்து நீங்காமல் ஒலிக் கூத்தாடச் சிந்தனை கனியும் மனத்தோடே சென் றான் குமாரபாண்டியன்.

நடுவழியில் நிகழ்ந்த அந்தத் துயர நிகழ்ச்சி பொலன்னறுவையிலிருந்து புறப்படும் போதிருந்த உற்சாகத்தை இருந்த இடம் தெரியாமல் அழித்து விட்டது. புத்த பிட்சுவின் வார்த்தைகள் 'வாழ்க்கையின் முழுமை'யைப் பற்றி அவன் முதல் நாள் நினைத்த அதே நினைவு களை வேறொரு விதத்தில் அவனுக்குத் திருப்பிக் கூறுவது போல் ஒலித்தன.

அந்த வார்த்தைகளை நினைத்துக் கொண்டே பயணத்தைத் தொடர்ந்தான் அவன். இந்தச் சோக நிகழ்ச்சியை உண்டாக்குவதற்கென்றே நேற்று மழை யும், காற்றும் வந்தனவா? இந்தச் சோகத்தை எதிர்பார்த்தே நேற்றிரவு அவன் மனத்தில் வாழ்வின் முழுமை யைப் பற்றிய அந்தத் தோற்றங்கள் உண்டாயினவா? ஒன்றும் புரியவில்லை. அப்போது அவன் மனநிலை எப்படி இருக்கும் என்பதை உணர்ந்தவர்போல் சக்க சேனபதியும் பேசாமல் உடன் வந்து கொண்டிருந்தார்.

அவர்களிருவரும் தமனன் தோட்டத் துக் கப்பல் துறையை அடைவதற்குச்

சிறிது தொலைவு இருக்கும்போதே சுழ காட்டுக் கடற்படை வீரர்கள் சிலர் எதிரே வந்து அவர்களைச் சந்தித்து விட்டனர். அவர்களைச் சந்தித்த உடனே ஆவலோடு, "நீங்கள் தடுத்து நிறுத்தியிருக்கும் கப்பலில் வந்திருப்பவர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? இந்த ஒரு கப்பலைத் தவிர வேறு ஏதாவது கப்பல் வந்ததா? இந்தச் சில நாட்களில் யாராவது ஒரு இளம் பெண் கப்பலில் வந்து இறங்கித் தனியாக இந்தக் காட்டு வழியில் புறப்பட்டதை நீங்கள் பார்த்தீர்களா?" என்று எத்தனை சந்தேகங்கள் தம் மனத்தில் இருந்தனவோ அத்தனைக்கும் சேர்த்துக் கேள்விகளைக் கேட்டார் சக்க சேனாபதி.

"இந்தச் சில நாட்களுக்குள் இங்கு வந்ததே இப்போது பிடிபட்டுள்ள ஒரே கப்பல்தான். கப்பல் விழிஞத்திலிருந்து வருகிறதென்று அறிந்தோம். அதில் ஒரு முன்குடுமிக்கார மனிதரும், ஒரு இளம் பெண்ணும், இன்னொரு இளைஞனும், ஆக மூன்று பேர்கள் வந்தார்கள். ஆனால் கப்பல் பிடிபட்ட தினத்தன்று மாலை அந்த இளைஞன் மட்டும் காணாமல் போய் விட்டான்" என்று கடற்படை வீரர்கள் பிடிபட்ட கப்பலின் நிலைமையை விவரித்து மறுமொழி கூறினர்.

அத்தியாயம் 9

அவசரப் பயணம்

[illegible]ம் வழியில் எதிர்கொண்டு சந்தித்த தமனன் தோட்டத்துக் கடற்படை வீரர்கள் கூறிய செய்தியிலிருந்து இறந்த பெண் கப்பலில் வந்து இறங்கியவளாக இருக்க முடியாதென்று தெரிந்தது. அவ்வளவில் தாற்காலிகமான திருப்தி ஒன்று ஏற்பட்டது இராசசிம்மனுக்கு. 'கப்பலில் வந்தமூன்றுபேர்களில் ஒரேஒரு இளைஞன்தான் காணமற் போய் விட்டானென்று இவர்கள் கூறுகிறார்கள். எனவே பகவதி இந்தக் கப்பலில் வந்து இறங்கியிருக்க முடியாது!" என்று தன் மனத்தை ஆற்றிக் கொண்டு, "சக்கசேனாபதி! என்னைத் துன்புறுத்துவதையே நோக்கமாகக் கொண்டு, என் பகைவர்கள் அனுப்பிய முரட்டு ஒற்றர்கள் சிலர் பிடிபட்டிருக்கும் இந்தக் கப்பலில் வந்திருக்கலாம் என்று நீங்களும் நானும் வந்து எதிர்பார்த்தோம். ஆனால் கப்பல் விழிஞத்திலிருந்து வந்தது என்றும் அதில் ஏற்கனவே தப்பிச் சென்ற இளைஞனைத் தவிர, ஒரு முன் குடுமிக்காரரும், இளம் பெண்ணொருத்தியும் இருக்கிறார்களென்றும் இவர்கள் கூறுவதிலிருந்து அவர்கள் யாராயிருக்கலாம் என்பதை இப்போதே நான் கூறிவிடமுடியும்" என்று அவரிடம் சொன்னான் இராசசிம்மன்.

"முடியுமானால் சொல்லுங்களேன், பார்க்கலாம். யார் அவர்கள்?" என்று அவர் அவனைக் கேட்டார்.

"வேறு யாராயிருக்க முடியும்? மகாமண்டலேசுவரர்தான் தம் பெண்ணையும் நாராயணன் சேந்தனையும் அனுப்பியிருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது."

"அவர் அவ்வாறு அனுப்புவதற்கு இப்போது என்ன அவசியம் வந்துவிட்டது?"

"எனக்கு ஏதாவது அந்தரங்கமான செய்தியை அவர் சொல்லி அனுப்பியிருக்கலாம் அல்லவா?"

"அவரிடம் தங்கியிருப்பது போல் இருந்து அவரையும் ஏமாற்றிவிட்டு அரசுரிமைப் பொருள்களையும் சொல்லாமல் கடத்திக் கொண்டு என்னோடு இங்கு ஓடி வந்திருக்கிறீர்கள் நீங்கள். இவ்வளவு அவமதிப்பாக நடந்து கொண்டபின்பும் உங்களைத் தேடிக் கடல் கடந்து தம் பெண்ணையும், அந்தரங்க ஒற்றனையும் அவர் எப்படி அனுப்புவார்?"

"எல்லா மனித உணர்ச்சிகளையும் அளவிடுவது போல் மகாமண்டலேசுவரருடைய உணர்ச்சிகளையும் சாதாரணமாக அளவிட முயல்கிறீர்கள். அதனால்தான் உங்களுக்கு இப்படித் தோன்றுகிறது, சக்க சேனாபதி!"

"அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இளவரசே! முதலில் உங்களுக்கு ஒரு சந்தேகம் ஏறக்குறையத் தீர்ந்து விட்டது. இந்தத் துறையில் நாம் வந்து இறங்கிச் சென்ற நாளுக்குப் பின் எந்தக் கப்பலிலும் வல்லாள தேவனின் தங்கை பகவதி வந்து இறங்கிச் சென்றதாக யாரும் அடையாளம் கூறவில்லை. அதனால் நேற்றிரவு காட்டில் இறந்த பெண்ணைப் பற்றி நீங்கள் சந்தேகப்பட்டு அழுதது வீண் மனப்பிரமைதான். உருவ ஒற்றுமை உங்கள் கண்களை ஏமாற்றிவிட்டது."

"இல்லை, சக்கசேனாபதி! நீங்கள் என்ன சமாதானம் சொன்னாலும் இப்போதைக்கு அதை நான் தீர்மானிப்பதற்கு இயலாது. இறந்தது அந்தப் பெண்ணில்லை என்பதை அங்கே சென்று அவளை உயிருடன் பார்த்தாலொழிய நான் நம்ப மாட்டேன்" என்று இராசசிம்மன் அப்போதும் பிடிவாதமாகத்தான் அவருக்குப் பதில் கூறினான்.

தமனன் தோட்டத்துக் கப்பல் துறை நெருங்க, நெருங்க அவர்கள் இருவருடைய மனத்திலும் ஆவல் அடித்துக் கொண்டது.

அவர்களுடைய குதிரைகளுக்குப் பக்கத்திலேயே அடக்கமாகக் கடற்படை வீரர்களும்நடந்துவந்துகொண்டிருந்தார்கள்.

"பிடிபட்ட கப்பலிலிருந்து யாரோ ஒரு இளம் பிள்ளை மட்டும் தப்பி விட்டதாகக்

கூறுகிறீர்களே! நீங்கள் ஏன் அவ்வளவு கவனக் குறைவாக நடந்து கொண்டீர்கள்? உங்களுக்குத் தெரியாமல் அவன் எப்படித் தப்பினான்?" என்று அந்த வீரர்களிடம் கடுமையான குரலில் கேட்டார் சக்கசேனாபதி.

"அதை எங்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. கப்பல் பிடிபட்ட அன்று நடுப் பகலில் அந்த இளைஞன் கீழ்த் தளத்திலுள்ள அறைக்குப் போனான். அதன் பின் அவனை நாங்கள் காணவே யில்லை. முன்குடுமிக்காரரிடமும் அந்தப் பெண்ணிடமும் விசாரித்ததில் 'அந்த இளைஞன் கப்பலிலிருந்து தப்பிச் சென்று விட்டான்' என்றும், எப்படித் தப்பினான், எங்கே போனான் என்பது தங்களுக்குத் தெரியாதென்றும் அவர்கள் கூறிவிட்டார்கள். நாங்களும் முடிந்தவரையில் தேடிப் பார்த்தோம். அந்த இளைஞன் அகப்படவில்லை" என்று கடற்படையைச் சேர்ந்த வீரர்கள் கூறினர்.

"முன்குடுமிக்காரரும், அந்தப் பெண்ணுமே, அவனை உங்களுக்குத் தெரியாமல் தப்பச் செய்துவிட்டு உங்களிடம் ஒன்றும் தெரியாதது போல் நடித்திருக்கிறார்களென்று எனக்குத் தோன்றுகிறது. எல்லாவற்றுக்கும் உங்கள் பாதுகாப்புக் குறைவுதான் காரணம்."

"அப்படியிருப்பதற்கில்லை, மகாசேனாபதி! ஏனென்றால் முன்குடுமிக்காரரும் அந்தப் பெண்ணும் தப்பிச் சென்ற இளைஞன் மேல் கோபமாக இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் அந்த இளைஞனைப் பற்றித் தங்களுக்குள் வெறுப்பாகவும், கேவலமாகவும் பேசிக் கொள்கிறார்கள். அவன் அவர்களுக்கு வேண்டியவனாக இருக்க முடியாது."

"இவர்கள் சொல்வதைக் கேட்டால் எல்லாம் ஒரே புதிராக அல்லவா இருக்கிறது?" என்றான் அதுவரையில் குறுக்கிட்டுப் பேசாமல் அமைதியாகக் குதிரையைச் செலுத்திவந்த குமார பாண்டியன்.

தமனன் தோட்டம் வந்தது. எதிரே கடலும் நிறுத்தப்பட்டிருந்த அந்தக் கப்பலும் துறையும் தெரிந்தன.

"நேற்று மழையால் இந்தப் பகுதியில் ஒன்றும் அழிவு நேரவில்லையா?" என்று சக்கசேனாபதி கேட்டார்.

"பலமான காற்றும் சாரலும்தான் அடித்தன. மழை ஒன்றும் கடுமையில்லை இங்கே. கப்பலின் பாய்களையெல்லாம் இறக்கி நங்கூரத்தை வன்மையாகக் கட்டி வைத்தோம். அதனால் ஒன்றும் அழிவு இல்லை" என்று ஊழியர்களிடமிருந்து அவருக்கு மறுமொழி கிடைத்தது.

"சக்கசேனாபதி! அதோ, பாருங்கள் நான் அனுமானித்துக் கூறியபடிதான் நடந்திருக்கிறது. நாராயணன் சேந்தனும், குழல்மொழியும்தான் வந்திருக்கிறார்கள். கப்பல் மேல் தளத்தில் நிற்கிறார்கள் பாருங்கள்......" என்று வியப்போடு சுட்டிக் காட்டினான் குமார பாண்டியன். அவர் பார்த்தார். தங்கள் இளவரசனைக் கண்ட மகிழ்ச்சியோடு முகம் மலரக் கப்பல் மேல் தளத்தில் நின்றார்கள் சேந்தனும் குழல்மொழியும். சக்கசேனாபதிக்குப் பெருத்த ஏமாற்றமாகிவிட்டது. குமார பாண்டியனின் பகைவர்களால் அனுப்பப் பெற்றவர்கள் அந்தக் கப்பலில் வந்திருக்கலாமென்று எதிர்பார்த்த அவருக்கு உண்மையிலேயே வந்திருப்பவர்களைப் பார்த்தவுடன் ஏமாற்றத்தைத் தவிர வேறு எதுவும் உண்டாகவில்லை.

குதிரையை விட்டு இறங்கியதும் சக்கசேனாபதியையும் முந்திக்கொண்டு குமார பாண்டியன் ஓட்டமும், நடையுமாகக் கப்பலை நோக்கிச் சென்றான். ஆவலின் உள்ளத் துடிப்பும், கால்களின் வேகமும் போட்டியிடும் நடை அது.

'அடடா! நான் எவ்வளவு பாக்கியசாலி...மகா மண்டலேசுவரரின் அருமைப் புதல்வியும் அந்தரங்க ஒற்றரும் சேர்ந்து என்னைப் பார்க்கக் கடல்கடந்து வந்திருக்கிறார்களே?...வரவேண்டும்...வரவேண்டும்..." என்று புன்னகை செய்து கொண்டே அவர்கள் முன் போய் மேல் தளத்தில் நின்றான் இராசசிம்மன்.

குழல்மொழியும் சேந்தனும் மரியாதை செய்து வரவேற்கிற பாவனையில் வணங்கினர். குழல்மொழி பேசவில்லை. முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றாள். அவள் இடையாற்றுமங்கலத்திலிருந்து சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டதற்காகத் தன்மேல் கோபம் கொண்டிருக்கிறாள் என்று நினைத்தான் இராசசிம்மன். அந்தப் பெண்மைத்தனமான பொய்க் கோபம் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அந்தச் சமயத்தில் சேந்தன் அருகில் வந்து கூறலானான் :—"குமார பாண்டியருக்கு மிக அவசரமான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன். இங்கேயிருக்கும் கடற்படை வீரர்கள் இரண்டு நாட்களுக்கு மேல் அநியாயமாக எங்களைத் தடுத்து நிறுத்தித் தாமதமாக்கி விட்டார்கள். நாங்கள் உங்களைத் தேடி வந்த காரியம் மிக முக்கியமானது. அவசியத்தோடு கூடிய அவசரம் நிறைந்தது. மகாமண்டலேசுவரர் எங்களை அனுப்புவதற்குமுன் இந்த அவசரத்தை மிகவும் வற்புறுத்தியிருக்கிறார்."

சேந்தன் இராசசிம்மனிடம் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது சக்கசேனாபதியும் அங்கு வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்ததும் நாராயணன் சேந்தன் பேச்சை நிறுத்தி விட்டான். குழல்மொழி மருண்டு நின்றாள்.

"நான் எதிரிகளின் கப்பல் ஒன்றை நினைத்து இந்தக் கட்டளை இட்டிருந்தேன். இவர்கள் விவரம் தெரியாத குறையினால் உங்கள் கப்பலைத் தடுத்து நிறுத்தி அநாவசியமாக உங்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து விட்டார்கள். நீங்கள் இருவரும் தயவுசெய்து மன்னிக்க வேண்டும்" என்று வந்து நின்றவுடன் சேந்தனிடமும் குழல்மொழியிடமும், மன்னிப்



புக் கேட்டார் அவர். மன்னிப்புக் கேட்டவருக்குக் கேட்கப்பட்ட இருவருமே பதில் எதுவும் சொல்லவில்லை.

இரண்டு மூன்று விநாடிகள் அமைதியில் கரைந்தன. "சேந்தா! நீ ஏதோ அவசரமான செய்தி மகாமண்டலேசுவரர் சொல்லி அனுப்பியிருக்கிறாரென்றாயே. அதை இன்னும் நீ எனக்குச் சொல்லவே இல்லையே?" என்று அந்த அமைதியைக் கலைத்து இராசசிம்மன் கேட்டான்.

"மன்னியுங்கள். அதை உங்களிடம் கூறுவதற்கு நீங்கள் என்னோடு இப்படிக் கொஞ்சம் தனியே வரவேண்டும்." சேந்தனின் இந்தச் சொற்களைக் கேட்டு இராசசிம்மன் சிறிது தயங்கினான். சக்கசேனாபதியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"போய் வாருங்கள்! எனக்குப் பிறருடைய இரகசியங்களைத் தெரிந்துகொள்வதில் அக்கறை கிடையாது. நான் இங்கேயே நின்று கொண்டிருக்கிறேன்" என்று அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்.

சேந்தன் குமார பாண்டியன் பின் தொடரக் கீழ்த்தளத்துக்கு இறங்கிக் குழல்மொழியின் அறைக்குள் போனான். குழல்மொழியும் அவர்கள் இருவருக்கும் பின்னால் சென்றாள். மூன்று பேரும் கப்பல் அறை வாயிலை அடைந்தபோது முதலில் குமாரபாண்டியனை உள்ளே போக விட்டு அடுத்து வந்த குழல்மொழியை வாசலிலேயே தடுத்து நிறுத்தினான் சேந்தன். சேந்தனின் அந்தச் செயல் இராசசிம்மனைத் திகைக்க வைத்தது. குழல்மொழிக்கு முகத்தில் அடித்தாற்போல் இருந்தது.

"என்னுடைய அறைக்குள் நான் நுழைவதை நீங்கள் யார் தடுப்பதற்கு?" என்று சிவந்த உதடுகள் துடிக்க ஆத்திரத்தோடு சேந்தனைக் கேட்டாள் குழல்மொழி.

"இது உங்களுடைய அறைதான் என்பதில் சந்தேகமில்லை, அம்மணி! ஆனால் இப்போது நாங்கள் பேச வேண்டிய செய்தி எங்களுடையது" என்று அழுத்தமாகக் கூறிவிட்டுத் தானும் உள்ளே போய்க்கொண்டு கதவை உட்பக்கம் தாழிட்டுக் கொண்டான் சேந்தன்.

முகத்தில் அறைந்தது போல் 'படீ'ரென்று அடைபட்ட கதவுக்கெதிரே நின்ற குழல்மொழியின் அழகிய முகத்தில் கோபம் விளையாடியது.


"நெட்டையனை நம்பினாலும் குட்டையனை நம்பக் கூடாது என்கிற பழமொழி சரியாகத்தான் இருக்கிறது" என்று ஆத்திரத்திரத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் அவள். கோபத்தில் இரண்டு கைவிரல்களையும் சேர்த்து நெரித்துச் சொடுக்கிக் கொண்டே வேகமாக மேல் தளத்துக்கு ஏறிப் போனாள் குழல்மொழி. அங்கே சக்கசேனாபதி நின்று கொண்டிருந்தார். வேறொரு பக்கமாகப் பாய் மரத்தில் சாய்ந்தபடி அவளும் போய் நின்று கொண்டாள்.

"அம்மா! நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். உண்மையை எனக்குத் தெரிவித்து விட்டால் நல்லது. இதே கப்பலில் உங்களோடு யாரோ ஒரு இளைஞனும் வந்தானாமே? இப்போது அவன் எங்கே தப்பி ஓடினான்? அவனாகத் தப்பியிருந்தாலும், நீங்கள் தப்ப விட்டிருந்தாலும், நடந்ததை மறைக்காமல் என்னிடம் கூறி விடுங்கள். அந்த வாலிபன் யாரென்பதையும் எனக்குச் சொல்லி விடுங்கள்" என்று சக்கசேனாபதி குழல்மொழியிடம் கேட்டார்.

"எனக்கு ஒன்றும் தெரியாது! எல்லாம் அந்தக் குட்டை மனிதரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது அவர்தான் இங்கே சர்வாதிகாரி"—என்று எரிச்சலோடு பதில் சொன்னாள் அவள். அதே சமயத்தில் சேந்தன் பின்தொடர இராசசிம்மன் அங்கே வந்தான். அவன் முகம் இருண்டிருந்தது.

"சக்கசேனாபதி! மிக அவசரமான சூழ்நிலை என்னை இப்பொழுது அழைக்கிறது. நான் உடனே இதே கப்பலில் தாய்நாடு திரும்பப் போகிறேன். காசிப மன்னர் எனக்கு வாக்களித்தபடி இன்னும் எட்டு நாட்களுக்குள் சமுத்துப் படையோடு உங்களை எனக்கு உதவியாக அனுப்புவார்" என்று பதற்றத்தோடு கூறினான் இராசசிம்மன்.

(தொடரும்)





SUNSHINE
Glaxo

வேலைக்காரி அம்புஜம் வேகமாக ஓடோடியும் வந்தாள்!

"டாக்டரம்மா! நர்ஸம்மா ஸ்டவ்வு பத்த வச்சாங்க. ஸ்டவ்வு வெடிச்சு அவுங்க மூஞ்சியெல்லாம் ஒரே காயம். உடுப்பு முழுதும் நெருப்பு பத்திக்கிட்டுது. மயக்கம் போட்டு விழுந்து கிடக்காங்க" என்று படபடப்புடன் கூறினாள்.

ஓடினேன் ஆஸ்பத்திரிக்கு.

நர்ஸ் நிர்மலா மயங்கிக் கிடந்தாள். உடனேயே முதலுதவி செய்துவிட்டு அவளைப் பெரிய ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்க்க ஆம்புலன்சுக்குப் 'போன்' செய்தேன்.

ஆம்புலன்ஸ் கார் வந்தது. அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தேன்.

எல்லா டாக்டர்களுமே வந்து பார்த்துச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார்கள். அவள் உடல் முழுதும் கட்டுப் போடப் பட்டு அவளை ரண சிகிச்சை வார்டு ஒன்பதாம் நம்பர் படுக்கையில் போட்டார்கள்.

அவளுக்குப் பிரக்ஞை வரவேயில்லை.

டாக்டர்களிடம் சொல்லி விட்டு நான் என் பிரத்தியேக ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டேன். மறுபடியும் என் ஆஸ்பத்திரி வேலைகள் முடிந்த பிறகு அவசியம் வந்து பார்ப்பதாகச் சொல்லி விட்டு வந்தேன்.

நான் டாக்டர் பரீட்சை பாஸ் செய்ததும் அல்லூர் தர்மை ஆஸ்பத்திரியில் ஹவுஸ் ஸர்ஜனாக வேலை பார்த்தேன். பிறகு மூன்று வருட காலம் அந்த ஜில்லாவின் பல பாகங்களுக்கு என்னை ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றினார்கள். என்னால் அவ்வளவு ஊர்களுக்கு அடிக்கடி மாற்றிப் போவதில் உண்டாகும் கஷ்டங்களைச் சமாளிக்க முடியவில்லை. கடைசியில் பிரத்தியேகமாக ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்தி விட்டு, சர்க்கார் வேலைக்கு முழுக்குப் போட்டு விட்டேன்.


அந்த ஊரில் பிரத்தியேக லேடி டாக்டர்கள் இல்லாததால் எனக்கு நன்றாக தொழில் நடந்து கொண்டு வந்தது. நல்ல கட்டடம் ஒன்றில் ஆஸ்பத்திரியை வைத்துக் கொண்டு சிறிது தூரத்தில் உள்ள வீடு ஒன்றில் குடியிருந்து வந்தேன். ஆஸ்பத்திரி நேரம் காலை எட்டு முதல் பன்னிரண்டு மணி வரை. மாலையில் மூன்று முதல் ஆறு மணி





வரை. ஆஸ்பத்திரியைக் கவனித்துக் கொள்ள வேலைக்காரி அம்புஜம் இருந்தாள். எனக்குத் தொழிலில் உதவி செய்ய ஒரு நர்சையும் போட்டுக் கொண்டேன்.

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒருநாள். ஆஸ்பத்திரியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஒரு அழகிய யுவதி வந்தாள். அப்படிப்பட்ட அழகியை நான் இதுவரை என் வாழ்வில் கண்டதே இல்லை.



தயங்கித் தயங்கிவந்தாள்

"வாம்மா, யார் நீ? உனக்கு என்ன உடம்பு?" என்று கேட்டேன்.

"இல்லே டாக்டரம்மா. நான் நோயாளியே இல்லே."

"பின் உனக்கு என்னிடம் வரவேண்டிய வேலை...?"

"உங்களுக்கு ஒரு நர்ஸ் தேவையாயிருக்கும் என்று எண்ணி வந்தேன்."

"நீ ஒரு நர்ஸா?"


"ஆமாம், டாக்டர்! பாஸ் செய்த நர்ஸ் நான். வருடம் இரண்டாகி விட்டது. நிலையான வேலை கிடைக்கவில்லை."

"நான் நர்ஸ் வேலைக்கு வைத்துக் கொள்ளும் உத்தேசம் இல்லே. வருகிறார்கள்; சொல்லாமல் அவர்கள் ஓடி விடுகிறார்கள். நர்ஸ் இருப்பதை விட இல்லாமல் இருப்பதே தேவலே என்றாகி விட்டது."

"இல்லே, டாக்டரம்மா! நீங்கள் விரட்டினாலும் கூடப் போக மாட்டேன் நான். நீங்கள் எப்படிச் சம்பளம் கொடுத்தாலும் சம்மதம். வேண்டாம் என்று மட்டும் சொல்லி விடாதீர்கள்."

அவள் கெஞ்சினாள். என் மனம் இரங்கியது. அவளை வேலைக்கு வைத்துக் கொண்டேன்.

நர்ஸ் நிர்மலா என்னுடைய நர்ஸாகி விட்டாள். தான் ஒரு அனாதை என்றும் தனக்கென்று யாரும் இல்லை என்றும் அவள் சொன்னாள்.



அவள் வேலையை அப்பழுக்கு இல்லாமல் செய்தாள். அவளிடம் எனக்கு அபாரமான பிரியம் உண்டாயிற்று.

அதே ஊரில் இருந்த ஒரு பிரபல மிராசுதார் ஒருவர் தம்முடைய தாயாருடைய உடம்பைக் காட்ட ஒரு தடவை அழைத்து வந்தார். அந்த அம்மாளுக்கு வைத்தியம் செய்தேன்.

அந்த மிராசுதார் கலியாணமாகாதவர். எங்களுக்குள் நட்பு உண்டாயிற்று. நானும், அவரும் நெருங்கிப் பழகினோம். ஒரு நாள்கூட அவர் ஆஸ்பத்திரிக்கோ வீட்டுக்கோ வரத் தவறியதில்லை.

அப்படிப்பட்டவர் சில காலமாக ஒரு மாதிரியாக இருப்பதாக எனக்குப் பட்டது.

அதுவும் நிர்மலா வந்தபிறகு தான் அவர் ஒரு மாதிரியாக இருப்பதாக எனக்குத் தோன்றியது. அவர் செய்கைகள் என் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தின.

வரவர அவர் போகும் போக்கைப் பார்த்தால் நிர்மலாவை மணம் செய்து கொண்டு விடுவார் போல் ஆகிவிட்டது.

அவர்களைப் பகிரங்கமாகக் கண்டிக்கலாமா என்று முடிவில் நினைத்தேன். ஏனோ அப்படிச் செய்வதற்குத் துணிவு ஏற்படவில்லை.

அவளை வேலையை விட்டே நிறுத்திவிடலாமா என்று பார்த்தேன். அப்படிச் செய்து விட்டால் மிராசுதார் மறு நிமிடமே அவளைத் தம் வீட்டுக்கு அழைத்துப் போய் விட்டால்......?

ஆகையால் அவர்களைச் சூழ்ச்சியால் வெல்லத் திட்டமிட்டேன்.

நிர்மலா நல்ல அழகி என்றுதானே மிராசுதார் அவளை அடையப் பார்க்கிறார். அவர் அவளை விரும்பாதபடி செய்து விட்டால்? அதற்கு என்ன வழி? முடிவு கண்டேன்.

* * *


தினமும் ஊசிகளையும் ஸிரிஞ்சுகளையும் நன்றாகக் கொதிக்க வைத்து எடுத்து வைப்பது நிர்மலாவின் வேலை.

முதல் நாள் இரவே அவள் ஒரு கிண்ணத்தில் ஊசிகளையும் ஸிரிஞ்சுகளையும் போட்டு விட்டு மறு நாள் விடியற்காலை ஐந்து மணிக்கு எழுந்து கிண்ணத்தை 'ஸ்டவ்'வின் மேல் ஏற்றித் தண்ணீரைக் கொதிக்க வைத்துப் பிறகு சாமணத்தால் ஒவ்வொன்றாக வெளியே எடுத்து வைப்பது வழக்கம்.

நான் செய்த முடிவு இதுதான். வருகிற சனிக்கிழமை இரவு அவள் வேலை முடிந்து ஸிரிஞ்சுகளையும் ஊசிகளையும் கிண்ணத்தில் போட்டுத் தண்ணீரை

தொடர்ச்சியான ஆறு விளம்பரங்களில் ஐந்தாவது இது.

கயிறின் கதை





ராட்டையின் சங்கீதம்

மலையாளக் கடற்கரை யெங்குமுள்ள தென்னை மரங்களடர்ந்த தோப்புகளிலிருந்து ராட்டைகளின் ரீங்காரம் எழுந்து ஒலிப்பதைக் கேட்கலாம். தங்க நிறத் தென்னஞ் சவுரியைக் கயிறாகத் திரிக்கும் வேலையில் பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அழகிகள் ஆனந்தமும் சுறுசுறுப்புமாக வேலையைச் செய்கிறார்கள். காரணம் வீட்டு அடுப்பில் பூனை படுத்துவிடாமல் தடுப்பது அந்த வேலைதான். கயிறு முறுக்கும் வேலை கைராட்டைகள் மூலம்தான் நடைபெறுகிறது புராதன முறையான கைகளால் கயிறு திரிக்கும் காட்சிகளையும் அவ்வப்போது காணலாம்.

இந்தியாவில் ஒவ்வொரு வருஷமும் 120,000 டன் கயிறு தயாரிக்கப்படுகிறது. 23,000 டன் கயிறை பாய்கள், மெத்தைகள், தளவிரிப்புகள், பைகள் முதலியவை தயாரிக்க நமது தொழிற்சாலைகள் பயன்படுத்துகின்றன. 45,000 டன் கயிறு ஏற்றுமதியாகிறது. இதனால் அந்நிய நாட்டு நாணயப்பரிவர்த்தனையில் கணிசமான வருவாய் கிடைக்கிறது. ஹாலந்து, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகியவை முக்கியமாகக் கொள்முதல் செய்பவை. கப்பற்கயிறுகள், பணி முட்டுகள் செய்யப் பாக்கி 52,000 டன் பயன்படுகிறது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தக் குடிசைத் தொழில் முக்கியமான பங்கு பெறுகிறது.


இந்தியாவில் விளையும் 330 கோடித் தேங்காய்களில், 162 கோடி நெற்றுகளை, 130,000 டன்கள் கயிறும், கயிறில் தயாராகும் பொருள்களும் செய்யக் கயிற்றுத் தொழில் உபயோகப் படுத்துகிறது. இந்தத் தொழில் மூலம் நாட்டுக்கு 11 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. 500,000 குடும்பங்களுக்கு—பெரும்பாலும் பெண்களுக்கு—வேலை கிடைக்கிறது.

காயர் போர்டு இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருப்பது. திட்டமான தயாரிப்பு, பொருள்களின் தன்மை நிர்ணயம், ஒழுங்கான முறையில் விற்க ஏற்பாடு செய்வது ஆகிய சேவைகளே இந்த போர்டின் நோக்கம்.

விலை மலிவான கயிற்றுப்பாய்கள், மெத்தைகள், தளவிரிப்புகள் ஆகியன உங்கள் அலுவலகங்களுக்கும் வீடுகளுக்கும் அழகு சேர்க்கின்றன.

காயர் போர்டு

(கவர்ன்மென்ட் ஆப் இந்தியா) எர்ணாகுளம்.

ஷோ-ரூம்கள் & விற்பனை நிலையங்கள்:

16 A, அசப் அலி ரோடு, புது டில்லி—போன்: 26988

1/155, மவுண்ட் ரோடு, மதராஸ்-2—போன்: 85787

1 A, மஹாத்மா காந்தி ரோடு, பெங்களூர்

கஸ்தூர் நிவாஸ, பிரெஞ்சு ரோடு, பம்பாய்—7—போன்: 74057

5, ஸ்டேடியம் ஹவுஸ், சர்ச்கேட், பம்பாய்

EP CB 5

விட்டு விட்டுப் போகும்போது அவள் அறியாமல் அந்தக் கிண்ணத்தில் சூடு கண்டவுடன் பொங்கும் ஒரு அமிலத்தைத் தண்ணீரில் கொஞ்சம் விட்டு வைத்து விடவேண்டியது. விடியற்காலம் அவள் 'ஸ்டவ்'வில் வைத்துச் சூடு ஏற்றும்போது சூடு ஏற ஏறத் தண்ணீர் கொதித்து அந்த அமிலத்தின் சேர்க்கையால் கிண்ணத்தில் உள்ள விரிசல்கள் வெடித்து அவள் முகத்தை விகாரப் படுத்தி விடும். அவள் அதை எதிர்பார்த்திருக்க மாட்டாள்.

அப்புறம் முகம் விகாரமானவளை மிராசுதார் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார் என்று முடிவு செய்தேன்.

சனிக்கிழமை இரவு எப்படியும் இதைச் செய்து முடித்து விட்டால் ஞாயிறு விடியற்காலம் அவள் முகம் விகாரமடைந்து விடும் என்று தீர்மானித்தேன்.

சனிக்கிழமைக்கு இன்னும் மூன்று நாட்கள் இருக்கும் போதே என்னுடைய முயற்சி இல்லாமலேயே என் எண்ணம் நான் எதிர்பார்த்ததைவிட இவ்வளவு சீக்கிரம் நிறைவேறும் என்று நான் கண்டேனா?

அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்த மறுநாள் ஆஸ்பத்திரிக்கு மறுபடியும் போனேன். அவள் என்னிடம் பணி புரியும் நர்ஸ். நான் அடிக்கடி போய்ப் பார்க்கவிட்டால் ஊர் என்னசொல்லும்?

தவிரவும் அவள் கஷ்டப்படுவதைக் கண்டு களிக்கவும் ஆசை. எனக்குப் போட்டியாக வந்தவளாயிற்றே!

மனத்துக்குள் இருந்ததை வெளியில் காட்டாமல் உபசாரமாக, "என்ன நிர்மலா! இப்படியாகி விட்டதே. உன் முகம் எவ்வளவு வசீகரமாக இருந்தது தெரியுமா? களை பொருந்திய உன் முகம் இப்படியாகி விட்டதே" என்று முதலைக் கண்ணீர் விட்டேன்.

"டாக்டர் அம்மா! நீங்க ஏன் வருத்தப் படுறீங்க? நானே எவ்வளவு சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கிறேன், தெரியுமா? கடவுள் என் விஷயமாய் இப்பொழுது தான் கண் திறந்தார்" என்று கூறினாள் நிர்மலா.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"சந்தோஷப் படுகிறாயா? கடவுள் கண் திறந்தாராவது? உனக்குப் பைத்தியமா, நிர்மலா?" என்றேன்.

"கேளுங்கள், டாக்டரம்மா! நான் ஏன் விபத்தை வரவேற்கிறேன் என்பதைச் சொல்லுகிறேன்" என்றாள் நிர்மலா.

.

சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தேன். என்னுடைய பள்ளிக்கூட வாத்தியாரம்மா மிகவும் நல்லவர். அவர் தயவால் பத்தாவது படித்து முடித்தேன். அப்பொழுது என்னுடைய துரதிர்ஷ்டம் அவர் இறந்து விட்டார். பிறகு சிலர் தயவால் ஒரு பள்ளியில் வாத்தியாரம்மா ஆனேன்.

அங்கு மூன்று மாதங்கள் இருப்பதற்குள், அப்பப்பா! சக உபாத்தியாயினிகள் என்னிடம் காட்டிய பொறாமை இவ்வளவு அவ்வளவல்ல. நான் நல்ல அழகி என்பதுதான் காரணம். அது என் குற்றமா? அந்தப் பள்ளி மானேஜர் இளகிய சுபாவம் உள்ள ஒரு இளைஞர். போதாதா மற்றவர்களுக்கு? என்னையும் அவரையும் சேர்த்துக் கதை கட்டி விட்டார்கள்.

இந்தக் கதை தலைமை உபாத்தியாயினி காதில் விழுந்து விட்டது. அவளும் தீர விசாரியாமல் என்னைக் கூப்பிட்டு, "உன்னால் என் பள்ளிக்குக் கெட்ட பெயர் வரவிருக்கிறது. அதைத் தடுப்பது என் பொறுப்பு. நீ வேலையை ராஜினாமா செய்" என்றாள்.

வேறு வழி? ராஜினாமா எழுதிக் கொடுத்து விட்டு வெளியேறினேன்.

அதன் பிறகு காரியாலயம் காரியாலயமாய் வேலைக்கு ஏறி இறங்கினேன். ஒரு காரியாலயத்தில் 'இண்டர்வ்யூவ்'க்குக் கூப்பிட்டார்கள். குறிப்பிட்ட தினம் அங்கு போனேன்.

அன்று இண்டர்வ்யூவுக்கு மூன்று பெண்களும் பத்து ஆண்களும் வந்திருந்தார்கள். பெண்களில் நான்தான் அழகி.

வந்திருந்த ஆண்கள் என்னைப் பார்த்துக் கொண்டே ஜாடைமாடையாக, "வாடா, போய்விடலாம். நமக்கு எங்கேடா கிடைக்கப் போகிறது?" என்று குத்தலாகப் பேசியதுமல்லாமல் வந்திருந்த பெண்கள் கூட, "அழகில்லாட்டா அதுவே ஒரு பெருங் குறை" என்று பேசிக்கொண்டார்கள்.

எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல் இருந்தது. அதற்கு ஏற்றாற் போல் எனக்குத்தான் வேலைகிடைத்தது.

ஆபீஸில் இன்னும் ஏழெட்டுப் பெண்கள் வேலை செய்து வந்தார்கள். ஆனால் ஆபீஸில் எல்லோர் கண்களும் என்னைச் சுற்றியே வட்டமிட்டன. அதனால் பெண் குமாஸ்தாக்கள் வெறுப்புடன் என்னைப் பார்ப்பார்கள். அந்த வேலைக்கும் முழுக்குப் போட்டேன்.

கடைசியில் நர்ஸ் வேலைக்குப் படித்து விட்டு நர்ஸாகி விடுவது என்று முடிவு கட்டினேன்.

பாஸ் செய்ததும் ஒரு டாக்டரிடம் வேலைக்கு அமர்ந்தேன். ஒரு மாதம்

ஆயிற்று. ஒரு நாள் டாக்டரை அவசரத் தேவைக்காக கூப்பிட வீட்டுக்கு ஓடினேன்.

நடைக் கதவு சாத்தியிருந்தது.

கூப்பிட வாயெடுத்தேன்.

உள்ளே காரசாரமாகப் பேச்சு நடந்தது காதில் விழுந்தது.

"அந்த மினுக்கி எப்போது என் தலையில் கல்லைப் போடப் போகிறாளோ? அவளை வேலையை விட்டுப் போகச் சொல்லுங்கள். அவளைப் போகச் சொல்லி விட்டு 'அவலட்சணமான நர்ஸ்' தேவை என விளம்பரம் கொடுங்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள் டாக்டரின் மனைவி. உடனே வந்த சுவடே தெரியாமல் ஓடிவிட்டேன்.

கடைசியில் பெண் டாக்டர்களிடம் தான் வேலை செய்வது என்று நிர்மானித்து உங்களிடம் வந்தேன்.

ஒரு வித ஆபத்தும் இல்லாமல் இருந்து வந்தேன். ஆனால் சென்ற ஒரு மாத காலமாக மிராசுதார் என்னை விசேஷமாகக் கவனிப்பதையும் அவரை நீங்கள் காதலிப்பதையும் அறிந்தேன்.

உங்களுக்குத் துரோகம் நினைப்பேனா? வேலையை விட்டுப் போய் விடலாமா என்று பார்த்தேன். அப்புறம் சோற்றுக்கு வழி என்ன? ஓரிடத்திலும் நிலையான உத்தியோகம் இல்லாமல் எப்படிக் காலம் தள்ளுவது?

'மிராசுதார் நம் அழகைக் கண்டு தானே நம்மை விரும்புகிறார்? நம் அழகை நாமே அழித்துக் கொண்டால் என்ன? அப்படி நம் அழகை நாம் அழித்துக் கொண்டு விட்டால் அப்புறம் இவ்வுலகில் நிம்மதியாய் வாழலாம்.'

அழகை அழித்துக் கொள்ளும் வழி வகைகளைப் பற்றி ஏதேதோ சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால் என் அதிர்ஷ்டம் கடவுள் எனக்கு அந்த வேலைகூட வைக்கவில்லை. தெய்வாதீனமாக 'ஸ்டவ்' தானே வெடித்து எனக்குப் பேருதவி செய்து விட்டது.

என் உடலில் 'ஸ்டவ்' வெடித்து நெருப்புக் காயத்தால் எரிச்சல் உண்டானாலும் என் உள்ளத்தில் எரிச்சல் துளிக்கூட இல்லை. இனி என் ஆயுசு முழுதும் எந்த ஆணினாலும் எனக்குப் பயமிருக்காது. எந்த மனைவியும் என்னால் தனக்கு ஆபத்து என்று எண்ணவே முடியாது.

தெரிந்ததா, டாக்டர் நான் ஏன் விபத்தை வரவேற்றேன் என்பது?

* * *

என் மனத்துக்குள் ஒரு கடும் புயல் புகுந்து கொண்டு வீசியடித்தது.

நிர்மலா மிராசுதாருக்கு வலைவீசிப் பிடிக்கிறாள். ஆதலால் ஸ்பிரிட்டை கொதிக்க வைக்கும்போது வெடிக்கும் அமிலத்தைக் கலந்து அது வெடித்து அவள் முகத்தை விகாரப்படுத்த வேண்டும். அப்படிச் செய்து விட்டால் என் காதல் தடைப்படாது என்று நான் நினைத்தேன். ஆனால் அவளோ என் காதல் நிறைவேறவும் தன்னால் எந்தக் கணவன் மனைவிக்கும் மனஸ்தாபம் வராமல் இருக்கவும் தன் அழகைத் தானே அழித்துக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறாள் என்பதைக் கேட்டதும் என்னை எரிகிற உலையில் தூக்கிப் போட்டது போல் இருந்தது.

அவள் எனக்குத் தடை என்று நான் செய்த சதி என்ன? நான் தடையாய் இருப்பது கூடாது என்று எனக்காக அவள் செய்த இந்தத் தியாகம்தான் எவ்வளவு மகத்தானது?

என் மனம் என்னை ஆழச் சுட்டு விட்டது.

பிராயச்சித்தம் செய்யத் துடித்தேன்.

மிராசுதார் காலில் விழுந்து அவரையே நிர்மலாவுக்குக் கணவனாக்கி விடுவது என்று முடிவுகட்டினேன். அப்படிச் செய்து விட்டால் அவள் அப்புறம் வயிற்றுப் பிழைப்புக்கு வேலை தேடவேண்டாம் அல்லவா!

என் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்ததும், மிராசுதாரைக் கூப்பிட்டனுப்பினேன்.

அவர் வந்தார்.

நிர்மலாவின் தியாகத்தைச் சொல்லி அவளை மணந்து கொள்ளும்படி வேண்டினேன்.

"அவள் உடல் விகாரப்படலாம். ஆனால் உள்ளம் விகாரப்படவில்லை. அவளைக் கண்டிப்பாய் மணக்கிறேன்" என உறுதி கூறினார்.

அந்தச் சந்தோஷ சமாசாரத்தை நிர்மலாவிடம் சொல்ல நானும் மிராசுதாரும் ஆஸ்பத்திரிக்குப் போனோம்.

அவள் படுத்திருந்த ரண சிகிச்சை வார்டு மரண அமைதியாக இருந்தது.


அட கடவுளே! இது என்ன?

நிர்மலா படுத்திருந்த படுக்கையைச் சுற்றிலும் வெள்ளைத் திரையொன்று போடப்பட்டிருந்தது.

எதிரே வந்த லேடி டாக்டர் என்னிடம் "டாக்டர்! என்னை மன்னியுங்கள். உங்கள் நர்ஸுக்கு ரண ஜன்னி கண்டு விட்டது. அவள் இறந்து ஐந்து நிமிஷம் ஆகிறது. ஐயோ, பாவம்!" என்று கூறினார்.

நிர்மலா நிர்மலமாக அமர பதவி அடைந்து விட்டாள்.

கண்களில் உள்ள நீரை யெல்லாம் பெருக்கி விம்மி அழுவதைத் தவிர இந்த அபாக்கியவதி வேறு என்னதான் செய்ய முடியும்?



102 நேயர்கள் கடிதம் (3)

கடையநல்லூர் நண்பர் கடிதம் 1835/2-ல் எனது கட்டுரைகளின் தரத்தையும் அதை எழுதும் எனது சேவையின் அருமையையும் திரைப்பட வசன கர்த்தாக்களின் போக்கில் மிகப் பல வாறாகப் புகழ்ந்து, வைத்தியத்துக்காகவே மலேயாவிலிருந்து இந்தியா வந்துள்ள தமது நண்பர் ஒருவரின் வியாதியைப் பற்றி எழுதி இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டிருக்கிறார்.

மலேயாவிலிருந்து இந்தியா வரத் தெரிந்தவருக்குக் கடையநல்லூரிலிருந்து சென்னை வரத் தெரியாததேன்? தமக்கே உள்ள ஒரு நிலையை வெளியில் சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டுக் கொண்டு யாரோ ஒரு நண்பருக்கு இப்படி இருக்கிறது, என்ன செய்யலாமென்று எழுதுவோரும் உண்டு. ஆகவே, இவ்வித வியவகாரங்களில் நோயாளிக்கும் வைத்தியருக்கும் இடையில் ஒரு துவிபாஷி இல்லாதிருப்பதுதான் விரும்பத் தக்கது. மேலும் தொடர்ந்து, அவர் எழுதுகிறார்:

''எங்களூரில் வல்லாரை என்னும் மூலிகை மிகவும் விசேஷமாகக் கிடைக்கிறது. இது எதற்கு உபயோகப்படும்? எப்படி உபயோகிப்பது? குண விசேஷங்கள் என்ன?''

''ச்யவனப்பிராசம்செய் பாகத்தையும் எழுதும்படி பணிவோடு வேண்டுகிறேன். அமிர்தப்பிராசம் செய்முறையை ஏன் விளக்கவில்லை? அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் செய்முறையை விளக்கவில்லை. ஆகவே அதனையும் அதன் குணத்தையும் தெரிவிக்கவும்......''

ஐயா! எளிதாக நாமே வீட்டில் செய்து கொள்ளக்கூடிய சிட்கா வைத்தியங்களைத் தெரிவிக்க முற்பட்டவகையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் ஓரளவு விரிவாகவும் எழுத நேரிட்டுவிட்டது. ஆனால் படிப்பவரையெல்லாம் வைத்தியர்களாகச் செய்து விடவேணு மென்றோ...பிறகு வைத்தியர்களே தேவை யில்லை என்ற நிலையை ஏற்படுத்த வேணுமென்றோ செய்கின்ற முயற்சியல்ல. ஆகவே, ச்யவனப்பிராசம், அமிர்தப் பிராசம், அஜமாம்ஸ ரஸாயனம், மகரத்வஜம் — இப்படிப்பட்ட மருந்துகளைப் பற்றிய விசாரணைகளை வைத்தியர்களுக்கே விட்டுவிடுவதுதான் முறையாகும்.

சென்னைவாசி ஒரு சகோதரி, கடிதம் 1844/2-ல் எழுதுகிறார். சின்னத் தங்கச்சியில்லை, அக்காள் என்றாலும் போதாது, மாமி அல்லது அத்தை என்று அழைக்க வேண்டிய வயதினர். இவருக்குக் கடந்த ஒரு வருஷமாக வெறும் பச்சரிசியைச் சாப்பிடும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. சதா கொஞ்சம் அரிசியை வாயிலிட்டு மென்று கொண்டே இருக்க வேணும். வாயில் கொஞ்சம் அரிசி இல்லா விட்டால் ஒரு காரியத்திலும் மனம் ஓடாது. கொஞ்சங் கொஞ்சமாகத் தினம் ஒன்று அல்லது ஒன்றரை ஆழாக்கு அரிசி (வெறும் அரிசியாகவே) தின்று விடுகிறார். ''என்ன செய்தும் அந்தப் பழக்கத்தை நிறுத்தவே முடியவில்லை. அதன் பலன் என் உடம்பு ரொம்பவும் ஊதிப்போய் விட்டது. அடிக்கடி தலை சுற்றல், பேதி முதலியன உண்டாகின்றன. இங்கிலீஷ் டாக்டர்கள் இதைத் தடுக்க மருந்து இல்லை என்று கூறுகிறார்கள். தாங்கள் எனக்கு இந்தப் பழக்கத்தை நிறுத்த ஒரு வழி சொல்வீர்கள் என்று நினைக்கிறேன்...'' என்று எழுதுகிறார்.

இதற்கு எந்த வைத்திய சாஸ்திரத்தில் வைத்தியம் சொல்லியிருக்கமுடியும்?

பார்க்கப் போனால், இச் சகோதரிக்கு அரிசி தின்னும் பழக்கம், ஒரு சகோதரருக்கு சிகரெட் பிடிக்கும் வழக்கம், வேறொருவருக்குப் பொடி போடும் பழக்கம். இப்படி எத்தனையோ. இவற்றால் சரீர சுகம் எவ்விதத்தில் பாதிக்கப்படுமென்பது ஒருபுறம் இருக்கட்டும். சமூகத்தில் ஏற்படும் அசந்தர்ப்ப நிலைகள் காரணமாக இந்தப் பழக்கத்தை நிறுத்தினால் நல்லதென்றும் தோன்றலாமல்லவா? உதாரணமாக, பிரஸ்தாப சகோதரியே தம் உறவினர் வீட்டில் கல்யாணத்துக்காகப் போகிறாரென்று வைத்துக் கொள்வோம். அங்கே பந்தல் படிகளில் செல்ல வேண்டும். ஊஞ்சல் காலத்தில் அருகிலிருந்து பாட வேண்டும். ஊர்வலத்தின்போது ஒரு வரிசைத் தட்டை எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். இச்சமயங்களிலெல்லாம்...? ஒரு ஆழாக்கு அரிசியை மடியில் கட்டிக் கொண்டே சுற்றித் திரிவதும்-அவ்வப்போது அதனின்றும் ஒரு பிடி எடுத்து வாயிலிட்டு மென்று குதப்பிக்கொண்டே சுற்றி நடப்பதும் என்றாகவேணும். கல்யாணத்துக்கு வந்திருப்பவ ரெல்லாம் இதைப் பற்றியே பேச ஆரம்பித்துவிட மாட்டார்களோ.....?

வேண்டாத தான ஒரு [அபத்தியப்] பழக்கம் சீலித்துப் போயிருக்குமானல் அதை விடுவதற்கு ஒரு வழியை நமது சாஸ்திரங்களில் பொதுப்பட்ட வகையில் தெரிவித்துள்ளனர். படிப்படியாக இந்தச் சீலித்துப் போன அபத்தியப் பழக்கத்தை விடுவது அதே சமயத்தில் பழக்கமில்லாத ஆனல் விரும்பத்தக்க ஒரு பத்தியத்தைப் பதிலுக்குப் படிப்படியாகவே ஏற்றுச் சீலத்துக்கொண்டு வருவது. இப்படித்தான் செய்ய வேண்டும்.

இந்தச் சகோதரி, அரிசி மெல்ல வேணுமென்று வாயில் நினைவெடுக்கும்போது ஒரு முறை ஒரு ஏலக்காயையோ — மற்றொரு முறை ஒரு கிராம்பையோ வாயிலிட்டு மெதுவாக மெல்ல ஆரம்பிக்கும் பழக்கத்தைத் தொடங்கினல் போதும். சிறிதுநேரம் வரையில் வாய் நினைவு குறையுமல்லவா? பிறகு ஒரு தரம் அரிசியை சிறிது மெல்ல ஏற்றாலும் பரவாயில்லை. அரிசி ஒன்றையே பிடிப்பிடியாக மென்றுகொண்டிருப்பவர், ஒன்றிரண்டு முறையாவது அதற்குப் பதில் ஏலக்காய் கிராம்பு போன்றதை மென்று வந்தால் அந்த அளவுக்கு அரிசி மெல்வது குறையுமல்லவா? இப்படித்தான் ஒரு முறை கற்கண்டு, வெல்லப்பாகு — தாம்பூலம் என்று இப்படி ஏதாவது ஒன்றில்லாவிடில் ஒன்று என்ற வகையில் மென்றுகொண்டிருக்க ஒரு



மாற்றுப் பொருளை ஏற்று அரிசி மெல்வதைப் படிப்படியாக நிறுத்த வேணும்.

கடிதம் 1848-2ல் பெரியபாளையம்சகோதரி எழுதுகிருள்:


"எனது கழுத்தின் மேல் பாகத்திலும், கீழ்வாய்க்கட்டையின் இணைப்பிலும், அடிக்கடி வீக்கமும் கழற்சியளவு இரண்டு பக்கங்களிலும் உண்டாகித் தொந்தரவுடன் ஜுரமும் அடிக்கடி வருகிறது....'' என்று தொடங்கி, இதற்கு வைத்தியம் என்ன செய்யலாம் என்று கேட்கிருள்.

கண்டமாலை, அபசி என்னும் இனத்தைச் சேர்ந்ததாயிருக்க வேணும் இந்நோய் என்றுதோன்றுகிறது. வசாதி தைலத்தைத் தலைக்குத் தேய்க்க வேணும். அந்தத் தைலத்தால் வாய் கொப்புளிக்க வேண்டும். அதிலேயே ஒரு சொட்டை மூக்கில் உறிஞ்ச வேணும். காதில் ஒரு சொட்டும் விட்டுப் பஞ்சை வைக்க வேணும். உள்ளுக்கு...?

தினம் கொஞ்சம் வெள்ளாட்டுப் பால் சாப்பிட்டு வருவது மிகவும் விரும்பத்தக்கது. குக்குலு: குக்குலு திக்தகம் போன்ற மருந்துகள் நல்லது. எப்படியானலும் தொடர்ந்து சில மாதங்கள் சிகிச்சை பெற வேண்டும். ஒன்று இரண்டு கட்டுரைகள் மூலம்தான் முழு விளக்கமும் தர முடியும். ஆனலும் உடனடியாகச் செய்யக் கூடிய ஒன்று இரண்டு மருந்துகளை எழுதியிருக்கிறேன்.

(தொடரும்)

கல்யாண மஹல்



எஸ். ரங்கநாயகி

அன்று தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. காரணம், பிரபல சங்கீத வித்துவானான தத்தாத்ரேயரின் சிஷ்யன் ராமச்சந்திரனின் சங்கீத அரங்கேற்றம் நிகழ இருந்ததுதான். அதோடு, அதற்கென்று சரபோஜி மகாராஜா கோவிலுக்கு வருவதாக இருந்தார்.

மேடைக்கு வருவதற்கு முன்பாகக் கருவூராரையும், சுப்பிரமண்யரையும் தரிசித்துவிட்டு அம்பாளின் சந்நிதிக்கு வந்தான் ராமச்சந்திரன்.

அவனுக்கு முன்னால் தன் தந்தையுடன் அங்கே வந்திருந்த கல்யாணி, ''ஜெகதம்பிகே! நீயே திருவருள் புரிய வேண்டும். என் தந்தைக்கு உரிய சிஷ்யனாக அவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் என் இதயம் குளிரும்'' என்று அம்மன் எதிரில் உள்ளம் உருகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

''குழந்தாய், ராமச்சந்திரா! அம்பிகையை நினைவுபடுத்திக்கொள், அப்பா. பத்து வருடகாலமாக என் இல்லத்தில் வைத்துக்கொண்டு உனக்குச் சங்கீதம் போதித்தேன். இதோ என் பெயரை நிலைநாட்ட வேண்டிய தினம் இன்று நெருங்கிவிட்டது. மேடைக் கூச்சமின்றி நன்றாகப் பாடி அரசரின் நன்மதிப்பை நீ பெற்றுவிட்டால், நான் எடுத்த முயற்சிகளுக்குப் பலன் கிட்டிவிடும்'' என்று இதயம் கனியக் கூறினார் தத்தாத்ரேயர்.

''சுவாமி! குருநாதரின் ஆசி இருக்கும் வரை சிஷ்யனுக்கு ஒரு குறையும் வராது என்பதைத் தாங்களே எவ்வளவோ முறை கூறியிருக்கிறீர்கள். தங்களது கருணை எனக்குப் பரிபூரணமாகக் கிடைத்துவிட்ட பின் என் சங்கீதம் சோபிப்பதில் தடை என்ன இருக்க முடியும்?'' என்றான் ராமச்சந்திரன்.

சிஷ்யனின் மேதையிலும், அவனுடைய விநயத்திலும் உள்ளம் மகிழ்ந்து போனார் தத்தாத்ரேயர். தம்மிடம் குருகுலவாசத்துக்கு அவன் வந்த நிகழ்ச்சி அவருக்கு நினைவு வந்தது. குருநாதருக்கு வேண்டிய பணிவிடைகளை மட்டுமா அவன் செய்வான்! தாயற்ற அவரது குழந்தையான கல்யாணியை வளர்த்துப் பெரியவளாக்கியதே அவன்தான்! தத்தாத்ரேயருக்கோ குழந்தையைக் கவனிக்க நேரமிராது. அரச சபையிலிருந்தும், ஜமீன்தார்களிடமிருந்தும் அழைப்பு வந்தவண்ணம் இருக்கும். ராமச்சந்திரனைச் சிஷ்யனாக ஏற்ற முதல் நாளிலேயே அவர் பொறுப்பு குறைந்ததை உணர்ந்தார். அன்று அவன் கையில் வளர்ந்த கல்யாணி இன்று அவனையே கவனித்துக் கொள்ளத் தொடங்கி விட்டாள்!

ராமச்சந்திரனும், கல்யாணியும் பழகும் விதத்தைப் பார்த்து எல்லாத் தந்தைகளையும் போலவே தத்தாத்ரேயர் தம் மனத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்.

ஆனால் அதைத் தமது மகளிடமோ ராமச்சந்திரனிடமோ அவர் வெளியிடவில்லை. அதற்கு என்ன அவசரம்? அவன் மேடைக் கூச்சமில்லாமல் சிறப்பாகப் பாடி அரசரின் நன்மதிப்பைப் பெற்று ஆஸ்தான வித்வானாக ஆனபிறகல்லவா அவன் கல்யாணியை மணக்கத் தகுதியாவான்!

''சுவாமி! அரசர் எழுந்தருளி விட்டார்'' என்று கூறினான் ஓடிவந்த சேவகன்.

உடனே சந்நிதியில் ஒரு பரபரப்பு. தத்தாத்ரேயர் ஓட்டமாக ஓடினார் அரசரை வரவேற்க.

''இதோ பாருங்கள்.''

ராமச்சந்திரன் திரும்பி நோக்கினான். அம்பாளின் குங்குமத்தைக் கையில் ஏந்திய பொற்சித்திரமாக, சிரிக்கும் சிலையாகக் கல்யாணி தயங்கி நின்றிருந்தாள்.

''என்ன வேண்டும், கல்யாணி?''

''இதோ, அம்பாளின் குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறிய அவள் குங்குமத்தை நீட்டினாள்.

''கல்யாணி! உன் அன்பு எனக்கு உதவி புரியட்டும்'' என்றான் ராமச்சந்திரன்.

''அம்பாளின் கிருபையும், குருவின் ஆசியும் தங்களுக்குப் பூரணமாக உண்டு. தங்கள் சங்கீதம் சோபிக்கும் என்பதில் ஐயமில்லை'' என்று தைரியம் கூறினாள் கல்யாணி. ஆதரவுடன் கூறிய அவள் மொழிகள் அவனுக்குச் சற்றுத் துணிவைக் கொடுத்தன. நன்றிப் பெருக்குடன் அவளை நோக்கி விட்டு, மேடை

ஏற அவனிடம் விடைபெற்றான் ராமச்சந்திரன். அவனும் வாழ்த்துக்கள் கூறினான்.

சரபோஜி மகாராஜா கம்பீரமாகத் தம் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவர் அருகில் மந்திரி பிரதானிகள் வீற்றிருந்தனர். தத்தாத்ரேயரும் அவர் அருகில் அமர்ந்திருந்தார்.

நேரம் ஏற ஏறச் சங்கீதத்தின் இனிய நாதம் இன்பத் தேனாகச் செவிகளில் பாய்ந்தது. தாங்கள் விடும் மூச்சுக் காற்று சங்கீதத்தின் இடையே புகுந்து அதைக் கலைத்து விடப் போகிறதே என்ற பயத்துடன் மக்கள் மெல்ல மூச்சு விட்டனர். வசந்தத்தின் இனிமையும், நீரோட்டத்தின் தெள்ளிய பாங்கும், அருவியின் சலசலப்பு கமகங்களும், மாருதத்தின் குழைவும் அரசரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. சங்கீதத்தின் பேரின்ப ஒலியில் தம்மை முழுவதும் மறந்தவராகி, கண்களை மூடி, செவிகளை மட்டும் திறந்து விட்டிருந்தார் அவர்.

சங்கீதப் பேரலை ஓய்ந்து சமத்துக்கு வந்து நின்ற போது சரபோஜி மகாராஜா சுய உணர்வு பெற்றார். பிறகு தம் ஆசனத்திலிருந்து எழுந்து ராமச்சந்திரனின் சங்கீதத்தை வானளாவப் புகழ்ந்தார். உடனே தம் கழுத்திலிருந்த முத்து ஹாரத்தை அவனுக்குப் பரிசாகக் கொடுத்து, அப்பொழுதே அவனைத் தமது ஆஸ்தான வித்துவானாக நியமித்து விட்டதாகவும் கூறினார்.

கல்யாணியின் இதயம் மகிழ்ச்சியால் நிரம்பியது. மானசிகமாக அம்பாளுக்கு வந்தனம் செலுத்தினாள். இனி விரியப் போகும் தன் வாழ்க்கை மலரில் ஆனந்தத் தேனை நிரப்பினாள். தத்தாத்ரேயரின் ஆனந்தமோ சொல்லில் அடங்காது நின்றது.

அரங்கேற்று விழாவை இனிது முடித்துக் கொண்டு தங்கள் வாசஸ்தலமான திருவையாற்றுக்கு மூவரும் திரும்பியபோது, "சுவாமி! ஒரு விண்ணப்பம்!" என்றான் ராமச்சந்திரன்.

"என்ன, அப்பா வேண்டும்?" என்று குருநாதர் கேட்டார். இன்னமும் அவர் வாயிலிருந்து ஒரு புகழ் உரைகூட வரவில்லையே என்பது கல்யாணிக்கும் சற்று வருத்தம்தான்.

"என் தந்தையைப் பார்த்து விட்டு வர அனுமதி தர வேண்டும்" என்றான் மெதுவாக.

தத்தாத்ரேயர் சற்று மௌனமாக இருந்தார். பிறகு, "போய் வாப்பா. சீக்கிரமே திரும்பி விடு. நீ வந்த பிறகு நான் உன் தந்தையைச் சந்திக்க வேண்டும்" என்று சூசகமாகத் தம் எண்ணத்தை வெளியிட்டார். அவர் எண்ணத்தை அவன் புரிந்து கொள்ளவில்லை; புரிந்து கொள்ள முயலவுமில்லை. அப்பொழுது அவன் மனம் வேறொரு இடத்தில் லயித்திருந்தது. அரங்கேற்றத்தின்போது பெற்ற பரிசை அவன் தன் குருநாதரிடம் சமர்ப்பிக்க வில்லையே. தந்தை கோபிக்காமலிருக்க வேண்டுமே என்று கல்யாணி பயந்தாள். தத்தாத்ரேயரின் மனம் அப்போது அவர் இருந்த நிலையில் அதைப் பெருங்குற்றமாக மதிக்கவில்லை.

அரசரிடம் பெற்ற பரிசை எடுத்துக் கொண்டு ஊருக்கு ஓடினான் ராமச்சந்திரன்.

• • •

"மகனே!" ஓடி வந்து அணைத்துக் கொண்டார் வஸ்மீகநாதன். "சௌக்கியமாக இருக்கிறாயா அப்பா?" என்று அன்னை பார்வதி கேட்டாள் வாத்சல்யத்துடன்.

"அப்பா, உங்களுக்கு ஒரு சந்தோஷ சமாசாரம்!" மகாகனம் பொருந்திய சரபோஜி மகாராஜா அவர்கள் என்னை ஆஸ்தான வித்துவானாக நியமித்திருக்கிறார். என் சங்கீத அரங்கேற்றம் முடிந்து விட்டது, அப்பா..." என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறினான்.

அன்னையின் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கெடுத்தது. களிப்பின் மிகுதியில் வார்த்தைகள் வெளிவர வில்லை. மகனின் கன்னங்களைத் தொட்டுத் திருஷ்டி கழித்துச் சொடுக்குவதைத் தவிர அவளுக்கு வேறு ஒன்றும் புலப்படவில்லை.

"கேட்டுக் கொள்ளடி, கேட்டுக் கொள். உன் மகன் ஆஸ்தானப் பாடகன். 'செப்புக் காசுக்கு உதவாத உன் மகனுக்கு என் மகளைத் தர மாட்டேன்' என்று வீம்பு பேசினானே உன் அண்ணன், அவனிடம் போய்ச் சொல்லு முதலில்!" மனம் மகிழ்ச்சி பொங்க, சவால் விடுவது போல் பேசினார் வஸ்மீகநாதன்.

"அவனைத் திட்டி என்ன லாபம்? முதல் மூன்று மாப்பிள்ளைகளும் நல்ல செல்வாக்குடன் இருக்கிறார்கள். அண்ணாவுக்குத் தானுகட்டும், எதில் குறைவு? காவிரிக் கரையில் நிலபுலன்கள் என்றால் தலைமுறைக்கும் சாப்பாடு என்பது பிரசித்தம் அல்லவா?"



"போதுமே உன் அண்ணன் பெருமை! உன் அண்ணனுக்குக் காவிரிக் கரை நிலமென்றால் எனக்கும் மகாமகக் குளக்கரையில் ஒரு ஓட்டு வில்லை வீடு இருக்கிறது. அவனுக்கு நான்கு பெண்கள். எனக்கு ஒரே ஒரு மகன்..."

"அத்தை!" வாசலிலிருந்து வந்த குரலொன்று அவர்கள் பேச்சுக்குத் தடை விதித்தது.

"வா, அம்மா, பானுமதி! உன்னைத்தான் இவ்வளவு நேரமாக நினைத்துக் கொண்டிருந்தேன். அத்தான் எப்பொழுது வருவான் என்று தவித்

துக் கொண்டிருந்தாயே, இதோ வந்து விட்டான். வெறும் கையுடன் வரவில்லை. உன்னை அழைத்துச் செல்லவே வந்து விட்டான். அவன் சங்கீத அரங்கேற்றம் முடிந்த அன்றைக்கே அரசர் அவனை ஆஸ்தானப் பாடகனாக நியமித்து விட்டாராம். அப்பாவிடம் சொல்லு 'அப்பா, உங்களுக்கு வரப்போகும் கடைசி மாப்பிள்ளை எல்லோரையும் விட உயர்ந்த பதவி வகிக்கப் போகிறார். உங்கள் மகள் இனிய வாழ்வு வாழப் போகிறாள்' என்று!''

பானுமதி ராமச்சந்திரனை ஒரு முறை ஏறிட்டு நோக்கினாள். பிறகு வெட்கத்துடன் தலை குனிந்தாள். உள்ளே ஓட்டமாக ஓடி விட்டாள். எவனைப் பார்க்க வேண்டுமென்று இவ்வளவு நாட்களாகத் துடித்தாளோ, அவனைப் பார்க்க விடாமல், சக்களத்தி போன்ற வெட்கம் கண்களை மூடி, அவளை உள்ளே இழுத்துச் சென்று விட்டதே! அத்தான் தானாகட்டும், பார்க்கக் கூசும்படி அவ்வளவு வளர்ந்து விட்டாரே! இடுப்பில் சின்னஞ் சிறு துண்டைக் கட்டிக்கொண்டு தன்னுடன் மரப்பாச்சி வைத்து விளையாடிய பாலகனாக அவர் எப்பொழுதுமே இருக்கக் கூடாதோ!

ராமச்சந்திரனும் பானுமதியைப் பார்த்துத் திகைத்து நின்று விட்டான். அழகுக் கடையை விரித்து, இளமையின் எழிலைப் பரப்பிச் சித்திரப் பூம்பாவையாக ஒரு நிமிடம் நின்று விட்டு ஓடி விட்டாளே! பாவாடை கட்டி, சொக்காய் அணிந்து, 'டே ராமா, வாடா, மகாமகக் குளத்தில் நீச்சல் அடித்து விளையாடி விட்டு வருவோம்' என்று கூறி இழுத்துச் சென்ற பானுமதியா இவள்! அரசர் அளித்த மாலையைப் பானுமதியிடம் கொடுக்க வேண்டுமென்று ஓடோடி வந்தவனுக்கு நாணம், இப்படி ஒரு தடையாக அமைய வேண்டுமா?

''ஏனம்மா பானுமதி, இப்படி வெட்கப் பட்டு ஓடுகிறாயே! உனக்கு இவன் முன்பே பழக்கமானவன்தானே?''

வன்மீகநாதனுக்கு மைத்துனரிடம் இருந்த வெறுப்பு, அவர் பெண்ணிடம் கிடையாது. பானுமதி பதில் கூறவில்லை. கொல்லை வழியாகச் சுபச் செய்தியைக் கூறுவதற்குத் தன் வீட்டை நோக்கி ஓடினாள்.

பானுமதியின் தந்தை மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். விரைவிலேயே விவாகத் தேதியையும் குறித்து விட்டார். குருவுக்குச் செய்தி அனுப்ப நான் இல்லை; அரசருக்கும் செய்தி அனுப்பவில்லை. அதிக ஆடம்பரமின்றிக் கும்பேசுவரர் சந்நிதியிலேயே பானுமதியின் கரம் பற்றினான் ராமச்சந்திரன்.

வாசலில் வண்டிச் சத்தம் கேட்டதுமே, கல்யாணி ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். வாசலில் நின்றவர்களைப் பார்த்ததும் திகைத்து நின்று விட்டாள். அவள் யார்? அழகின் பிம்பமாக, புதுமணம் கமழும் மலராக ராமச்சந்திரனுடன் ஒட்டி நிற்கிறாளே!

ராமச்சந்திரன் சிரித்துக் கொண்டே பானுமதி பின் தொடர உள்ளே வந்தான்.

''பானு! இவள்தான் கல்யாணி. குருநாதரின் திருக்குமாரி. சங்கீத ரஸனை அதிகம். தவறுகளை எடுத்துக் கூறித் திருத்துவாள்'' என்றான் ராமச்சந்திரன். பானு அவளை நமஸ்கரித்தாள்.


கல்யாணிக்கு இன்னமும் வியப்பு நீங்கவில்லை. பானுமதியின் நடை உடையிலிருந்து அவளைப் புரிவதுபோலவும் இருந்தது; ஆனால் தன் மனத்துக்குப் புரிவது பொய்யாக இருக்க வேண்டுமே என்ற நப்பாசையும் இருந்தது.

''கல்யாணி! இவள் என் மாமன் மகள்; என் உடைமையாகி விட்டவள்'' என்றான் ராமச்சந்திரன்.

'ஐயோ, கடவுளே!' ஒரு பேரிரைச்சல் கல்யாணியின் மனத்தில் எழும்பியது. இடி விழுந்த ஓசை காதில் விழுந்தது. பூமி நடுக்கத்தில் கால்கள் ஸ்திரமாக நிற்க முடியாமல் தத்தளித்தன. உள்ளத்திலே எழும்பியிருந்த கோட்டை நிராசை என்னும் ஆயுதத்தின் காரணமாகத் துகள் துகளாகச் சிதறி விழுந்தது. எல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டன. இனி அவளுக்கும் அவனுக்கும் சம்பந்தமே கிடையாது. தலையில் கைவைத்தபடி அவள் உட்கார்ந்து விட்டாள்.

''கல்யாணி! உனக்கு இன்று என்ன வந்து விட்டது? ஏன் இப்படிச் சோர்வுடன் உட்கார்ந்து விட்டாய்?'' அவள் அருகில் வந்து கேட்டான் ராமச்சந்திரன். என்றும் போல் இன்றும் கல்யாணியை அவன் தன் சகோதரியாகவே நினைத்தான்.

கல்யாணி சட்டென்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள். வெளியே சென்றிருக்கும் தந்தை வருவதற்குள் அவர்களை அந்த இடத்திலிருந்து அகற்றி விட வேண்டும். இல்லாவிடில் என்ன அனர்த்தம் நேர்ந்து விடுமோ,



சொல்வதற்கில்லை. மகளின் இனிய எதிர்காலத்தைத் தயார் செய்து வைத்திருக்கும் அவர் எரிமலையாகப் பொங்கி விடுவார்.

"ஒன்றுமில்லை, நேற்றிலிருந்து ஒரே தலைசுற்றல் மயக்கம்......வாம்மா பானு. உனக்கு நல்வரவு கிட்டட்டும்...ராமச்சந்திரா! வண்டியில் வந்த களைப்பு நீங்க, நீங்கள் இருவரும் காவிரிக் கரைக் கட்டடத்தில் சற்று இளைப்பாறிவிட்டு வருகிறீர்களா?" என்று கல்யாணி மெதுவாகக் கேட்டாள்.

"ஆமாம் கல்யாணி! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆற்றுப் படுகையில் காலாரச் சற்று உலாவ வேண்டும். வண்டியில் அமர்ந்து வந்தது காலைக் கடுக்கிறது. அப்பாவைப் பார்த்து விட்டுப் போகிறேன்" என்று கூறியபடி ஒட்டுத் திண்ணையில் அமர்ந்து விட்டான் ராமச்சந்திரன்.

"வேண்டாம்! அப்பா வர நேரமாகும். ஏதோ விஷயமாக அரண்மனைக்குச் சென்றிருக்கிறார். நாளைக் காலை வந்து சந்தித்தால் போதும்...உம், எழுந்திருங்கள், என்ன தயக்கம்? பானுவும் களைப்படைந்திருக்கிறாள், போங்கள்..." கல்யாணி அவசரப்படுத்தினாள்.

"ஏது, நீ விடமாட்டாய் போலிருக்கிறது... பானு, கல்யாணியின் குணமே இப்படித்தான். குழந்தைப் பருவத்தில் அவளை வளர்த்துப் பெரியவளாக்கியதற்குப் பதிலாக இப்பொழுது என்னை வளர்க்க அவள் ஆரம்பித்து விட்டாள். என் சௌகரியத்தில் ஒரு குறையும் வைக்க மாட்டாள். கல்யாணி, நீயும் தான் எங்களுடன் வாயேன். திருவையாற்றுக் காவிரிக் கரையின் அழகை நீதான் பானுவுக்கு எடுத்துச் சொல்ல முடியும்."

கல்யாணியின் மனம் அழுது தவித்தது. துயரத்தை மனப் பெட்டியில் இறுக்கிப் பூட்டிவிட்டு மென்உதடுகளில் செயற்கை முறுவலைத் தீட்டி, "இன்றுதான் நான் வருவேனுக்கும். சந்திரன் உங்களுக்கு வழி காட்டுவான்; காவேரி இன்னிசையுடன் உங்களை வரவேற்பாள். போய் வாருங்கள்" என்றாள். குமிழியிட்ட கண்ணீரை மறைக்கப் புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். பானுமதி வெட்கித் தலை குனிந்தாள். அவளையும் ராமச்சந்திரனையும் அனுப்பிவிட்டு உள்ளே திரும்பிய கல்யாணி முற்றத்தில் கிடந்த கட்டிலில் குப்புறப் படுத்து விசித்து விசித்து அழுதாள். நெஞ்சக் குமுறலில் உடல் தூக்கித் தூக்கிப் போட்டது.

"கல்யாணி!"

திடுக்கிட்டு எழுந்தாள் கல்யாணி. தத்தாத்ரேயர் வந்து விட்டார். சுழற்றி அடிக்கப் போகும் சூறாவளி, பாய்ந்து ஓட்டமெடுக்கப் போகும் வெள்ளம், நெருப்புக் குழம்பைக் கக்கப் போகும் எரிமலை அனைத்தையும் ஒரு முகமாக எதிர்நோக்கி நின்றாள் கல்யாணி.

"விளக்கைத் தூண்டி விட்டுப் பெரிதாக்காமல் என்னம்மா செய்துகொண்டிருக்கிறாய்? ஏனம்மா கல்யாணி, பூக்களின் மணம் வீசுகிறதே, என்ன விசேஷம்?" குறட்டிலிருந்த தண்ணீரை எடுத்துக் கைகால்களைக் கழுவியபடியே கேட்டார்.

"ஒன்றுமில்லையப்பா, தட்சிண கைலாசர் கோயிலுக்குச் சென்று விட்டு வந்தேன். அர்ச்சனைப் பூவை எடுத்து வந்தேன். அதன் வாசனையாக இருக்கலாம்" என்று மழுப்பினாள் அவள்.

கூடத்தில் காலடி வைத்த அவர் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், பூ முதலியவை வைத்திருப்பதை நோக்கினார்.

"கல்யாணி, யார் வந்திருப்பது?"

"ஆமாம் அப்பா....வந்திருப்பது...."

"என்ன தயக்கம்?"

"ஒன்றுமில்லையப்பா....அவர்...."

"எவர்...?"

"உங்கள் சிஷ்யர் ராமச்சந்திரன்."

"பேஷ், பேஷ்! கல்யாணம் ஆனபிறகு வெட்கப்படக் கூடாதா? முதலிலேயே வெட்கமடைந்து பெயர் கூறத் தவிக்கிறாயே!" கலகலவென்று சிரித்தபடியே கூறினார் தந்தை.

அவர் சிரிப்பும், மகிழ்ச்சியும் அவளுக்குச் சொல்லொணாத வேதனையை அளித்தது. மேற்கொண்டு அடிக்கப் போகும் சூறாவளியில் தத்தளிக்கப் போகும் தந்தையிடம் அவளுக்குப் பச்சாத்தாபம் ஏற்பட்டது. செய்தியைக் கூறி எவ்விதமாவது தந்தையைச் சமாதானம் செய்ய வேண்டும். மகத்தான பொறுப்பு. தன் உள்ளத்தில் புகுந்தவரைத் தன் இல்லத்திலிருந்து விரட்டி விடாதபடி தந்தையைச் சரி செய்ய வேண்டும்.

"அப்பா!"

"என்னம்மா கல்யாணி? ஜோஸ்யரைப் பார்த்து விட்டு வந்தேன். முகூர்த்தத் தேதியை..."

"இல்லை அப்பா!"

"அபசகுனம் போல 'இல்லை' என்ற வார்த்தையை ஏன் பிரயோகிக்கிறாய்?"

கல்யாணி தலை குனிந்தாள். "அப்பா! அவருக்கு வி...வா...கம் முடிந்து விட்டது..." ஒவ்வொரு வார்த்தையாக வெளியிடுவதற்குள் அவள் தவித்து விட்டாள்.

"என்ன? என்ன சொன்னாய்? அவனுக்கு விவாகம் ஆகிவிட்டதா?" மகளையே அடித்துக் கொன்று விடுபவர்போல் தத்தாத்ரேயர் துடித்து எழுந்தார். கல்யாணி சிலையாக நின்று கொண்டிருந்தாள்.

"யாரைக் கேட்டு விவாகத்தை முடித்துக் கொண்டான்? எங்கிருந்து வந்தது துணிவு? யார் அந்தப் பெண்? மகாராஜாவின் புகழ்ச்சியில் மதங்கொண்டு விட்டானா?" முற்றத்தில் இங்கும் அங்கும் நடந்தபடி ஆண் சிங்கத்தைப் போல் கர்ஜித்தார். கல்யாணி ஒடுங்கி நின்றாள்.

"அப்பா!"

"பேசாதே! அவனை முதலில் இங்கே அழைத்து வா!"

"அப்பா! அவர் நாளைக் காலையில் வருவார். அப்பா! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். எல்லாம் நம் தவறு. நம் திட்டத்தை முதலிலேயே அவருக்கு வெளியிட்டிருக்க வேண்டும். அரங்கேற்றத்தில் அரசரின் நன்மதிப்பைப் பெற்ற பிறகாவது அவரிடம் நீங்கள் விவாக விஷயத்தைக் கூறி ஊருக்கு அனுப்பியிருக்க வேண்டும்......"

"சீ, மூடு வாயை, என்மீதே தவறைப்போடுகிறாயோ! குருவுக்குத் துரோகம் செய்வான் என்று நான் கண்டேனா?"

கல்யாணி வாயை மூடவில்லை. "அப்பா! விவாகத்துக்கும் குருவுக்கும் என்ன சம்பந்



வாரமொன்றுக்கு ப்ரூக் பாண்ட் 2,89,00,000 தேயிலைப் பாக்கட்டுகள் உற்பத்தி செய்யும் இணையற்ற திறமையை எப்படிப் புகழ்வது !
...ப்ரூக் பாண்டின் அதிவேக விநியோக முறைதான், அவர்களதேயிலை புத்தம் புதியதாக நித்தமும் திகழ்வதின் காரணம்.
மற்றெல்லாத் தேயிலையை விட, மக்கள் யாவரும் ப்ரூக் பாண்ட் தேயிலையைத்தான் ஆதரிக்கிறார்கள் என்பதில் ஆச்சரியமேது !
எப்பொழுதும்
இன்பம்
தப்பாது அளிப்பது
ப்ரூக் பாண்ட்
தேயிலையே
ப்ரூக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்
BB 273 K


எவ்வளவு சீக்கிரம் சுகமாயிற்று !

வயிற்றுக் கோளாறுகளின்பொழுது

ஈனோ சாப்பிட்டால்

சீக்கிரமே சுகம் அனுபவமாகும்






மந்த உணர்ச்சியும், அருவருப்பும் ஏற்படும் பொழுதும், மிதமிஞ்சி புசிப்பதாலோ அல்லது வயிற்றுக் கோளாறுகளினாலோ அவதிப்படும் பொழுதும், ஒரு கிளாஸ் தளதளக்கும் ஈனோ சாப்பிட்டால் போதும்! ஈனோ சீக்கிரமே வேலை செய்ய ஆரம்பிக்கும். அது வயிற்றிலுள்ள அமித அமிலங்களை அடக்கி, தேக உஷ்ணத்தைத் தணித்து, உங்களை மீண்டும் புத்துணர்ச்சியும், உற்சாகமும் பெறச் செய்யும்!

அருந்துவதற்குச் சுகமான ஈனோ, குழந்தைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை குடும்பத்தில் யாவருக்கும் ஏற்றது. துரித நிவாரணம் பெற ஈனோ சாப்பிடுங்கள்!

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்' உங்களை தென்புடன் வைக்கும்!

குரூப் லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்



"ஏன் ஐயா அவரை அடித்தீர்கள்? இரண்டு வார்த்தை அவரைத் திட்டி அனுப்பிச்சிருக்கக் கூடாதோ?"

"நாவினால் சுட்ட புண் ஆறாது! என்று பெரியவங்க சொல்லி இருக்காங்களே, அதனால் தான் போனால் போகுதுன்னு இரண்டு கொடுத்து அனுப்பிச்சேன்!"

தம்? உங்கள் மூலம் பெற்ற சங்கீதம் இன்னமும் அவரிடம் இருக்கிறது. உங்களுக்குப் புகழ் தேடிக் கொடுக்கப் போகிறார். அவர் காரணமாக உங்கள் பெயர் பிரபலமடையும்''

'' ஹூம், புகழ்! அந்தப் புகழ்தான் அவன் விவாகத்துக்கு அடிகோலியிருக்கிறது. ஆஸ்தான வித்வானாகிவிட்ட மறுநாளே ஒருவன் பெண்ணைக் கொடுத்து விட்டான். இவனும் 'அற்பனுக்கு பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்' என்று காட்டி விட்டான். அவன் புகழை ஒரே விநாடியில் நாசமாக்கப் போகிறேன். அவனைத் தெருவில் நிற்க வைப்பேன்.''

'' அப்பா! அவர் புகழ் மங்கினால் உங்கள் புகழும் மங்கும்.''

'' பாதகமில்லை. 'எனக்கு இரண்டு கண்கள் அவிந்தாலும் அவனுக்கு ஒரு கண்ணாவது அவிய வேண்டும். மனைவியுடன் தெருத் தெருவாக அவன் பிச்சை எடுக்கட்டும்.''

கல்யாணிக்கும் சற்றுக் கோபம் வந்தது. ''அப்பா! அவர் சங்கீதம் தெய்வப் பிரசாதம். அதை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது.''

'' ஏன் முடியாது? குருதக்ஷிணை என் ஆயுதம். அதன் மூலம் நான் தந்த சங்கீதத்தை நானே விலைக்கு வாங்கி விடுவேன்'' என்று சவால் விடுத்தார் தத்தாத்ரேயர்.

'' ஐயோ!'' என்று அலறிவிட்டாள் கல்யாணி. அழுது துடித்தாள். கடைசியில் ஒரு நிர்மானத்துக்கு வந்து ராமச்சந்திரனைக் காணக் காவிரிக் கரையை நோக்கி ஓடினாள் கல்யாணி.

* * *

''பானுமதி! சந்திரனும் இன்று பிரகாசமுடன் காணப்படுவதைப் பார்த்தாயா? நமக்குப் போட்டியாக இங்கு ஒருத்தி வந்திருக்கிறாளே அவள் முக காந்தியைவிட நம் பிரகாசம் அதிகமாக இருக்க வேண்டுமே என்று ஏங்குகிறான் அவன்.''

'' சற்று இரைந்து பேசாதீர்கள். நம் காதல் மொழிகளைக் கேட்டு நட்சத்திர மங்கைகள் கண் சிமிட்டிப் பரிகசிக்கின்றனர்.''

இந்த நேரத்தில் தயங்கித் தயங்கி அவர்கள் இருக்குமிடம் வந்து விட்டாள் கல்யாணி. இருவருமே அவளைக் கவனிக்கவில்லை.

''ராமச்சந்திரா!''

தம்பதிகள் திரும்பி நோக்கினர்.

'' நீங்கள் இருவரும் இங்கிருந்து உடனே சென்று விடுங்கள்'' என்று குரல் அடைக்கக் கூறினாள் கல்யாணி.

''என்ன? இங்கிருந்து போய் விடுவதா?''

'' நீங்கள் போகா விட்டால்கூடப் பரவாயில்லை. ஆனால் அப்பாவின் எதிரில் வராதீர்கள். அவர் குருதட்சிணை வேண்டுமென்று கேட்டால் கொடுக்காதீர்கள்!''

''கல்யாணி, ஏன் உன் புத்தி மாறிவிட்டது? எனக்குக் கிடைத்த புகழ் அவருடையது. அவருக்கு நானாகவே காணிக்கை செலுத்த வேண்டும். அப்படியிருக்கும் போது அவராகக் குருதட்சிணை கேட்டு விட்டால் அதை என்னால் மீற முடியாது. என் உயிரையும் அவர் காலடிகளில் செலுத்துவேன்.''

பானுமதிக்கு எல்லாம் புரியாத புதிராக இருந்தது. ராமச்சந்திரனை தன் பிடிவாதத்தை விடவில்லை. நிராசையுடன் திரும்பினாள் கல்யாணி. ராமச்சந்திரன் மனத்திலும் பானுமதியின் உள்ளத்திலும் இனம் தெரியாத அச்சம் எழுந்தது.

பொழுது புலர்ந்தவுடன் தன் புது மனைவியுடன் ராமச்சந்திரன் அச்சத்துடனே உள்ளே நுழைந்தான். முதல் நாள் இருந்த குதூகலம் இப்பொழுது காணப்படவில்லை.

இருவரையும் பார்த்ததும் தத்தாத்ரேயர் தலையைத் திருப்பிக் கொண்டார்.

'' குருதேவா, நமஸ்கரிக்கிறோம். தங்களுக்குச் செய்தி அனுப்பவும் நேரமில்லாமல் போய் விட்டது. சிறு வயது முதல் என் மாமன் மகளாக இருந்த இவள், இன்று என் கைப் பிடித்துச் சுக துக்கங்களில் பங்கெடுக்க வந்திருக்கிறாள். தங்கள் ஆசிகளைக் கோரி நிற்கிறோம்'' என்று ராமச்சந்திரன் நடுக்கத்துடன் கூறினான்.

தத்தாத்ரேயர் பானுமதியை ஒருமுறை நோக்கினார். மங்களப் பொருள்களுடன், நன்கு வாழும் மலர்ச்சியுடன் எழில் தோற்றமாக அவள் நின்றிருந்தாள். அவர் மகள் நிற்க வேண்டிய இடத்தில் பானுமதியைப் பார்த்ததும் அவர் சினம் மீண்டும் தலை தூக்கியது. ''ராமச்சந்திரா! குருவுக்குக் குருதக்ஷிணை செலுத்த வேண்டும் என்பது தெரியாதா?''

'' காத்திருக்கிறேன், குருநாதா!''

'' அப்பா!'' என்று இடையில் ஓடிவந்தாள் கல்யாணி. '' அப்பா, என்மீது ஆணை...''

'' நீ சும்மா இரு. கல்யாணி! ராமச்சந்திரா, நான் எது கேட்டாலும் நீ கொடுப்பாயல்லவா?'' என்றார்.

'' சுவாமி! தங்கள் சித்தம் என் பாக்கியம்.''

'' குருதக்ஷிணை மூலம் உன் மனைவியை என் வீட்டுக்கு அடிமையாக்கிவிட வேண்டும். அவள் இங்கு வேலைக்காரி. என் உத்தரவின்றி அவள் நகரக் கூடாது.''

இவ் வார்த்தைகள் பேரிடியாக மூவர் தலையிலும் விழுந்தன.

ஆவேசத்துடன் எழுந்தாள் கல்யாணி. "ராமச்சந்திரா! நடப்பது நடக்கட்டும். பானுவை அழைத்துக் கொண்டு நீங்கள் சென்றுவிடுங்கள். பானு இங்கு வேலைசெய்ய வேண்டிய அவசியமில்லை."

"கல்யாணி! இது குருதக்ஷிணை. இக் கட்டளையை மீறினால் நீ போற்றும் சங்கீதம் பயன்படாது" என்று குரோதத்துடன் கூறித் தத்தாத்ரேயர் வெளியே சென்று விட்டார்.

"ஜெகதம்பிகே!" என்று அலறியவாறு கீழே விழுந்து விட்டாள் கல்யாணி. பானுமதி ஓடிச்சென்று அவளைப் பிடித்துக்கொண்டாள்.

"அக்கா! கணவருக்கு இடப்பட்ட கட்டளையை நான் ஏற்கத் தயாராகவே இருக்கிறேன். சங்கீத ஐசுவரியத்தைத் தந்தவர் உங்கள் தந்தை. அவருக்குச் சேவை செய்வதில் தவறு ஏது? மனைவி கணவரின் பாதி அம்சம். அதனால் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் என் நாதனுக்கு நான் உதவி புரிய வேண்டியவள்தானே?" என்று கண்ணீரிடையே கூறினாள் பானு.

"பானு!" அவளை அணைத்துக் கொண்டாள் கல்யாணி. ராமச்சந்திரன் வேரற்ற மரமாகக் கீழே சாய்ந்தான்.

பானுமதி உள்ளம் நைந்து உருகித் தவித்தாள். ஆயினும் அவளிடம் ஒரு அமைதி நிலவியது. கணவரின் புகழுக்குப் பங்கம் வராமலிருந்ததே என்று!

கல்யாணியோ சதா கண்ணீர் உகுத்தாள். பானுமதியின் வேலைகளைத் தானே செய்வாள். ராமச்சந்திரன் வரும் நேரத்தில் அவனுடன் பேச அவளுக்குச் சந்தர்ப்பமளிப்பாள். ஆயினும் பயந்து பயந்து சந்திக்கும் சந்திப்பு ருசிக்குமா? தன் காரணமாக இவ்வளவும் நேர்ந்து விட்டதே என்று உருகி விட்டாள் கல்யாணி. தத்தாத்ரேயர் எவ்வளவு வற்புறுத்தியும் அவள் விவாகம் செய்து கொள்வதற்கு மறுத்து விட்டாள்.

ராமச்சந்திரன் மனத்துக்குச் சாந்தி தந்தவள் அன்னை காவேரி ஒருத்தியே. மனத்துக்குச் சாந்தியைத் தேடி அங்கு சென்று விட்டால் அவன் குரலோடு லயித்துப் பாடுவான்; தன் துயரை மறப்பான்.

நாளாக ஆகக் கல்யாணி உள்ளத் துயரைத் தாங்க முடியாமல் படுக்கையில் விழுந்து விட்டாள். பானுமதி தவித்து விட்டாள். ஒரே முனைக்குப் போட்டியிட்ட இரு உள்ளங்களும் வடக்கும் தெற்குமாக நில்லாமல், பிணைந்து நின்றன. அவ்வீட்டிலேயே இருந்ததன் காரணமாகத் தத்தாத்ரேயரின் கோபம் பானுமதிக்குச் சற்றுப் புரிந்தது. கல்யாணியின் மீது அவளுக்குக் கருணை பிறந்தது. கணவர் ஒப்புக் கொண்டால் இருவரையும் பிணைக்கவும் அவள் தயாராகி விட்டாள். ஆயினும் கணவரிடம் எப்படிக் கூறுவது?

கல்யாணி படுத்ததும் ராமச்சந்திரனும் பயந்து விட்டான். அருகில் இருந்து மருந்து கொடுத்தான். அவனுடன் எதிர் நின்று பேசவே தத்தாத்ரேயருக்கு இப்பொழுது துணிவு வரவில்லை. வீட்டில் இருந்த அம் மூவரின் மனமும் தத்தாத்ரேயரின் உள்ளத்தைக் கலக்கியது. பழி வாங்கும் எண்ணத்தில் அவருக்கு வெற்றியே ஒரு தோல்வியாக முடியும் போலிருந்தது.

அந்திம நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கல்யாணி ராமச்சந்திரனை அருகில் வரும்படி சைகை காட்டினாள்.

"ராமச்சந்திரா! அடுத்த ஜன்மத்திலாவது..."

"கல்யாணி! சில நாட்களாகத்தான் உன் மனம் எனக்குப் புரிந்தது. என் கையிலேயே வளர்ந்த உன்னை என் சகோதரியாகப் பாவித்திருந்தேன். உன் உள்ளத்தைப் புரிந்துகொள்ளாத என்னை மன்னித்து விடு, கல்யாணி! கல்யாணி, மன்னிப்பாயா?" என்று உள்ளம் உருகக் கேட்டான் ராமச்சந்திரன்.

பானுமதி கண்ணீர் விட்டபடி கல்யாணியின் தலையைத் தன் மடியில் கிடத்தியிருந்தாள். தத்தாத்ரேயர் சோக பிம்பமாக அருகில் அமர்ந்திருந்தார்.

"அப்பா! உங்கள் மனம் கோணும்படி நான் நடந்து கொண்டதற்கு மன்னியுங்கள். மரணப் படுக்கையில் இருக்கும் உங்கள் மகளின் அந்திம விருப்பம் ஒன்றை மட்டும் நிறைவேற்றி விடுங்கள். பானுமதி உங்கள் மகள். அவளை வாழ விடுங்கள். இருவரும் இன்பமுடன் வாழும் போது நீங்கள் ஆனந்தம் அடையுங்கள். ராமச்சந்திரா, நான் போகிறேன். உங்கள் உள்ளத்தில் தீபச் சுடராகப் பிரகாசிக்கும் பானுவுக்குப் போட்டியாக நான் வர விரும்பவில்லை. உங்கள் பிம்பம் என் மனத்தில் என்றென்றும் அழியா அமரத்துவம் பெற 'பஞ்சநதீசுவரர்' எனக்குச் சக்தி அளித்துவிட்டார். அதுவே எனக்குப் போதும். பானு...நான்...போ...கி...றேன்!"

அமரத்துவம் அடைந்து விட்டாள் கல்யாணி. பானுவும் ராமச்சந்திரனும் அலறித் துடித்தனர்.

* * *


வீடு சூன்யமாகி வெறிச்சோடிவிடவே தத்தாத்ரேயர் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ சென்றுவிட்டார். இமயமலைச் சாரலில் ஒரு வயோதிகர் பாடிக் கொண்டு திரிவதாகக் கூறினர் ஜனங்கள்.

அரசர் அவையில் இன்னும் கச்சேரிகள் நடந்தன. அரசர் ராமச்சந்திரனுக்குச் சன்மானம் கொடுக்க வந்தபோது அவன், "அரசே! இச் சன்மானத்தை என் கையில் அளிக்காமல் நீங்களே சேமித்து வையுங்கள். எனக்கும், என் இல்லாளுக்கும் காவிரித் தாயின் தெள்ளிய நீர் போதும். அவள் கரையில் ஒரு குடிசை போதும். இச் சன்மானப் பணத்தில் என் குருநாதர் வசித்த இடத்தில் அவர் நினைவாகப் பெரிய கட்டடம் எழுப்புங்கள். அவர் மகளின் நினைவாக 'கல்யாண மஹால்' என்று பெயரிடுங்கள். அவர்களுக்கு இது நான் செலுத்தும் கடமையாக இருக்கட்டும்" என்று கூறி விட்டான்.

காவிரிக் கரையில் நாள்தோறும் இசை எழுப்பியதை மக்கள் கேட்டனர். தன்னை நேசித்துப் பல கஷ்டங்களை அனுபவித்த கல்யாணிக்கு ராமச்சந்திரன் அளித்த காணிக்கையாகத் திருவையாற்றில் 'கல்யாணமஹால்' இருக்கிறது. சரபோஜி அரசரால் கட்டுவிக்கப்பட்டது என்று மக்கள் கூறுகின்றனர்.

திடீரென வரும் விருந்தாளிகளுக்கு...





...இணையற்ற விருந்து

மிட்சலின்

கிஸான் பானங்கள் ❋

ஆரஞ்சு ஸ்க்வாஷ் - லெமன் ஸ்க்வாஷ் - லெமன் பார்லி - ஆரஞ்சு பார்லி - மாம்பழ ஸ்க்வாஷ் கிரேப் புரூட் ஸ்க்வாஷ் - லைம்ஜூஸ் கார்டியல்.

இவ்வினிய பழரஸ பானங்களை என்ன விருப்பமுடன் விருந்தாளிகள் ரஸிக்கின்றனர் என்பதை நீங்களே பார்க்கலாம். வருஷம் முழுவதும் உபயோகிக்கத் தகுந்த உன்னதமான பானங்கள் இவை. உங்கள் குடும்பத்திற்கும் உகந்ததொரு விருந்து. பிரதி ஞாயிற்றுக் கிழமையும் இவ்வினிய பானங்களை அருந்தத் தவறாதீர்கள்.



என்றும் வீட்டிலொரு பாட்டில் இருக்கட்டும்

❋ பழம், காய்கறி பொருள்கள், தயாரிப்பில், இந்திய சர்க்காரால் நடத்தப்பட்ட இரண்டாவது அகில இந்தியப் போட்டியில் கிஸான் ஸ்க்வாஷ்கள் முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் பெற்றன.

MP 548a

கிஸான் பிராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்.

தேனூர் வள்ளி



இன்னிசையோடு ஆனந்தமாக ஓடிக் கொண்டிருந்தது பொருனை நதி. பொதிய மலையின் மெல்லிய பூங்காற்று கொஞ்சி விளையாடுவதால் எழும் சின்னஞ்சிறு அலைகள் தேனூர்க் கரையோரத்துப் படிக்கட்டுகளில் மோதி மோதி உடைந்து அந்தி வெய்யிலில் நவரத்தினங்களாய்ச் சிதறிக்கொண்டிருந்தன.

தேனூர்க் கரையிலுள்ள முக்குறுணிப் பிள்ளையார் மீது குடைபோல் படர்ந்து நிழல் கொடுத்துக் கொண்டிருக்க காட்டு மல்லிகை மரம் தென்றலின் சிலுசிலுப்பில் கூடை கூடையாக மலர்களைப் பிள்ளையார் மீது கொட்டிக் கொண்டு நின்றது. அடர்த்தியாக வளர்ந்திருந்த மல்லிகை மரத்தின் மீது ஜோடியாக இரண்டு கிளிகள் உட்கார்ந்து கொண்டு 'கிக்கீ குக்கூ' பாஷையில் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தன.

''தடங்'' என்ற சத்தத்துடன் பிள்ளையார் அருகில் தோளில் மாட்டியிருந்த தபால் பையைப் போட்டு விட்டு 'அப்பா' என்று பெருமூச்சு விட்டான் தபால்காரன் தர்மலிங்கம். தேனூர் அஞ்சல் நிலையத்திலிருந்து புறப்பட்டு, ஏழு வீதிகளையும் சுற்றிவிட்டு மாலையில் ஆற்றுக்கு அக்கரையில் தெரியும் மணற்கரை, செங்குறிச்சி ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் சென்று கடிதங்களைப் பட்டுவாடா செய்வது தர்மலிங்கத்தின் பணி. தேனூருக்கு அவன் புதிது. வந்த இரண்டு மாதங்களாக நேராக ஆற்றிலே இறங்கி மணற் கரைக்குச் சென்று கடிதங்களைப் பட்டுவாடா செய்துவிட்டுப் பம்பரம்போல் ஆபீசுக்கு வந்து 'ரிட்டர்ன்' கொடுத்துவிட்டு வீட்டுக்குச் சென்று விடுவான். வீடென்பது அவன் குடியிருந்த ஒரு சிறு ஹோட்டல் மாடி அறைதான். முதலில் இப்படி ஒரு பழைய பாடாவதி கிராமத்தில் வேலை பார்க்கவே அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. வாலிப வயது. சினிமா, நாடகம் என்று பார்த்துப் பரவசமடைய ஆசை கொள்ளும் மனம்.

என்றைக்கு இந்த ஊரைவிட்டுமாற்றிக் கொண்டு பாளையங் கோட்டை ஊருக்குப் போகலாம் என்று நாளை எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று அவனது மனநிலை மாறி விடவேண்டிய ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதுதான் வள்ளியின் சந்திப்பு.

''வள்ளி, மணற்கரை'' என்ற விலாசத்துக்கு முப்பது ரூபாய் மணியார்டர் வந்தது. ஊருக்கே புதிதான தர்மலிங்கம் கையிலே இந்த மணியார்டரை வைத்துக் கொண்டுமணற்கரை முழுதும் விசாரித்தான்.

விலாசம் தெரியவில்லை. அனுப்பியவர், ''மாணிக்கம்,பம்பாய்'' வீட்டு நம்பர், தெருப் பெயர், தகப்பனார் பெயர் என்று எல்லாமாவது எழுதியிருந்தால் தயங்காமல் தர்மலிங்கம் பட்டு வாடா செய்ய முடியும். இப்படி இரண்டே எழுத்துக்களில் ''வள்ளி, மணற்கரை'' என்று இருந்தால் பாவம், அவன் என்ன செய்வான்? வள்ளி என்ற பெயரில் ஐந்து பெண்கள் இருந்தார்கள். மாணிக்கம் என்று இந்த ஐந்து பேர்களில் யாருக்கும் உறவினர் பம்பாயில் கிடையாது. நான்கு நாட்கள் தர்மலிங்கம் விசாரித்தான். ஐந்தாவது நாள் 'சரியான விலாசம் இல்லாததால் திருப்பப்பட்டது' என்று எழுதி அனுப்பியவருக்கு இந்த மணியார்டரைத் திருப்பி யனுப்பி விடும்படி போஸ்ட் மாஸ்டரிடம் கொடுத்து விட்டான் தர்மலிங்கம்.

மணியார்டர் திரும்பிப்போன மறுதினம், இந்த முக்குறுணிப் பிள்ளையார் கோவில் பக்கம் வந்தான் தர்மலிங்கம். பிள்ளையாரின் முன்னிலையில் ஒரு பெண் உட்கார்ந்து கைகூப்பிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். தர்மலிங்கம் வருவதை அவள் கவனிக்கவில்லை. கண்களை மூடிக்கொண்டு பக்தியுடன் நெஞ்சு விம்ம, உள்ளத்துத் துயரங்களை யெல்லாம் பிள்ளையார்முன் சமர்ப்பித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

''ஐயனே! பிள்ளையாரப்பனே! இனி என்னால் இந்தத் துன்பங்களைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது! என் அண்ணன் என்றைக்கு வருவார்? எங்கே யிருக்கிறார்? என் தாய் தந்தையர் இறந்து போனதுபோல் அவரும் போய் விட்டாரோ?...இங்கே என் சித்தப்பா வீட்டில் அடிமை வேலை செய்யும் படியா என் தலையில் எழுதிவிட்டீர்? சித்தியின் கூரிய சொல்லம்புகள் என்னைச் சித்திரவதை செய்கின்றனவே....எப்படியாவது என் அண்ணனை என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடும். உமக்கு ஐந்நூறு கொழுக்கட்டைகள் செய்து படைக்கிறேன். அண்ணா இன்னும் ஒரு வாரத்துக்குள் வரவில்லையென்றால் இந்த இடத்திலேயே உமது முன்பாகவே இந்த வள்ளியின் உயிர் துடிதுடித்துப் பிரியும்'' என்று கண்ணீர் பொலபொலவென்று உதிர வேண்டிக் கொண்டாள்.



இந்த 'வள்ளி' என்ற வார்த்தைகள் தர்மலிங்கத்தைத் தூக்கிவாரிப் போட்டன. இவள் ஆறாவது வள்ளியா?...இவள்தான் ஒருவேளை மணியார்டருக்கு உரியவளோ?

''அம்மா!'' என்றான் தர்மலிங்கம். திடுக்கிட்டுத் திரும்பிய வள்ளியின் சோகம் நிறைந்த முகத்தில் நாணமும் திகிலும் வேகமாய்ப் பின்னிப் படர்ந்தன.

''அம்மா! உங்கள் பெயர் வள்ளியா?... உங்களுக்குப் பம்பாயில் மாணிக்கம் என்று யாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்டான் தர்மலிங்கம்.

''ஐயா! மாணிக்க முதலியார் என்னுடைய அண்ணன்தான். எனக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா? வெகு நாட்களாக என்னை விட்டு எங்கோ போய்விட்ட என் அண்ணனைப் பற்றி ஒருவிதத் தகவலும் கிடைக்காமல் தவிக்கிறேன், ஐயா!'' என்றாள் வள்ளி. அவளது காந்தக் கயல் விழிகளில் கண்ணீர் நிரம்பிப் பொங்கியது.

தர்மலிங்கம் மனம் துடிதுடித்துப் போனான்.

''உங்கள் வீடு எங்கே யிருக்கிறது?'' என்று கேட்டான் தர்மலிங்கம்.

''ஐயா! என் சித்தப்பாதான் சொக்கலிங்க முதலியார் - மணற்கரை கிராமத்தில் பலசரக்கு மளிகை வைத்திருக்கிறார்..'' என்றாள்.

''பலசரக்கு மளிகை சொக்கலிங்க முதலியார் வீட்டிலேயா நீ இருக்கிறாய்...அடாடா.. எந்த எந்த மூலை முடுக்குகளிலே யெல்லாம் உன்னைப் பற்றி விசாரித்தேன்...தெரியாமல் போய் விட்டதே! நேற்றுத்தானம்மா உன் அண்ணனிடமிருந்து ஒரு முப்பது ரூபாய் உன் பெயருக்கு மணியார்டர் வந்ததை விலாசம் தெரியவில்லை என்று திருப்பி அனுப்பி விட்டேன்'' என்றான் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்.

''எனக்கா? மணியார்டரா? என் அண்ணனிடமிருந்தா?'' வியப்பினால் சிவந்த செந்தாமரை முகத்தின் கருவண்டு போன்ற கண்கள் விரியக் கேட்டாள் வள்ளி.

பதில் ஒன்றும் சொல்ல முடியாமல் திகைத்து நின்றான் தர்மலிங்கம்.

''கடிதம் ஏதாவது வந்திருக்கிறதா எனக்கு?'' என்று கேட்டாள் வள்ளி.

'''மணியார்டர்கூப்பனில் இன்னும் இரண்டு மாதங்களில் வருகிறேன்' என்று எழுதியிருந்தது. அந்த மணியார்டர் திருப்பப்படாமல் இருந்தாலும் இருக்கலாம். அப்படியானால் நீ அதிர்ஷ்டசாலிதான். பார்த்து விட்டு வருகிறேன்'' என்றான் தர்மலிங்கம்.

''எனக்குப் பணம் கூட அவசியமில்லை. அண்ணாவின் விலாசம் தெரிந்தால் போதும். உங்களுக்குப் புண்ணியமுண்டு. விரைவாய்ப் போய்ப் பாருங்கள்'' என்றாள் வள்ளி.

தர்மலிங்கம் அதி வேகமாய் ஆபீசுக்குப் போனான். நல்ல வேளை! அந்த மணியார்டர் அன்றைய 'மெயிலி'ல் போகவில்லை. மறு நாள்தான் போக இருந்தது. ''கண்டேன் 'கரைக்டான' வள்ளியை, தாருங்கள் மணியார்டரை'' என்று போஸ்ட்மாஸ்டரிடம்



மணியார்டரைப் பெற்றுக் கொண்டு மணற்கரையை நோக்கி நடந்தான் தர்மலிங்கம். பிள்ளையார் முன்பு அவன் வரவை வழிமேல் விழி வைத்துக் காத்து நின்ற வள்ளி, தூரத்தில் தர்மலிங்கம் வருவதைக் கண்டதும், ஆவலுடன் எதிரே ஓடோடியும் வந்தாள். அண்ணனின் மணி மணியான கையெழுத்தைப் 'பார'த்தில் கண்டதும் கண்களில் ஒற்றிக் கொண்டாள். '' அண்ணா ! நீங்கள் வந்து விடுவீர்களா ? ஆகா ! என் பாக்கியமே பாக்கியம். இனி இவர்களது சூழ்ச்சி என்னை ஒன்றுமே செய்ய முடியாது..'' என்று துள்ளிக் குதித்தாள். அவளது கையெழுத்தை மணியார்டர் பாரத்தில் வாங்கிக் கொண்டு கூப்பனைக் கிழித்து, அதோடு பணத்தையும் கொடுக்கும்போது தர்மலிங்கத்துக்கு எங்கோ கனவு உலகில் இன்பப் படகில் சஞ்சரிப்பது போலிருந்தது.

வள்ளி பிள்ளையார் முன்பு விரைவாக ஓடினாள். முப்பது ரூபாயையும் துண்டுச் சீட்டையும் அவர் பாதத்தில் வைத்தாள். தரையில் விழுந்து கும்பிட்டாள். '' பிள்ளையார் அப்பனே ! உன் கருணையே கருணை ! என் அண்ணனின் விலாசத்தைக் கொண்டு வந்து கொடுத்தாய். அதே போல் அந்த ஓநாய் பழனிச்சாமி முதலியிடமிருந்தும் என்னைக் காப்பாற்று ஐயனே. இந்த முப்பது ரூபாயையும் உனக்குக் கொழுக்கட்டைகளாகவே சமர்ப்பிக்கிறேன் '' என்று வேண்டிக் கொண்டாள். கல்லுப் பிள்ளையார் மௌனமாகவே இருந்தார். ஆனால் அருகே நின்று கொண்டிருந்த தர்மலிங்கத்துக்கு மௌனமாக நிற்க முடியவில்லை.

'' அம்மா !..எனக்கும் நாலு கொழுக்கட்டைகள் கொடுப்பாயல்லவா ! பிள்ளையாருக்குப் படைக்கும்போது என் நினைவும் இருக்கட்டும் '' என்றான். அருகில் ஒரு மனிதன் நிற்பதை அடியோடு மறந்து உணர்ச்சி வயப்பட்டுவிட்ட வள்ளி நன்றி பொங்கும் கண்களுடன், '' ஐயா ! மன்னிக்கவும். உங்கள் உதவியை என்றென்றைக்கும் மறக்க மாட்டேன் '' என்றாள்.

'' யாரோ ஓநாய் என்றாயே. எந்தப் புண்ணியவானுக்கு அப்படிப் பட்டம் சூட்டினாய் ?'' என்றான் தர்மலிங்கம்.

'' என் வேதனைக் கதையைக் கேட்டு அனுதாபப்படைய வேண்டாம், ஐயா ! தாயை இழந்த அனாதை நான். சித்தப்பாவின் வீட்டில் சொல்லொணாத் துயர வாழ்வு நடத்துகிறேன். பழனிச்சாமி என்ற சிவன் கோவில் தர்மகர்த்தாவை உங்களுக்குத் தெரியுமல்லவா ?'' என்றாள்.

'' ஆமாம். அந்த வழுக்கைத்தலைக் கிழவர் ரொம்ப நல்லவராச்சே. தங்கப் பல் கட்டியிருக்கிறாரே. அவர் தானே ?'' என்று கேட்டான் தர்மலிங்கம்.

'' தங்கப் பல் மட்டும் கட்டவில்லை. தங்கத் தாலியையும் செய்து வைத்துக் கொண்டு பெண் தேடி அலைகிறார். நான்காவது கல்யாணத்துக்கு. பத்தாயிரம் ரூபாய்கள் ரொக்கமாகக் கொடுக்கவும் தயாராயிருக்கிறார். பணத்தாசை கொண்ட என் சித்தி அவருக்கு என்னைப் பலியிடத் திட்டமிட்டிருக்கிறாள் '' என்று சொல்லும்போதே வள்ளியின் கண்கள் பெருக்கெடுத்தன.

'' அநியாயம், அக்கிரமம், சவு இரக்கமில்லாத கொடுமை '' என்று பரிதாபத்துடன் கூறினான் தர்மலிங்கம். அவன் கண்களின் வேதனைத் துடிப்பை வள்ளியின் கண்கள் கூர்ந்து கவனித்தன.

'' வேலை வேலையென்று ஊரெல்லாம் அலைந்து பார்த்தான் என் அண்ணன். வேலை கிடைக்கவில்லை. ஒருநாள் அண்ணன் பசியோடு சாப்பிட உட்கார்ந்தபோது 'உனக்குத் தண்டச் சோறு போடமாட்டேன்' என்று சித்தி கடுகடுப்புடன் பேசினாள். அண்ணன் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு ஓடினவன் இந்த மூன்று வருஷங்களாக எங்கேயிருக்கிறான் என்றே தெரியாது. இன்று உங்கள் உதவியால் அவன் பம்பாயில் இருப்பது தெரிந்தது எனக்கு. போன உயிர் மீண்டும் வந்து விட்டது போலிருக்கிறது. மாணிக்கம், 31, போர்டர் காலனி, பம்பாய் 17 என்ற இந்த மணியார்டரில் குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு எழுதினால் போதுமல்லவா?'' என்று கேட்டாள் வள்ளி.


'' கட்டாயம் போய் விடும்.''

' எனக்கு அண்ணனிடமிருந்து ஏதாவது கடிதம் வந்தால் என் சித்தப்பாவிடம் கொடுத்துவிடாதீர்கள். என்னிடம் தாருங்கள். நான் இந்தப் பிள்ளையார் கோவில் பக்கம் மாலை நேரம் தாங்கள் கடிதம் கொண்டு வருகிறீர்களா என்று காத்திருந்து வாங்கிக் கொள்கிறேன் '' என்றாள் வள்ளி.

இந்த விண்ணப்பம் தர்மலிங்கத்துக்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுத்து விட்டது. தினமும் அந்த எழில் ஓவியத்தைக் காண இது ஒரு வாய்ப்பல்லவா......?

ஒரு வாரம் சென்றது. ஏமெட்டுக் கடிதங்களைக் கோவில் தேவஸ்தான ஆபீஸின் ஜன்னல் வழியே போடுவதற்குப் போனபோது உள்ளே தர்மகர்த்தா பழனிச்சாமியும் வள்ளியின் சித்தப்பா சொக்கலிங்கமும் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொள்வதைத் தர்மலிங்கம் கவனித்தான்.

'' இந்த ஆயிரம் ரூபாயை இப்போது எடுத்துக் கொள்ளுங்கள். வெள்ளிக் கிழமை காலை



''ஏழைகளை யெல்லாம் பணக்காரர்களாக ஆக்கச் சர்க்கார் திட்டமிட்டிருக்காங்களே, பார்த்தீங்களா?''

''ஆமா, அவர்களுக்கும் பணம் வேண்டியிருக்கு. அதனாலே ஏழைகளையும் பணக்காரர்களாக்கினால்தானே அவுங்க பணத்தையும் வரி போட்டு வசூலிக்கலாம்!''

யில் கார் கொண்டு வருவேன். நீங்களும் பெண்ணும் உங்கள் குடும்பத்தினரும் தயாராயிருக்க வேண்டியது. வேறு யாருக்குமே தெரிய வேண்டாம். திருக்குற்றாலத்துக் கோயிலில் கல்யாணம் முடித்துக் கொண்டு என் வீட்டுக்கே எல்லாரும் போய் விடலாம். விவாகம் முடிந்ததும் ஆயிரம் ரூபாய் உங்கள் கையில் தந்து விடுவேன்'' என்று வாக்களித்தார் தர்மகர்த்தா.

வாயெல்லாம் பல்லாக அகல விரித்த மேல் துண்டில் ஒரு கட்டு நோட்டுக்களையும் வாங்கிக் கட்டிக் கொண்டு, ''உங்கள் உத்தரவு எப்படியோ அப்படியே இரகசியமாய் நடந்து கொள்கிறேன். பெண்ணிடம் கூட இப்போது ஒன்றும் சொல்லாமல் 'குற்றாலம் சீஸனு'க்குப் போவதுபோல் அழைத்து வந்து விடுகிறேன்'' என்றார் சொக்கலிங்கம்.

தர்மலிங்கத்தின் நெஞ்சு 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. 'இந்த வஞ்சகப் புலிகளின் வலையிலிருந்து வள்ளி என்ற புள்ளி மானை மீட்டுத்தர வேண்டியது உனது கடமை' என்று அவனுடைய உள்மனம் அடித்துச் சொல்லிற்று.

தர்மலிங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். பம்பாயிலிருக்கும் வள்ளியின் அண்ணனை உடனே இந்த மணற்கரைக்கு வரவழைத்துவிட வேண்டும். அவன் வந்து விட்டால் சொக்கலிங்கத்தின் பொன் ஆசைக்கும் பழனிச்சாமியின் பெண்ணாசைக்கும் முடிவு கண்டுவிடலாம் என்று கருதினான். 'உன் தங்கை வள்ளி ஆபத்தான நிலையில் இருக்கிறாள். உடனே புறப்பட்டு வரவும்' என்று ஒரு தந்தியைத் தானாகவே பம்பாய்க்குக் கொடுத்தான் தர்மலிங்கம். தந்தி கொடுத்துள்ள விவரத்தை யாருக்குமே அவன் தெரிவிக்கவில்லை.

வள்ளியின் திருமணத்துக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன. மனம் சோர்ந்து போய், நடைப் பிணம் போலத் தேனூர் ரயில் நிலையத்தில் கடிதங்களைப் பட்டுவாடா செய்து கொண்டிருந்த தர்மலிங்கத்திடம் ரயிலிலிருந்து இறங்கிய ஒரு நெட்டையான மனிதன் ஓடி வந்து, ''ஐயா! நீங்கள்தானே தர்மலிங்கம்?'' என்றான்.

வந்தவனைக் கூர்ந்து கவனித்த தர்மலிங்கம் அவனை அடையாளம் கண்டு கொண்டு, ''நீ நெல்லை ஜங்ஷன் ராம விலாஸ் ஓட்டல் கந்தசாமியில்லையா? ஏய், நீ எனக்குப் பரிமாறின ருசியான சாப்பாடும் பூப்போன்ற இட்டிலியும் இன்னும் என் நினைவிலேயே இருக்கின்றன. அப்பா, இந்தப் பட்டிக்காட்டிலெல்லாம் நல்ல ஹோட்டலும் கிடையாது. உன்னைப் போல் உள்ளன்போடு உபசரிக்கும் 'சர்வரும்' கிடையாது'' என்றான் தர்மலிங்கம்.

''நீங்கள் இப்போது இங்கேதான் வேலை பார்க்கிறீர்களா?'' என்று கேட்டான் கந்தசாமி.

''ஆமாம், அப்பா! இந்தத் தேனூர் போஸ்ட் மேனாக வந்து இரண்டு மாதமாகிறது...நீ எங்கேயிருக்கிறாய். ராமவிலாஸ் ஹோட்டலில் தானே?'' என்று கேட்டான் தர்மலிங்கம்.

''இல்லீங்க, ராமவிலாசை விட்டுப் போய் ஒரு வருஷம் ஆச்சு. அப்புறம் எங்கெல்லாமோ சுற்றியலைந்து விட்டுக் கடைசியில் பம்பாயில் ஒரு சேட் கடையில் இருக்கிறேன்... இதுதான் என் சொந்த ஊர். என் சித்தப்பா சொக்கலிங்க முதலியார் இந்த ஊரில் பலசரக்கு மளிகை வைத்திருக்கிறார். என் தங்கைக்கு அபாயமென்று தந்தி வந்திருக்கிறது...பார்க்க வந்தேன்'' என்றான்.

''ஏய்! மாணிக்கம் என்று பெயரை மாற்றிக் கொண்டு விட்டாயோ, பம்பாய் போனதும்......? நீதானா பம்பாய் மாணிக்கம்—பயப்படாதே அப்பா. உன் தங்கை சௌக்கியமாயிருக்கிறாள்'' என்றான் தர்மலிங்கம்.

''என் உண்மையான பெயர் மாணிக்கம் தான். ஹோட்டலின் கந்தசாமி என்று பொய் சொல்லி வைத்தேன்......என் தங்கையைத் தெரியுமா சார் உங்களுக்கு? என்ன செய்கிறது அவளுக்கு?'' என்று மிகுந்த ஆவலுடன் கேட்டான்.

தர்மலிங்கம் ஆதியிலிருந்து எல்லா விவரங்களும் சொல்லி, ''எப்படியும் இந்தக் கிழவன் கையில் கிளி போன்ற வள்ளியைப் பிடித்துக் கொடுக்காதே. இதுதான் என்னால் சொல்ல முடியும்'' என்று முடித்தான்.

''சார்! உங்கள் உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?'' என்றான் மாணிக்கம்.

* * *

புயல், பூகம்பம், எரிமலை, பேய் மழை எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து தோன்றினால் எப்படி இருக்குமோ அப்படி யிருந்தது சொக்கலிங்க முதலியாரின் வீடு அன்றைக்கு. ''உனக்கும் உன் தங்கைக்கும் சோறு போட்டுப் போட்டு எங்களுக்குத் தலைக்கு மேலே கடன் வந்து விட்டது'' என்று கத்தினார் சித்தப்பா.

''அதற்குத்தான் என் அருமைத் தங்கையைச் சாகப்போகிற கிழவன் காலில் கட்டிவிட ரூபாய் அட்வான்ஸ் வாங்கினீரோ?'' என்று




பரதநாட்டியப் போட்டியில் நான் முதற் பரிசைப்
பெற்றேன்—போர்ன்-விடாவுக்கு எனது நன்றி!



நான் பரதநாட்டியக் கலையில் நன்கு திகழவேண்டுமென்ற ஆர்வத்துடன் நாட்டியம் பயின்றேன். ஆனால் பலஹீனத் தினால் நாட்டிய அப்பியாசம் செய்ய முடியாமல் சக்தியற்று இருந்தேன். சக்திக்கு தினமும் போர்ன்-விடா அருந்தும்படி எனது குரு சொன்னார். அப்படியே செய்ய விரைவில் முன்னைவிட அதிக சக்தியையும் பலத்தையும் அடையப் பெற்று தினமும் வெகு நேரம் நாட்டிய அப்பியாசம் செய்ய இயன்றது. பின்னர் நாட்டிய விழாவில் போட்டி விட்டு முதற்பரிசைப் பெற்றேன். போர்ன்-விடாவுக்கு எனது நன்றி. அதிக சக்திக்கும் பலத்திற்கும் தினமும் போர்ன்-விடா அருந்துங்கள்.





கனல் பறக்கக் கேட்டான் மாணிக்கம். பிறகு ''புறப்படு, வள்ளி! இனி இந்த வீட்டில் ஒரு நிமிஷம்கூட இருக்கவே கூடாது'' என்று தங்கையைப் புறப்படச் சொன்னான்.

''அடேய்! உனக்கு இத்தனை தைரியம் வந்து விட்டதா? எங்கள் முகத்தில் விழியாமல் எங்கே யாவது தொலைந்து போங்கள்!'' என்று மிகுந்த கோபத்துடன் கையிலிருந்த டம்ளரை மாணிக்கத்தின் மீது வீசியெறிந்தார் சொக்கலிங்கம்.

ஆனால் பாவம், அந்த டம்ளர் அந்நேரத்தில் அந்த வீட்டினுள் நுழைந்த தபால்காரன் தர்மலிங்கத்தின் நெற்றியில் போய் 'டங்'கென்று பட்டுக் கீழே உருண்டது. தர்மலிங்கத்தின் நெற்றியில் குபுகுபுவென்று இரத்தம் பெருகி அவன் அணிந்திருந்த காக்கி உடைகளை யெல்லாம் செந்நிறமாக மாற்றி விட்டது.

''அட, பாவி! நீர் மனிதரு. வெறி கொண்ட மிருகமா? அநியாயமாய் இவரைக் காயப்படுத்தி விட்டீரே. இப்போது என்ன நடக்கிறது, பார்-'டூட்டி'யிலிருக்கிற சர்க்கார் ஊழியரைக் காயப்படுத்திய குற்றத்துக்காக நீர் ஜெயிலுக்குப் போகப்போகிறீர். இன்னும் சில விநாடிகளில் போலீஸார் வருகிறார்கள் பார்'' என்று கர்ஜித்தான் மாணிக்கம்.

புயல் ஓய்ந்ததும் அமைதி நிலவுமல்லவா? அந்த வீட்டில் அப்போது அப்படி அமைதி குடி கொண்டு விட்டது. யாரும் எதுவும் பேசவில்லை. பயமும் திகிலும் குடி கொண்டு விட்டன......தர்மலிங்கம் போலீசுக்கு ரிப்போர்ட் அனுப்பிவிடக் கூடாதே என்ற நினைப்பு எல்லாருடைய உள்ளத்திலும் தோன்றியது. கண்களைத் திறந்தும் திறவாமலும் வள்ளியின் ஸ்பரிசத்தில் இன்ப உலகத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்த தர்மலிங்கம் திடீரென்று மயக்கம் தெளிந்தவன் போல் எழுந்திருந்தான். அவனுக்குப் பளிச்சென்று ஏதோ தோன்றியது. கோபப் பார்வையைச் சொக்கலிங்க முதலியார் மீது வீசிவிட்டு வேகமாகத் தபால் நிலையத்தை நோக்கி நடந்தான் தர்மலிங்கம்.

அதேசமயம் இனி இந்த வீட்டிலே தனக்கு வேலையில்லை என்று வள்ளியை அழைத்துக் கொண்டு வெளியேறினான் மாணிக்கம்.

அன்று மாலையில் போஸ்ட்மாஸ்டர் கையோடு அழைத்துவரச் சொன்னதாக ஒரு சேவகன் வந்து சொக்கலிங்க முதலியாரை அழைத்துச் சென்றான். ''அவரைச் சும்மா விடமாட்டார்கள். கேஸ் போடுவார்கள்''



சென்னையில் பிரசித்தி வாய்ந்த ''சௌந்தர்யா 'நர்சரி''யின் சொந்தக்காரரான திரு பி. எஸ். சந்திரமௌலி நந்தவனக் கலையில் விசேஷ உயர் படிப்புக்காக காலிபோர்னியாவிலுள்ள பெரிய தொரு ஸ்தாபனத்தின் அழைப்பின் பேரில் சென்ற ஏப்ரல் 20ந் தேதி அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார்.

என்று அக்கம்பக்கத்துப் பெண்கள் எல்லாரும் பேசிக் கொண்டனர்.

அன்பே உருவானவர் தேனூர் போஸ்ட்மாஸ்டர். ஆத்திரமும் கோபமும் கொண்டு வருகிறவர்கள் கூட அவரது அருள் பார்வையால் சாந்தமடைந்து விடுவார்கள். அன்று சொக்கலிங்க முதலியார் வந்து நின்றதும், போஸ்ட்மாஸ்டர் இனிய வார்த்தைகளால் அவர் நெஞ்சோடு உறவாடுவார் என்று சொக்கலிங்கமே எதிர்பார்க்கவில்லை.

''ஐயா! நீங்கள் இன்று தர்மலிங்கத்தைக் காயப்படுத்திய குற்றத்துக்காக உம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதும் உம்மை ஜெயிலுக்கு அனுப்புவதும் என் கடமை. ஆனால் அப்படி நான் செய்வதைத் தர்மலிங்கம் விரும்பவில்லை. ஏன் தெரியுமா? மாணிக்கம் அவனது நண்பன். நண்பனின் சித்தப்பா என்ற முறையில் உம்மையும் ஒன்றும் செய்யாமல் விடுகிறோம்...'' என்றார்.

சொக்கலிங்க முதலியார் நன்றி பெருகும் கண்களுடன் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். அப்போது அவரிடம் போஸ்ட்மாஸ்டர் சொன்னார்: ''உங்கள் பெண் வள்ளியைப் பெரிய பணக்கார இடத்தில் கல்யாணம் செய்து கொடுப்பதாகக் கேள்விப் பட்டேன். பழனிச்சாமிக்கு லட்சத்துக்கு மேல் ஆஸ்தி இருக்கும்'' என்றார்.

''அப்படி ஒன்றுமில்லையே? கல்யாணப் பேச்சே கிடையாதே'' என்றார் சொக்கலிங்கம்.

''இல்லீங்க, சார்! வள்ளியின் கல்யாணத்தை நான் தீர்மானித்து விட்டேன், சார்! அடுத்த வெள்ளிக்கிழமை அவள் கல்யாணத்தை நடத்தி வைத்து விட்டுத்தான் நான் பம்பாய் போக வேண்டும். இதோ நிற்கிறாரே, இந்த ஆசாமிதான் மாப்பிள்ளை'' என்று தர்மலிங்கத்தைச் சுட்டிக் காட்டினான் அந்தச் சமயம் அங்கே வந்த மாணிக்கம்.

அடுத்த வெள்ளிக் கிழமை முக்குறுணிப் பிள்ளையார் முன் புதுத்தம்பதிகளாய் வள்ளியும் தர்மலிங்கமும் ஆயிரம் கொழுக்கட்டைகளைப் படைத்து வணங்கினர்.

''வள்ளி! அன்று மணியார்டரைக் கொடுத்தபோது, எனக்கும் பிள்ளையாரோடு சேர்த்துக் கொழுக்கட்டை தருவதாக ஒப்புக் கொண்டாயே; நினைவிருக்கிறதா?'' என்று குறும்புத்தனமாகக் கேட்டான் தர்மலிங்கம்.

''உங்களுக்குத்தான் என்னையே கொடுத்து விட்டேனே, அத்தான்!'' என்று சொல்லிச் சிரித்தாள் அந்தக் குறும்புக்காரப் பெண்.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.



பாண்ட்ஸ்

ட்ரீம்ப்ளவர் டால்க்

உபயோகித்தால்
நாள் முழுவதும்
புத்துணர்ச்சியுடனும்
நறுமணத்துடனும்
இருக்கலாம்

மிகுந்த சுகமூட்டுவதும், நறுமணம் வாய்ந்ததுமான பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்தால், நீங்கள் கொடிய வெப்பத்திலும், புழுக்கமான நாட்களிலும்கூட இனிய உணர்ச்சியுடன் இருக்கலாம். மென்மையான இந்த டால்கம் பவுடரை உடம்பில் தூவிக்கொண்டால், எரிச்சலூட்டும் வியர்வைத் தொல்லை ஒழியும். நாள் முழுவதும் புதுமலரைப்போல் இனிய புதுமையுடன் இருக்க பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்

சேஸ்ப்ரோ-பாண்டஸ் இன்கார்ப்பரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

